பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/- மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 06 புதன்கிழமை (21.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 002

அரச காணிகளையும் சட்ட ரீதியாக கையகப்படுத்த

# திரைமறைவில் திட்டங்களை முன்னெடுக்கிறது இராணுவம்

## வடக்கு முதலமைச்சர் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

வடக்கில் பொதுமக்களின் பெருமளவிலான காணிகளை இராணுவம் அபகரித்து வைத்துள்ள நிலையில் அரச காணிகளையும் சட்ட ரீதியாக தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு திரைமறைவில் பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எச்சரித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில்

## சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்

(கொழும்பு)

போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேணடும் என அரசாங்கத்துக்கு நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாலோசனைச் செயலணி பரிந்துரை செய்துள்ளது.

செயலணியின் மக்கள் கருத்தறியும் குழுவினால் தயாரிக்கப்பட்ட 500 பக்கங்களைக்கொண்ட அறிக்கை

23ஆம் பக்கம் பார்க்க....

## காணி, பொலிஸ் அதிகாரத்தை கையிலெடுக்க வேண்டும் விக்கி

### தவராசா வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் காணி, பொலிஸ் அதிகாரத்தை கையிலெடுக்க வேண்டுமெனவடக்குமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

நேற்றுநடைபெற்றமாகாண சபையின் அமர்வில் முதலமைச்சர் அமைச்சு மீதான விவாதத்தின் போதே அவர்

23ஆம் பக்கம் பார்க்க....

## விபத்தில் சிக்கி இளைஞன் பலி!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இராணுவத்தில் கடமையாற்றிய ஓட்டுசுட்டான்

23ஆம் பக்கம் பார்க்க....

நெடுந்தீவில்

## 7 இந்திய மீனவர்கள் நேற்று கைது

(நெடுந்தீவு)

நெடுந்தீவின் வடமேற்கு பகுதியில், இலங்கை கடல் எல்லைக்குள் மீன்பிடியில் ஈடுபட்ட 7 இந்திய மீனவர்கள், நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர்.

23ஆம் பக்கம் பார்க்க....

## புனர்வாழ்வுக்கு நிதி ஒதுக்கவில்லை அரசு மீது முதலமைச்சர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண புனர்வாழ்வு மற்றும் மகளிர் விவகாரத்திற்கு மத்திய அரசு 2017 இற்கு எந்த நிதியையும் ஒதுக்கவில்லை என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்குமாகாணசபையின் வரவு - செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்திற்கான அமர்வு நேற்றையதினம் நடைபெற்றது. இதன் போது தனது அமைச்சின் அடுத்த வருட திட்டங்கள் தொடர்பில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

வடமாகாணத்தில் முக்கியமான துறைகளில் ஒன்றாக புனர்வாழ்வுமுள்ளது. ஆனால் 2017ஆம் ஆண்டிற்காக இத்துறைக்கு நிதி ஒதுக்கப்படவில்லை.

23ஆம் பக்கம் பார்க்க....

ஜனாதிபதி – பிரதமர் இணக்கம்

## மயிலிட்டி துறைமுக விடுவிப்புடன் மீள்குடியேற்றம் நிறைவு பெறும்

### மாவை எம்.பி. நம்பிக்கை



(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி துறைமுகமும் அதனை அண்டிய பிரதேசமும் விடுவித்தால் மாத்திரமே வலி.வடக்கு மீள்குடியேற்றம் நிறைவு பெறும் என்ற எமது கருத்தை ஏற்று

23ஆம் பக்கம் பார்க்க....

## 15,510 கிலோ அரிசி அன்பளிப்பாக வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் உள்ள 4 நலன்புரி முகாம்களில் உள்ளகுடும்பங்களுக்குவேலட் பூட் நிறுவனத்தினால் 15 ஆயிரத்து 510 கிலோக்கிராம் அரிசி அன்பளிப்பாக நேற்றையதினம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில்கோணாபுலம் முகாமில் உள்ள 108

23ஆம் பக்கம் பார்க்க....

## ஊழல், மோசடி முறைகேடுகளால் அரசியல் கட்சிகள் மீது வெறுப்புணர்வு

### மக்களின் மனநிலையை வெளிப்படுத்திய மைத்திரி



(கொழும்பு)

கடந்த பல தசாப்தங்களில் சில உள்ளூராட்சி நிறுவன அரசியல்வாதிகள் ஊழல், மோசடி, முறைகேடுகளை மேற்கொண்டு அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதன் காரணமாக அவர்களது அரசியல் கட்சிகளும் பிரதிநிதித்

23ஆம் பக்கம் பார்க்க....

தமிழ் – முஸ்லிம்

## இணைந்து போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே ஒன்றுமையை ஏற்படுத்த மத்திய அரசு வரத்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஆட்சி மாற்றம் வெறும் வதந்தி

### சீனாவுடன் பேசவில்லை – பீரிஸ்



(கொழும்பு)

இலங்கையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பாக, சீனாவுடன் கூட்டு எதிரணி பேச்சு நடத்தியுள்ளதாக வெளியாகும் செய்திகள் வெறும் வதந்தியே என்று பொதுஜன முன்னணியின் தலைவர் பேராசிரியர்

23ஆம் பக்கம் பார்க்க....

## “தூய தமிழ்”

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் அரசியலமைப்பில் மாகாண சபையின்பதவிப்பெயர்கள்பொருத்தமற்ற பதத்தில் காணப்படுகின்றது. 23ஆம் பக்கம் பார்க்க....

### சஷி வெல்கம விளக்கமறியலில்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையின் முன்னாள் தலைவரான சஷி வெல்கம

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதியின் உயிருக்கு ஆபத்து

### ஆரூட கணிப்பு தவறு

(கொழும்பு) ஜனாபதிபதி மைத்திரிபால சிறிசேன 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் 23ஆம் பக்கம் பார்க்க....

## இளைஞன் கொலை சகோதரர்கள் கைது

(கரணவாய்)

தும்பளைப் பகுதியில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சகோதரர்களை தாம் கைது செய்ததாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 8.00 மணியளவில் சிவகுமார் சுவர்ணன் (வயது-20) என்ற இளைஞன் சகோதரனின் கத்திக்குத்தில் பலியானார்.

இடைப்படையில் மரணமடைந்த இளைஞனின் சகோதரர் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (இ-30,60)

## பெண்ணை வெட்டிக்கொன்ற கொள்ளையன் கைதானான்

(கரணவாய்)

குடத்தனைப் பகுதியில் வயோதிபப் பெண் ஒருவரை வெட்டிக்கொலை செய்து அவர் அணிந்திருந்த தங்க நகைகளைக் கொள்ளையிட்ட கொள்ளையனைத் தாம் கைது செய்துள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொற்பதி, குடத்தனைப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு

23ஆம் பக்கம் பார்க்க....

## நெல்சிப் ஊழல்; விரைவான சட்ட நடவடிக்கை வேண்டும்

### வடக்கு உறுப்பினர்கள் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

நெல்சிப் திட்டத்தில் ஊழல புரிந்தார்கள் என வடக்கு மாகாண சபையின் விசாரணைக்குழு கண்டறிந்தவர்கள் இப்போதும் உயர் பதவிகளில் உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள், அதில் ஒரு சிலர் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளனர் எனவும் சுட்டிக்காட்டி, அவர்கள் தொடர்பில் விரைவான சட்ட

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## காணி விற்பனைக்கு

கொக்குவில் பொற்பதி வீதியில் 10 பரப்புடன் கூடிய குடியிருப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

**தொடர்புகட்கு: விஜயகுமார்**

**0772347456**

(இ-6815)


## சிகிச்சை பலனின்றி இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாய மடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தி யசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞன் ஒருவன் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

இதில் சுதுமலை தெற்கினைச் சேர்ந்த விமலேஸ்வரன் சுரேஷ் (வயது 19) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

முன்னுக்குப் பின்னாக வந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து மோதுண்ட திலேயே மேற்படி விபத்து இடம்பெற்றுள் ளது. இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணியளவில் மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது. சடலம் பிரேத பரிசோதனையின பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர்.(இ-30)


உலகெங்குமுள்ள உறவு களுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- உடு புடைவைகள்
- CD,VCD க்கள் அனுப்ப

நாட வேண்டிய ஒரே இடம்

பதிமுருகன் தொலைத்தொடர்பகம்

303.கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

T.P.No : 021 222 5392

(C-6778)



# DCM

| யாழ் நகர் | சுன்னாகம் |
|---|---|

**A/L 2019**

**கலை, வர்த்தகம் தொழில்நுட்பம்**

**ஆரம்பம்: ஜனவரி 07 காலை 9 மணிக்கு**

(இ-6817)


## யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து) ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்-2017

**காலம்:-05.02.2017 ஞாயிற்றுக்கிழமை**

**இடம்:-கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்,**

**தலைமை:-திரு.செ.ஜெயக்குமார் அவர்கள் (சங்கத் தலைவர்)**

மேற்படி சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 05.02.2017 அன்று நடாத்த தீர்மானித்திருப்பதனால் அங்கத்தவர் பிரேரணைகள் இருப்பின் தங்கள் பிரேரணைகளை 05.01.2017 வியாழக்கிழமைக்கு முன் கிடைக்கக் கூடியதாக சங்கக் காரியாலய முகவரிக்கு செயலாளர் என அனுப்பி வைக்கவும். அத்துடன் அங்கத்தவர்கள் பிள்ளைகள் 2016ஆம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சை, பல்கலைக்கழக அனுமதி பெற்றிருப் பின் அவற்றின் விபரங்களினையும் சங்கக் காரியாலயத்தில் ஒப்படைக் குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (இ-6805)

செயலாளர்
க.செல்வச்சந்திரன்

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தம்பி மகேஸ்வரி (தங்கம்)



இந்திரம்மன் கோவிலடி துன்னாலை கரவெட்டியை பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மகேஸ் வரி நேற்று (20.12.2016) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியையா-அம்மிப் பிள்ளையின் அன்பு மகளும், தாமு-மீனாட்சிப்பிள்ளையின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், இரஞ்சினி, ரகுநாதன் (கனடா), ரஞ்சன் (கனடா), பாஸ்கரன் (கனடா), சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் தயாநிதி (கனடா), பாலமுருகாம்பிகை (அம்பிகா) (கனடா), சுமதி (கனடா), ஜெயச் சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்க ளான நவரட்ணசிங்கம், அழகரத்தினம், ஞானபூங்கோதை, சின்ன மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுகந்தி, சுதர்சன் (கனடா), சுமணன், சுதர்சினி, பிரியதர்சினி (கனடா), ஜனார்த்தனி (கனடா), நவீனா (கனடா), தரணியா (கனடா), தனுசா (கனடா), குணாளன், கஜீவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சஞ்சயன், சன்சிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.12.2016) காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று கியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவ ருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:-
குடும்பத்தினர்

இந்திரம்மன் கோவிலடி,
துன்னாலை, கரவெட்டி. (இ-6816)

தொ.இல:-021 205 6754

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் தங்கவேலு கமலாதேவி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியின் விரிவுரையாளரும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை கல்விமாணி பட்டநெறி விரிவுரையாளருமாகிய திருமதி ஜெயலக்சுமி உதயகுமார் அவர்களின் அன்புச் சகோதரி அமரர் தங்கவேலு கமலாதேவி அவர்கள் 19.12.2016 அன்று இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இணைப்பாளர், விரிவுரையாளர்கள், மாணவர்கள்**

**(கலைமாணி பட்ட கற்கை நெறி கோப்பாய்)**

## பதின்னான்காம் ஆண்டு பக்தி மலர் காணிக்கை



### திருமதி தம்பு செல்லமுத்து (தம்பு ரீச்சர்)

(ஓய்வுபெற்ற கனிஷ்ட அதிபர், யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)

பிறப்பு:-29.04.1940
இறப்பு:-26.12.2002

திதி:-21.12.2016

ஒன்றல்ல இரண்டல்ல பதின்னான்கு ஆண்டுகளாய்
ஆயிரம் ஆயிரம் கவிசொன்னோம்
பெற்றவளே உன்பெருமை சொல்லித்தான் முடியுமா!
எங்கள் குடும்பத்தில் வந்து தித்த குலமகளே-அம்மா!
அன்பாய் அமைதியாய் பண்பாய் பாசமாய்
இணையில்லா வாழ்வு வாழ்ந்து-இன்று
எங்களுடன் இல்லாமல் ஆத்மாவாய் சென்றீர்களே
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்-அம்மா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"திருவேரகம்"
அல்லாரை, மீசாலை.

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவுகள்

(7164)

# லசந்த படுகொலை வழக்கு தொடர்பில் முன்னாள் இராணுவத் தளபதியிடம் இரண்டரை மணிநேரம் விசாரணை

(கொழும்பு)

**ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை வழக்குத் தொடர்பில் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரியவிடம் நேற்று முன்தினம் குற்ற விசாரணைப் பிரிவினரால் இரண்டரை மணிநேரம் விசாரணை நடத்தப்பட்டது.**



2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி லசந்த விக்கிரமதுங்க, ரத்மலானை அத்திட்டிய பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்திருந்தார். இந்தச் சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் ஜகத் ஜயசூரிய வன்னி கட்டளைத் தளபதியாக கடமையாற்றியிருந்தார்.

இந்தக் கொலை தொடர்பில் ஏற்கனவே இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட 17 படையினரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

படைத் தளபதியாக கடமையாற்றிய காலத்தில் லசந்த கொலை குறித்த விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டதா? என ஜகத் ஜயசூரியவிடம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது. ஜெனரல் ஜகத் ஜயசூரிய தற்போது பிரேஸில் நாட்டுக்கான தூதுவராக கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

## ஜனாதிபதிக்கு சர்வதேச விருது



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சர்வதேச விருது ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

சிறுநீரக நோய்களுக்காக விசேட வைத்திய நிபுணர்களின் சர்வதேச அமைப்பினால் ஜனாதிபதிக்கு சிறப்பு இவ்விருது ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சிறுநீரக நோயைத் தடுக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட நடவடிக்கையை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு காலி முகத்திடல் ஹோட்டலில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற நிகழ்வில் ஜனாதிபதிக்கு இந்த சிறப்பு விருது வழங்கப்பட்டுள்ளது.

சிறுநீரக நோய்களுக்காக விசேட வைத்திய நிபுணர்களின் சர்வதேச அமைப்பின் தலைவர் பேராசிரியர் Adeera Levin என்பவரினால், இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இதன் போது இலங்கையில் சிறுநீரக நோயை தடுப்பதற்கு உதவிய வைத்தியர்கள் உட்பட அதிகாரிகளுக்கு ஜனாதிபதியினால் விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.(இ-3-10)

## நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கின் அரசதரப்பு சாட்சியாளருக்கு பிணை மறுப்பு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை வழக்கின் முதலாவது சாட்சியாளரான பிரீத்திவிராஜ் தாக்கல் செய்திருந்த பிணை மனுவை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

குறித்த சாட்சியாளருக்கு பிணை வழங்குமாறு அவரின் சட்டத்தரணி நேற்று முன்தினம் விசேட ஜூரிகள் முன்னிலையில் கோரிக்கையை விடுத்திருந்தார்.

இருப்பினும் குறித்த மனுவை பரிசீலனை செய்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் மணிலால் வைத்தியதிலக்க அதனை நேற்று நிராகரித்துள்ளார்.

ரவிராஜ் கொலை வழக்கின் சந்தேக நபராக முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் பிரீத்திவிராஜ் முதலில் பெயரிடப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னர் சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட நிபந்தனை உடனான மன்னிப்பின் கீழ் அவர் அரச தரப்பு சாட்சியாளராக பெயரிடப்பட்டார்.

நடராஜா ரவிராஜ் கொலை வழக்கின் சந்தேக நபராக கைது செய்யப்பட்ட முன்னாள் கான்ஸ்டபிள் கடந்த 21 மாதங்களாக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி கொழும்பில் வைத்து படுகொலை செய்யப்பட்டார் எனபது குறிப்பிடத்தக்கது.(இ-3)

## பாடசாலைகளில் மதுஒழிப்பு பிரிவுகளை அமைக்க முடிபு

நாடளாவிய ரீதியாக உள்ள 3200 பாடசாலைகளில் மது ஒழிப்பு பிரிவுகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த தீர்மானம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு நடைமுறைப்படுத்தப்பட வுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியினால் இந்த செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக செயலணியின் பணிப்பாளர் சமந்த கித்தலவாராச்சி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

## தூதுவரின் மீது துப்பாக்கிப் பிரயோகம்! இலங்கை கண்டனம்

(கொழும்பு)

துருக்கிக்கான ரஷ்ய தூதுவர் அன்தோயி கர் லோவி மீது மேற்கொ ள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோக த்திற்கு இலங்கை கடும் கண்டனம் வெளியிட்டுள் ளது.

துருக்கியின் அங்காரா நகரில் வைத்தே இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும், Mevlut Mert Aydintas என்ற 22 வயதுடைய நபரே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்டுள்ளார் என இனங் காணப்பட்டுள்ளது.

மேலும், ரஷ்ய தூதுவர் அன்தோயி கர்லோவியை வைத்தியசாலையில் அனுமதித்ததை அடுத்து உயிரிழந்துள்ளார்.

ரஷ்ய தூதுவர் அன்தோயி கர்லோவி மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திற்கு வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மகிஷினி கொலன்னே கடுமையான கண்டனம் தெரிவித்து ள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர், தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் கணக்கிலேயே இந்த தகவலை பதிவேற்றம் செய்துள்ளார். (இ-3-10)

## நாடு முகம்கொடுக்கவுள்ள வரட்சிக்கு தயாராகுங்கள்

### பிரதமர் பணிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் நாடு எதிர்கொள்ளவுள்ளதாக கூறப்படும் கடுமையான வரட்சி நிலைமைக்கு முகம்கொடுக்க தற்பொழுதிலிருந்தே திட்டமிடுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த வறட்சி நிலைமை நாட்டில் சுமார் 40 நாட்களுக்கு நீடிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை முகம்கொடுப்பதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அரசாங்கத்தின் திட்டம் குறித்து, எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரினால் அறிவிப்புச் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அனர்த்த நிலைமைக்கு முகம் கொடுக்க விசேட செயலணியொன்றை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், இந்த வரட்சியினால் மக்களின் சாதாரண வாழ்க்கைக்கு தடைகள் வராத வண்ணம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார். (இ-3-10)

## இலங்கையின் 69வது சுதந்திர தின தொனிப்பொருள் "தேசிய ஒற்றுமை"

(கொழும்பு)

இலங்கையின் 69 ஆவது சுதந்திர தினத்தை "தேசிய ஒற்றுமை" எனும் தொனிப் பொருளில் கொண்டாடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2017 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கையின் 69ஆவது சுதந்திர தினம் ஆகும். இந்த தினத்தை கோலாகலமாக கொண்டாடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான விசேட பேச்சுவார்த்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெற்றது.

69ஆவது சுதந்திர தின நிகழ்வானது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணைத் தலைமையில் கொழும்பு காலி முகத்திடலில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் விருந்தினர்களாக வெளிநாட்டுத்தலைவர்களும அழைக்கப்படவுள்ளனர் என தெரியவருகிறது. (இ-3-10)

## விடுமுறை இரத்துச் செய்யப்பட்ட நிலையிலும் பணிப் பகிஷ்கரிப்பு

தபால் திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களுக்கும், நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 48 மணித்தியாலங்களுக்கு பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாக, ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை அமைப்பாளர் எஸ்.எச். காரியவசம் தெரிவித்துள்ளார்.

சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட 14 கோரிக்கைகளை முன்னிறுத்தி தபால் ஊழியர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, தமது வேண்டுகோளுக்கு உரிய பதில் கிடைக்காவிடில் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் எஸ்.எச்.காரியவசம் தெரிவித்துள்ளார்.

எதுஎவ்வாறு இருப்பினும் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் இன்று நள்ளிரவு வரை தபால் திணைக்கள ஊழியர்கள் அனைவரதும் விடுமுறைகளை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக, தபால்மா அதிபர் ரோஹண அபேரத்ன தெரிவித்தார்.

எனினும், தமது தொழிற்சங்க நடவடிக்கைக்கு இதனால் பிரச்சினை இல்லை என எஸ்.எச்.காரியவசம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-3-10)

# இங்கிலாந்தை கலங்கடித்தார் ஜடேஜா சென்னை டெஸ்டிலும் வென்றது இந்தியா




இங்கிலாந்துக்கு எதிரான சென்னை டெஸ்டில் ஜடேஜா 'சுழலில்' மிரட்ட இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரை 4:0 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி அங்கு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது.

முதல் நான்கு போட்டிகள் முடிவில் இந்தியா 3:0 என தொடரை கைப்பற்றி இருந்தது. இந்நிலையில் ஐந்தாவது மற்றும் கடைசி டெஸ்ட் சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடந்தது.

போட்டியின நாணயசுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 477, இந்தியா 759 ('டிக்ளேர்') ஓட்டங்கள் எடுத்தன.

நேற்று நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில், இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 12 ஓட்டங்கள் எடுத்திருந்தது. குக் (3), ஜென்னிங்ஸ் (9) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**ஜடேஜா அசத்தல்**

நேற்று ஐந்தாவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. அணித் தலைவர் குக், ஜென்னிங்ஸ் ஜோடி நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இதனால், ஓட்ட எண்ணிக்கை சீராக உயர்ந்தது. பின் ஜடேஜா 'சுழலில்' அசத்தினார். இவரது பந்துவீச்சில் குக் (49), அரைசதம் அடித்த ஜென்னிங்ஸ் (54) சிக்கினர். ஜோ ரூட் (6) நிலைக்கவில்லை. பின் வந்த பேர்ஸ்டோவ் ஒரு ஓட்டத்தில் கிளம்பினார். ஜடேஜா பந்தில் மொயீன் அலி (44) ஆட்டமிழந்தார். ஸ்ரோக்ஸ் 23 ஓட்டங்கள் எடுத்தார். டாசன் டக்-அவுட்டானார். ரஷித் (2), பிரோட் (1) சொதப்ப, இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 207 ஓட்டங்களுக்கு சுருண்டு இன்னிங்ஸ் மற்றும் 75 ஓட்டங்களால் வீழ்ந்தது.

இந்தியா சார்பில் ஜடேஜா 48 ஓட்டங்களுக்கு7 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இதன் மூலம், இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 4:0 என்ற கணக்கில் கைப்பற்றியது (க)



---


## வணிகவாய்ப்பு

**இலங்கையின் முன்னணி மென்பொருள் நிறுவனத்தின் வியாபார தரகர்/முகவராக யாழ்ப்பாணத்தில் பணிபுரிய அரிய வாய்ப்பு.**
**இந்நிறுவனமானது கணக்கியலோடு சம்பந்தப்பட்ட மென்பொருளை சந்தைப்படுத்தல் மற்றும் அதனோடு இணைந்த சேவைகளில் 17 வருட அனுபவத்தை கொண்டுள்ளது.**
**கணக்கியல் மற்றும் மென்பொருளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும்** (C-6818)

தொடர்புகளுக்கு

**விஜயகுமார் - 071 430 1512 சதீஸ் - 077 265 9277**


# இடமாற்றத்தை மையப்படுத்தி ஆசிரியர்களை குழப்பாதீர்கள்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய இடமாற்றங்களைக் காட்டி ஆசிரியர்களை அங்கத்தவர்களாக்க ஆசிரியர் சங்கம் ஒன்று முயற்சிப்பதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா புவனேஸ்வரன் விடுத்த அறிக்கையில்,

ஏனைய மாகாணங்களில் இல்லாத அளவுக்கு வடக்கு மாகாணத்தில் ஆசிரிய இடமாற்றம் பெரும் பிரச்சனைக்குரிய விடயமாக மாறியுள்ளது. ஏனைய மாகாணங்களில் தேசிய இடமாற்றக் கொள்கையின்படி ஆசிரிய இடமாற்றங்கள் நடை பெறுகின்றன. ஆனால் வடக்கு மாகாணத்துக்கு என தனியான இடமாற்றக் கொள்கை அமுல்படுத்தப்படுகின்றது. இதனை வடமாகாண கல்வி அமைச்சு தயாரித்திருந்தது. இத்தகைய தயாரிப்பை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் புறக்கணித்த அதேவேளை மேற் குறித்த தொழிற்சங்கம் அதில் கலந்து கொண்டு அங்கீகாரம் வழங்கியது.

ஆனால் தற்போது அதில் தவறு இருப்பதாகவும் ஆசிரியர்களுக்கு அநீதி இழைப்பதாகவும் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்த ஆசிரியர்களை அழைத்து வட மாகாண இடமாற்றசபைக் கூட்டத்தில் வழங்கப்பட்ட பட்டியலைக்காட்டி "நீங்கள் எங்கள் சங்கத்தில் இணையுங்கள் உங்களுக்கு இடமாற்றம் பெற்றுத் தருகின்றோம்." என்றும் அதற்காக "போராட்டம் நடத்துவோம்" எனவும் கூறி ஆசிரியர்களிடம் இருந்து அங்கத்துவப் படிவங்களைப் பெற்றுள்ளது.

வடக்கு மாகாண இடமாற்ற சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட குறித்த ஆசிரிய சங்கத்தின் பிரதிநிதி இடமாற்ற பட்டியலில் கையொப்பம் இட்டுவிட்டு அந்தப்பட்டியலை ஆசிரியர்களிடம் காட்டி அங்கத்துவம் பெற்றுக்கொள்வது நாகரிகமற்ற செயலாகும். மாகாணக் கல்விப் பணிப்பாளரின் தலைமையில் நடைபெற்ற இடமாற்ற சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு உடன்பட்டு இடமாற்றத் தீர்மானத்துக்கு அங்கீகாரம் வழங்கிவிட்டு இவ்வாறு ஆசிரியர்களை அழைத்து அங்கத்தவராக்குவது முறையற்ற செயலாகும். இதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

தாபன விதிக்கோவையின் பிரகாரம் குறித்த பிராந்தியங்களில் பதினைந்து வீத அங்கத்துவம் உள்ள தொழிற்சங்கங்களே இடமாற்ற சபைகளில் பங்கேற்க முடியும். அத்தகைய நடைமுறைகளைப் பின் தள்ளி இடமாற்ற சபைகளில் பங்கேற்று இவ்வாறு ஆசிரியர்களை அங்கத்தவர்களாக ஆக்க முனையும் செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, வடமாகாணக் கல்வி அமைச்சிடமும் இது பற்றி முறைப்பாடு செய்துள்ளோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

---


# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 17 - 04 - 1977

ஆண்டவன் பிடியில் 21 - 12 - 2006



# ஜெகநாதன் சிவவதனி

(கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலய ஆசிரியை)

*அன்புக்கோர் உருவமாய் கருணைக்கோர் தெய்வமாய்*
*ஆற்றலுக்கோர் உத்தமியாய் பண்புக்கோர் இலக்கணமாய்*
*மனிதருள் மாணிக்கமாய் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து*
*எம்மையெல்லாம் வாழவைத்த தெய்வமே*
*ஆண்டுகள் பத்து சென்றாலும் நீங்காது உங்கள் நினைவுகள்*
*உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

(7107)

உடுவில் தெற்கு,
முருகமூர்த்தி கோயிலடி.

குடும்பத்தினர்



We Serve

## சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B1 க.பொ.த (சா.த)-2016 பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு

அண்மைக்காலமாக தமிழ் மொழி பேசும் மாணவர்கள் குறிப்பாக யாழ்ப்பாண மாணவர்கள் உயர்தரத்தில் விஞ்ஞான துறைக்கு செல்வது குறைந்து கொண்டே வருவது யாவரும் அறிந்ததே. இக்குறையைப் போக்கி விஞ்ஞான துறையை உயர் கல்வியில் தெரிவு செய்வதை ஊக்குவிக்கும் முகமாக யாழ். மாவட்டத்தில் முதல் கட்டமாக வடமராட்சி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கொன்றினை யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் கருத்துரைகளுடன் சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B1 நடாத்தவுள்ளது. இத்தகவல் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரூடாக பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பங்கு பற்றி பயனடைய க.பொ.த (சா/த)-2016 மாணவர்களை அழைக்கின்றோம்.

இடம் :- நெல்லியடி மத்திய கல்லூரி பிரதான மண்டபம்
காலம் :- 24.12.2016 காலை 9.00 தொடக்கம் 12.30 வரை

WHERE THERE'S A NEED THERE'S A LION

தொடர்புகளுக்கு:-

**லயன் க.கமலேஸ்வரன்**

மாவட்ட இணைப்பாளர் (தொழில் வழிகாட்டலும் தொழில் வங்கியும்)
சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B1
தொலைபேசி:-077 604 7195
lionkamales@gmail.com

(இ)

# பாதாள உலகக் குழுவினரின் செயற்பாடுகள் மகிந்த ஆட்சிக்காலத்தில் இருக்கவில்லை

## கெஹலிய எம்.பி. கூறுகிறார்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பாதாள உலகக்குழுவினரின் செயற்பாடுகள் இருக்கவில்லை எனவும், தற்போதைய அரசாங்கத்தில் இது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் தொடர் ந்தும் கருத்து தெரிவிக்கையில்.

மகிந்த ஆட்சிக்காலத்தில் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்ற பாதாள உலகக்குழுவினர் அனைவரும், நல்லாட்சியில் மீண்டும் நாட்டிற்கு படையெடுக்கின்றனர் .

முன்னைய ஆட்சிக் காலத்தில் இவை அனைத்தையும் அழித்து நாட்டையும் நாட்டு மக்களையும் காத்தவர் மகிந்தவே. ஆனால் தற்போது தலைதூக்கியுள்ள பாதாள உலகக் குழுவினருக்குப் பின்னால் இந்த அரசாங்கமே இருப்பதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும், அடக்குமுறைகளை கையாள்வதற்கு இராணுவத்தினரையும், பாதாள உலகக் குழுவினரையும் தற்போதைய அரசாங்கம் பயன்படுத்தி வருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (இ-3-10)


தில்லையம்பதியாள்துணை

பாராட்டி வாழ்த்துகின்றோம்



கலைஞானச்சுடர்

V.S.குமாரசுவாமி

நல்லூர் பிரதேச கலாசார பேரவையுடன் நல்லூர் பிரதேச கலாசார அதிகார சபையும் நல்லூர் பிரதேச செயலகமும் இணைந்து வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் அனுசரணையுடன் நடத்திய பண்பாட்டு பெருவிழா 2016 இல் கலைஞானச்சுடர் எனும் விருதினை பெற்ற திருவாளர் V.S. குமாரசாமி அவர்களை மனதார பாராட்டி வாழ்த்துவதோடு இன்னும் பல பட்டங்கள் பெற தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாளின் ஆசியை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர் :

கோண்டாவில் தில்லையம்பதி வாழ் மக்கள்.



குமரன் போட்டோ

டியிற்றல் போட்டோ வீடியோ



சகல மங்களகரமான நிகழ்வுகளையும் துல்லியமான முறையில் அதி நவீன கமரா மூலம் படம் பிடித்திடவும் டிஜிட்டல், Full HD, 4 K வீடியோவுக்கும் நவீன முறையில் அல்பம் டிசைன் செய்து கட்டுதல் சகல விதமான பிறேம்கள் மற்றும் உள்வெளி படப்பிடிப்பு கறுப்பு வெள்ளை படப்பிடிப்பு இவற்றுடன்

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்லைன் பாஸ்போர்ட் எடுக்கவும் நாடவேண்டிய இடம்



124, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(இலுப்பையடிச்சந்திக்கும் கந்தர்மடம் சந்திக்கும் இடையில்)

T.P :- 077 722 2601 / 021 222 4833

Kumaranphoto16@gmail.com


# இராசி பலன்

21.12.2016

(மார்கழி 06, புதன்கிழமை)

சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு

அட்டமி பின்னிரவு 12.23 மணிவரை

உத்தரம் முன்னிரவு 8.28 மணிவரை

சுபநேரம் 4.54-6.24 மணிவரை

இராகுகாலம் 12.24-1.54 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| செவ் கேது | கிரகநிலை | | |
| சுக் | சந்திராஷ்டமம் சதயம், பூரட்டாதி | | ராகு |
| சூரி | சனி புத | | குரு சந் |

**மீனம்**: களஸ்திர நன்மையுண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படலாம், புதிய பொருட் சேர்க்கைக்கு வித்திடுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**மேடம்**: ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**இடபம்**: புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**மிதுனம்**: தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பயணங்கள் பலன் தரும்.

**கும்பம்**: சிந்தித்து செயற்பட்டு சிறப்புகளைக் காண வேண்டிய நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, விரயங்கள் கூடும் நாள்.

**கடகம்**: நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், வியாபார விருத்தியுண்டு, பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள்.

**மகரம்**: நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மாற்றினத்தவர் மூலம் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**சிம்மம்**: குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பேச்சில் இனிமை தென்படும், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**தனுசு**: வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், தொழில் ரீதியாக முன்னேற்றம் கிடைக்கும்.

**விருச்சிகம்**: வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், விருந்தினர் வருகையுண்டு.

**துலாம்**: தேவையற்ற சஞ்சலங்களை தவிர்ப்பது நல்லது, புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், வேலைச் சுமை கூடும் நாள்.

**கன்னி**: ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், குடும்பத்தினரிடையே ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும்.








தமிழ்த் தேசத்தின் அங்கீகாரத்திற்காக நான்கு தசாப்தங்களுக்கு மேலாக உழைத்து மீளாத்துயிலில் உறங்கிக் கொண்டிருக்கும் தேசத்தின் குரல் அன்ரன் பாலசிங்கம் அவர்களின் 10ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கந்தர்மடத்திலுள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கட்சியின் அங்கத்தவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர். கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட பலர் இதில் உரையாற்றியிருந்தனர்.

# ஜனவரி முற்பகுதியில் ஆசிரியர் இடமாற்றம்

## இல்லையேல் பாரிய ஆர்ப்பாட்டம் இலங்.ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

வடமாகாண ஆசிரியர்களுக்கான இடமாற்றத்தினை ஜனவரிமுற்பகுதியில் வழங்காவிட்டால் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும் என இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரித்துள்ளது.

வடமாகாணத்தில் உள்ள வெளிமாவட்டங்களில் பல வருடங்கள் கடமையாற்றி இடமாற்றம் வழங்கப்படாத ஆசிரியர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் நாவலர் கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

அதன் போதே மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கருத்து தெரிவிக்கையில்,

வடமாகாணகல்விஅமைச்சினால் ஆசிரியர்களுக்கான இடமாற்றம் ஜனவரி முதல் அமுல்படுத்தப்படும் என அறிவித்துள்ள போதிலும் தற்போது பதிலீடுகள் இல்லாத காரணத்தால் அதை பிற்போடுவதற்கு தீர்மானித்துள்ளனர்.

பதிலீடுகள் இல்லை என்ற காரணத்தை நாம் ஏற்றுக் கொள்ள மாட்டோம். கடந்த இரண்டுமாதங்களுக்கு முன்னரே பதிலீடுகளை தயார் செய்யுமாறு வடமாகாண கல்வி அமைச்சர் செயலாளர்களுக்கு தெரிவித்திருந்தோம். அவர்கள் அதை செய்யவில்லை.

யாழ். மாவட்டத்தில் இருந்து கடந்த 7 வருடங்களுக்கு மேலாக வடமாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களில் கடமையாற்றி வரும் ஆசிரியர்களுக்கான இடமாற்றம் வழங்கப்படவில்லை.

பொதுவாக தீவக வலயத்தில் இருந்து 59 பேர், கிளிநொச்சி வலயத்தில் இருந்து 100 பேர், துணுக்காய் வலயத்தில் இருந்து 47 பேர், முல்லைத்தீவு வலயத்தில் இருந்து 28 பேர், மன்னார் வலயத்தில் இருந்து 5 பேர், மடு வலயத்தில் இருந்து 55 பேர், வவுனியா வடக்கு வலயத்தில் இருந்து 29 பேர், வவுனியா தெற்கில் இருந்து 21 பேருமாக மொத்தம் 344 ஆசிரியர்கள் யாழ்.மாவட்டத்துக்கு இடமாற்றம்பெற்று வரவிருக்கிறார்கள்.

ஆனால் யாழ்ப்பாணம் வலயத்தில் இருந்து 10 பேர், வலிகாமம் வலயத்தில் இருந்து 22 பேர், வடமராட்சி வலயத்தில் இருந்து 14 பேர், தென்மராட்சி வலயத்தில் இருந்து 7 பேருமாக மொத்தம் 53 பேர் யாழ். மாவட்டத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு இடமாற்றம்பெற்றுச்செல்ல இருக்கிறார்கள்.

இந்த விடயம் அதிகாரிகளுக்கு தெரியும். தெரிந்தும் அதற்குரிய நடவடிக்கை எடுக்காதுள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு யாழ். வலயத்தில் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இது முறையற்ற செயற்பாடு. அதையும் அதிகாரிகள் தான் செய்துள்ளார்கள். நாம் அதை ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

இடமாற்றம் ஒவ்வொரு வருடமும் வரும் பிரச்சினையாக உள்ளது. இதற்கு உறுதியான தீர்வு எடுப்பதற்கு வடமாகாண கல்வி அமைச்சிடம் சரியான திட்டமிடல் இல்லை.

முதலமைச்சரிடம் இது தொடர்பாக பேசியிருந்தோம். எமது பல பிரச்சினைகள் முதலமைச்சர் ஊடாகத்தான் தீர்க்கப்பட்டு வருகிறது. ஆனால் கல்வி அமைச்சர் நழுவிப்போகிறார். முதலமைச்சர் மீது எமக்கு நம்பிக்கை உள்ளது. எனவே தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம்.

எனவே ஆசிரியர்களுக்கான இடமாற்றம் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நடைபெறாது விட்டால் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் பாரிய தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்தனை



(யாழ்ப்பாணம்)

கடந்த சனிக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்ற பாரிய விபத்தில் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்திக்காகவும் இனிமேல்இவ்வாறானவிபத்து இடம்பெறாமல் இருக்க வேண்டியும் விபத்து இடம்பெற்ற பகுதியில் அமைதிப் பிரார்த்தனை இடம்பெற்றது. விபத்து இடம்பெற்ற சங்கத்தானைப் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள், பணியாளர்கள்மற்றும்ஆட்டோச் சாரதிகள் ஆகியோரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு ஆத்ம சாந்தி பிரார்த்தனை ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. இதன் போது விபத்து நடந்த பிரதான வீதி இளைஞர்களால் கழுவி சுத்தம் செய்யப்பட்டது. பின்னர் அவ்விடத்தில் மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு விபத்தில் இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் இனி மேல் இப்படியான விபத்துக்கள்நிகழாமல்இருக்க வேண்டியும் மௌன பிராத்தனையும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வீதியால் சென்ற பொதுமக்களும் கலந்து கொண்டிருந்தனர். (இ-89)

# தையல் பயிற்சிக்கு துணிகள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண கிராம அபிவிருத்தித்திணைக்களத்தின் கீழ் இயங்கும் மாதர் சங்கங்களினால் நடத்தப்படும்தையல் வகுப்புகளில் பயன்படுத்தப்படும் துணிகளை, உடுவில் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலகங்களுக்குட்பட்ட மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் தெல்லிப்பழை பிரதேச செயலக தையல்பயிற்சிநிலையத்தில் யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பஞ்சலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபனின் 2016ஆம் ஆண்டுக்கான மாகாணசபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சுமார் 75,000 ரூபா பெறுமதியான துணிகள் உடுவில் மற்றும் தெல்லிப்பழைபிரதேசசெயலகங்களைச் சேர்ந்த மாதர் கிராம அபிவிருத்திச்சங்க நிர்வாகிகளிடம் கையளிக்கப்பட்டன. (இ-89)





சரஸ்வதி முன்பள்ளியின் கலை விழா அண்மையில் இடம்பெற்ற போது...

## அர்த்தமற்ற ஏமாற்று அரசியலில் திசைமாறாது

# மக்கள் நலன்சார்ந்து செயற்பட அனைவரும் முன்வர வேண்டும்

## பேரவையின் இணைத் தலைவர் வைத்திய நிபுணர் லக்ஸ்மன் அழைப்பு

வார்த்தை விளையாட்டுகள் மூலம் செய்யப்படும் அர்த்தமற்ற ஏமாற்று அரசியலில் திசைமாறாது , அதை மக்கள் நலன்சார்ந்த அரசியலாக மாற்ற நாம் அனைவரும் முன்வர வேண்டும் என தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர்களில் ஒருவரான வைத்திய நிபுணர். பூ.லக்ஸ்மன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் முதலாம் ஆண்டு நிறைவு தின நிகழ்வு நேற்றைய தினம் யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

எந்தவித தனிப்பட்ட , சுய அரசியல் நலன்களை விடுத்து இனத்தின் நலனை மட்டும் இலக்காக கொண்டு நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து இயங்க வேண்டிய காலத்தின் தேவைப்பாட்டை உணர்ந்து தமிழ் மக்கள் பேரவை ஆரம்பிக்கப்பட்டது.

ஆயுதமோதல்களின் முடிவிற்கு பின்னரான சூழ்நிலையில் , எம் மத்தியில் நிலவிவந்த மற்றும் திட்டமிட்டே ஏற்படுத்தப்பட்ட குழப்பகரமான சூழ்நிலைகள், தேர்தல் அரசியலுக்கு அப்பாலான, இப்படியான , கொள்கைவழி ஒன்றிணைவு ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தி நின்றது.

எதிர்காலம் பற்றிய கேள்விக்குறியுடன் நின்றிருந்த மக்களுக்கு தமிழ் மக்கள் பேரவையின் தொடக்கமும் செயற்பாடுகளும் மிகுந்த நம்பிக்கையை கொடுத்திருக்கின்றன என்பது மக்களுடன் நிற்கும் அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு வெளிப்படையான விடயமாகும்.

அதே நேரம் மக்களின் இந்த எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் எமது கடப்பாடுகளையும் பொறுப்புகளையும் மேலும் உறுதிப்படுத்துகிறது.

மக்களின் நம்பிக்கைக்கு ஏற்றபடி, எமது இனத்தின் அபிலாசைகளை முன்னிறுத்தி, எமக்காக இழைக்கப்பட்ட அர்ப்பணிப்புகளை மனதில் கொண்டு, நாம் தொடர்ந்தும் மக்களுக்காக உழைப்போம்.

எமது அனைத்து செயற்பாடுகளும் எந்த ஒரு தனி மனிதருக்கோ அல்லது தனி அமைப்புகளுக்கோ சொந்தமானதல்ல. எவரும் அப்படி உரிமை கோருவதும் இல்லை . இவை அனைத்தும், எமது தேசத்தின் பெரினான அனைவரினதும் கூட்டுமுயற்சியே.

பேரவை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு மிகக்குறுகிய காலத்தினுள் , இலங்கை இனப்பிரச்சினையின் தீர்வு குறித்தான தமிழர் தரப்பு தீர்வு வரைபு ஒன்று, துறைசார்நிபுணர்களினால் உருவாக்கப்பட்டு, மக்கள் கலந்துரையாடல் மூலம் செழுமைப்படுத்தப்பட்டு முன்வைக்கப்பட்டது. இப்படியாக மக்கள் பங்களிப்புடன் கூடிய தீர்வுத்திட்டமொன்று முன்வைக்கப்பட்டது இது எமது வரலாற்றில் முதன்முறையாக நடந்த ஒருநிகழ்வாக பதியப்பட்டுள்ளது.

அதனையொட்டி "எழுக தமிழ்" பேரெழுச்சியாக யாழ்ப்பாணத்தில் கடந்த செப்டெம்பர் 24 அன்று வெளிப்பட்டிருந்தது. அது அரசியல் சார்ந்து உள்ளூர் மற்றும் சர்வதேச மட்டங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அதன் தொடர்ச்சியாக , எம் தேசத்தின் மிக முக்கிய பகுதியுமாகிய கிழக்கு மாகாணத்தில் "எழுக தமிழ்" எழுச்சி நிகழ்வு எதிர்வரும் ஜனவரி 21ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

அத்தோடு, எமது தேசத்தில் நடக்கவேண்டிய அபிவிருத்திப்பணிகள் , குறுகிய கால நலன்களுக்கும் அரசியல் இலாபங்களுக்கும் அப்பால், நீண்டகால நோக்குடன் தீர்மானிக்கப்படவேண்டும் என்ற நோக்கோடு பேரவையின் பொருண்மிய அபிவிருத்திக்குழு செயற்பட்டு வருகின்றது. இவை தவிர்ந்த கல்விக்குழு மற்றும் பொறுப்புக்கூறலுக்கான குழு என்பன விரைவில் தமது பணிகளை ஆரம்பிக்கும்.

இவற்றிற்கு மேலதிகமாக தமிழ் மக்களின் அரசியல் விருப்புக்களையும், எமது மண்ணில் நடந்த நடக்கும் அநீதிகளையும் உண்மைத்தன்மையுடன் தென்னிலங்கை மக்களுக்கு தெரிவித்ததன் மூலம், எமது பிரச்சினை மற்றும் அதற்கான நியாயமான தீர்வு குறித்து தென்னிலங்கை மக்களுடன் நேரடியான ஒரு உரையாடலை "வடக்கு தெற்கு மக்கள் கலந்துரையாடல்" எனும் தொனிப்பொருளில் ஆரம்பித்து வைத்துள்ளோம்.

இது 'பல்வேறு' மட்டங்களிலும் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளதுடன் , பேரவை மீதும் அதன் செயற்பாடுகள் மீதும் திட்டமிட்டு புனையப்பட்ட அவதூறுகளையும் பெருமளவில் களைந்துள்ளது .

மக்களுக்கான அரசியலை மேலும் மக்கள் மயப்படுத்தி, மக்களுடன் இறங்கி வேலை செய்வதில் , மிகுந்த போதாமை இருக்கின்றது என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

அத்தோடு, தாயகத்தில் செயற்படும் ஏனைய மக்கள் அமைப்புக்களையும் , பொது நோக்கில் , பொது வேலைத் திட்டத்தில் ஒன்றிணைக்கும் செயற்பாட்டைப்பொறுத்தவரையில் இன்னமும் பலபடிகள் முன்னேற வேண்டியிருக்கிறது.

அது போலவே, பேரவையில் பெண்பிரதிநிதித்துவத்தை அதிகரித்து ஒரு சமநிலைக்கு கொண்டுவர எடுத்த முயற்சிகளும் இன்னமும் பூரண வெற்றியைத்தரவில்லை.

தாயகத்தின் மக்கள் செயற்பாட்டாளர்கள் அனைவரும் பேரவையுடன் இணைந்து செயற்படமுன்வருவதன் மூலமாகவே இக்குறைபாடுகளை முற்றாக இல்லாமல் செய்ய முடியும்.

பேரவை செய்ய வேண்டிய செயற்பாடுகள் ஏராளம். இருப்பினும், இன்றைய அரசியல் சூழ்நிலையின் முக்கியத்துவம் கருதி, சில வேலைத் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

அந்தவகையில் புதிய அரசியலமைப்பு குறித்தும், எமது மக்களின் அபிலாசைகளின் அரசியல் விஞ்ஞானரீதியான நியாயப்பாடுகள் மற்றும் சாத்தியப்பாடுகள் குறித்தும் , எம் தாயகப்பகுதியெங்கும் கலந்துரையாடல்கள் நடத்தப்படவேண்டும். பேரவையின் தீர்வுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் மீண்டும் மக்கள் மத்தியில் பரவலாக ஆரம்பிக்கப்படவேண்டும்.

தாயகத்தின் மக்கள் அமைப்புக்கள் தொழிற்சங்கங்களை எமது மக்களின் நலன் எனும் பொது நோக்கில் ஒன்றிணைக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். எமது அபிலாசைகளை முன் வைத்து மக்கள் அணிதிரள்வுகளை தாயகமெங்கும் நடத்த வேண்டும்.

சர்வதேச அரங்குகளில் எமது பிரச்சினைக்கான நியாயமான தீர்வு, எது என்பது பற்றியும் , மக்களின் ஜனநாயக விருப்பு பற்றியும் நேர்மையுடன் வெளிப்படுத்த வேண்டும்.



இலங்கையின் அனைத்து சமூகங்களுடன் புரிந்துணர்வின் அடிப்படையில் எமது பிரச்சினைகளினதும் தீர்வுகளினதும் நியாயப்பாடுகள் குறித்த கலந்துரையாடல்கள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

இன்றைய சூழல், எமது இனத்தின் இத்தனைகால அர்ப்பணிப்புக்களும் மக்கள் எதிர்கொண்ட அத்தனை அவலங்களும் அர்த்தமிழந்து போகக்கூடிய வண்ணம் ,சூழ்நிலைகள் கட்டியமைக்கப்படுகின்றமை வெளிப்படையாக தெரிகின்றது.

வார்த்தைவிளையாட்டுகள் மூலம் செய்யப்படும் அர்த்தமற்ற ஏமாற்று அரசியலில் திசைமாறாது , அதை மக்கள் நலன்சார்ந்த அரசியலாக மாற்ற நாம் அனைவரும் முன்வர வேண்டும் .

இது எந்த ஒரு அமைப்புக்கோ அல்லது இனத்துக்கோ எதிரானதோ அல்லது எந்தஒரு அமைப்புக்கோ ஆதரவான கோரிக்கையோ அல்ல.

எமது இனத்தின் நீதிக்கான குரல். இவ்வளவு காலமும்நாம் கடந்து வந்த அர்ப்பணிப்புகளுக்கான குரல், காலம்காலமாக ஏமாற்றப்பட்டு வந்த எமது மக்களிற்கான குரல்.

இதில், நாம் அனைவரும், மனச்சாட்சியின்படி ஒன்றுபட்டு எமது மக்களின் நீதிக்காக ஒன்று சேர்ந்து உழைக்க முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 26 செவ் 4 இல்
c a u k ; 5 '7"
தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ் PR
தொ.இ: B/6636

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 16
உயரம்: 165cm
தகைமை/தொழில்:A/L/
அவுஸ்திரேலியா PR
தொ.இ: B/6637

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/6639

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 28
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BSc/
பொறியியலாளர் அவுஸ்ரேலியா
தொ.இ: B/6640

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 36 செவ் 12 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:BA/அரசதொழில்
தொ.இ:G/2913

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 24 சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L
தொ.இ:G/2921

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 49 செவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:BSc
தொ.இ: G/2923

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சுவாதி செவ் 2 இல்
உயரம்: 152cm
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: G/2931

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

### போரில் அவயவங்களை இழந்த

# முப்படையினருக்கு வழங்கப்படும் சலுகைகளை மாற்றுத் திறனாளிகளுக்கும் வழங்க வேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி.வலியுறுத்து

(குருமன்காடு)

யுத்தத்தை நடத்தி பல்வேறு அழிவுகளை ஏற்படுத்தியோர் குற்றத்தில் ஈடுபட்ட மற்றும் மனித உரிமைகளை மீறிய முப்படையினரில் உயிரிழந்தவர்களுக்கும் ஊனமுற்றவர்களுக்கும் விசேட கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

மறுபுறத்தில் பாதிக்கப்பட்ட குறிப்பிட்ட தமிழ் மக்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபா வீதம் கொடுக்கப்படுவதைத் தவிர தற்போதைய வரவு செலவுத்திட்டத்தினூடாகவும் வேறு கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.




புதிய அரசியல் யாப்பில் இலங்கையர்கள் என்ற சம அந்தஸ்து உறுதிப்படுத்தப்படும் என கூறப்படுகின்ற நிலையில் மாற்றுத் திறனாளிகளுக்கான விசேட ஏற்பாடுகளும் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் வவுனியா கனகராயன்குளம் மத்திய மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றும் போது தெரிவித்ததாவது,

கடந்த முப்பது வருடகால யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள், போராளிகள் உயிர்நீத்திருக்கிறார்கள். அவயவங்களை இழந்திருக்கிறார்கள். யுத்தம் முடிந்து 8 வருடங்கள் ஆகின்றன. இற்றை வரைக்கும் உயிர்நீத்தவர்களுக்கான நட்டஈடோ, ஊனமுற்றவர்களுக்கான நிரந்தர வாழ்வாதாரத்திற்கான கொடுப்பனவோ வழங்கப்படவில்லை.

யுத்தத்தில் அழிவுகளை ஏற்படுத்தியவர்களுக்கு ஒரு நீதியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு நீதியுமாக தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்ற இந்த அரசாங்கம் நடந்துகொள்வது மிகுந்த வேதனை அளிக்கிறது.

போரினால் தமது அவயவங்களை இழந்த ஒவ்வொருவருக்கும் முப்படையினருக்கு வழங்கப்படும் அதேவிதமான சலுகைகள் வழங்கப்படுவதுடன் மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வதேச சட்ட நடைமுறைகளுக்கு அமைவாக புதிய அரசியல் யாப்பில் அவர்கள் தொடர்பான விசேட சட்ட ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவேண்டும். வேலைவாய்ப்பு, கல்வி, வாழ்வாதாரம், மருத்துவம் போன்ற விடயங்களில் அவர்கள் தொடர்பில அதிகூடிய கவனம்செலுத்தப்பட வேண்டும் என்றார்.(2-250)

# சனசமூக நிலையத்திற்கு நூல்கள் அன்பளிப்பு

(பரந்தன்)

கரைச்சி சிவநகர் சனசமூக நிலையத்தின் நூலகத்திற்கு கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள மெதடிஸ் கல்லூரியில் உயர்தரம் கற்கும் மாணவி நிருத்திகா சிறிதரன் தனது கற்கையின் ஒரு பகுதியாக சமூகச் செயற்பாட்டு திட்டத்தின் கீழ் ஒரு தொகுதி நூல்களை கையளித்துள்ளார்.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் சிவநகர் சனசமூக மண்டபத்தில் இடம்பெற்றது.

சிவநகர் முதியோர் சங்க அனுசரணையில் சிவநகர் சனசமூக நிலைய மண்டபத்தில் சிவநகர் முதியோர் சங்க தலைவர் அ.ரகுபதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் கலந்து கொண்டு நூல்களை கையளித்துள்ளார்.(2-312)

# யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி தொழில்நுட்பபீடம் கற்கைகள் ஆரம்பம்



(பரந்தன்)

யாழ்.பல்கலைகழகத்தின் கிளிநொச்சி வளாகமான தொழில்நுட்ப பீடத்தின் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள யாழ் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் ஏற்கனவே விவசாய பீடம் மற்றும் பொறியியல் பீடம் என்பன இயங்கி வருகின்ற நிலையில் தற்போது தொழில்நுட்ப பீடமும் இயங்க ஆரம்பித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 23 மாவட்டங்களில் இருந்து 211 மாணவர்கள் இங்கு அனுமதி பெற்றுள்ளனர் என யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் வசந்தி அரசரட்ணம் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

யாழ். பல்கலைக்கழகத்தின் பத்தாவது பீடமாக தொழில்நுட்ப பீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள பலகலைக்கழகங்களில் எமது பல்கலைக்கழகம் மூன்றாவது நிலையில் தொழில்நுட்ப பீடத்தையும் ஆரம்பித்துள்ளது.

இங்கு அனுமதி பெற்றுள்ள மாணவர்களுக்கான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. முதலாம் வருட மாணவர்களுக்கான தங்குமிட வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் 525 மில்லியன் ரூபா செலவில் 400 ஏக்கர் கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. அதன் பணிகள் நிறைவுற்றதும் பெரும்பாலும் இரண்டாவது வருட கற்கைகளை மாணவர்கள் அங்கு தொடரக் கூடியதாக இருக்கும். மேலும் இங்கு ஆண், பெண்களுக்குரிய இரண்டு விடுதிகள் காணப்படுகின்றன. மேலும் இரண்டு விடுதிகள் அமைக்கும் பணிகளும் இடம்பெற்று வருகின்றன.

தொழில்நுட்ப பீடத்திற்குரிய வசதி வாய்ப்புக்களை பொறுத்தவரை கடந்த வருடம் 13 மில்லியனுக்குரிய உபகரணங்களை வாங்கியிருக்கின்றோம்.இந்த வருடம் சுமார் 120 மில்லியனுக்குரிய உபகரணங்களை கொள்வனவு செய்ய இருக்கின்றோம்.

எங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும், உயர் கல்வி அமைச்சும் மிகவும் உறுதுணையாக இருந்து நிதி வசதிகளை ஏற்படுத்தி தருகின்றார்கள்.

மேலும் முக்கியமாக கிளிநொச்சி வளாகத்தில் பதினொராவது பீடமாக விவசாய பீடத்துடன் இணைந்து விளையாட்டு விஞ்ஞான பீடத்தையும் ஆரம்பிக்கவுள்ளோம் எனவும் தெரிவித்தார்.(2-312)

# இராணுவம் காணியில் இருந்து வெளியேறியும் உள்நுழைய முடியவில்லை

## காணி உரிமையாளர் ஆதங்கம்




(மல்லாவி)

வவுனியா மாவட்டத்தில் உள்ள இராசேந்திரன்குளம் விக்ஸ் காட்டு பகுதியில் இருந்த இராணுவத்தினர் கடந்த சில நாட்களுக்கு முன்னர் வெளியேறியுள்ள நிலையில் காணி உரிமையாளர்கள் உள்நுழைவதை தடுக்கும் வகையில் குறித்த காணி இராணுவத்தினருக்கு சொந்தமானது எனக் குறிப்பிட்டு பெயர்ப்பலகை தொங்கவிடப்பட்டுள்ளதால் காணியை துப்புரவு செய்யமுடியாது அச்சுறுத்தல் காணப்படுவதாக காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது.

1998ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 18 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிய குறித்த இராணுவ முகாம் கடந்த 12ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அங்கிருந்து வெளியேறி பம்பைமடு இராணுவ முகாமுடன் இணைக்கப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, குறித்த காணி இராணுவத்தினருக்கு சொந்தமானது என குறிப்பிட்டு பெயர்ப்பலகை தொங்க விடப்பட்டுள்ளதுடன் காணிக்குள் யாரும் பிரவேசிக்கக் கூடாது என அறிவுறுத்தியுள்ளதுடன் குறித்த பகுதிக்கு அடிக்கடி வந்து செல்லும் இராணுவத்தினர் கண்காணித்துச் செல்வதாகவும் அந்த பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (2-15)

# மூவாயிரத்து 270 மில்லியன் ரூபாய் நிதியொதுக்கீட்டில் அபிவிருத்தி திட்டங்கள்

## முல்லை. அரசாங்க அதிபர் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 270 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் இவ்வருடத்திற்கான இறுதி அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றுள்ளது. இதில் அறிமுக உரையாற்றிய மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு திட்டங்களினூடாக அதற்கான நிதிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதனடிப்படையில் இவ்வாண்டு 3 ஆயிரத்து 270 மில்லியன் ரூபாவுக்கும் மேலான நிதி கிடைத்துள்ளது. இதன் மூலம் பல அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அது தொடர்பான முன்னேற்ற ஆய்வுக்கூட்டமாக இது அமையும். அத்துடன் 2017ஆம் ஆண்டுக்கான திட்டங்களும் முன்மொழியப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# பாரவூர்தி ஒன்று வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதுண்டு விபத்து

## சாரதி படுகாயம்



(மல்லாவி)

வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட கனகராயன்குளம் பொலிஸ் நிலையப்பிரிவில் உள்ள குறிசுட்ட குளம் பகுதியில், (ஏ-9, வீதியில் ) கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை ஏற்றி பயணித்த பார ஊர்தி வீதியை விட்டு விலகி அருகில் இருநத மின் கம்பத்துடன் மோதுண்டு தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி படுகாயம் அடைந்த நிலையில வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கனகராஜன் குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (2-15)

# ஆட்டோவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஜெக்னேற்றர் வெடிபொருட்கள் மீட்கப்பட்டன

## மூன்றுமுறிப்பு சந்தியில் சம்பவம்

(குருமன்காடு)

மதவாச்சியிலிருந்து வவுனியா நோக்கி பயணித்த ஆட்டோ ஒன்றை ஏ-9 வீதி மூன்று முறிப்பு சந்தியில் மறித்து சோதனை செய்த வேளை அதனுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஜெக்னேற்றர் வெடிபொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது.

வவுனியா பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட வவுனியா போதைப் பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் மதவாச்சியில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த ஆட்டோ ஒன்றை ஏ-9 வீதி மூன்று முறிப்பு சந்தியில் மறித்து சோதனை செய்த வேளை அதனுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஜெக்னேற்றர் வெடி பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.



இதனையடுத்து மேற்கொண்ட சோதனையில் ஜெக்னேற்றர் - 199, ஜெக்னேற்றர் தொப்பி - 200, 10 மீற்றர் நீளமான வயர் றோல் - 5, பயணப்பை - 02 என்பன கைப்பற்றப்பட்டதுடன், அதனைக் கொண்டு சென்ற ஆட்டோவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ் வெடிபொருளை கொண்டு சென்றமை தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-15-250)

# மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களினால் பெண்ணொருவரின் சங்கிலி அறுப்பு

## 24 மணிநேரத்தினுள் நபர்கள் கைது, ஓமந்தை பொலிஸார் அதிரடி


வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட ஓமந்தைப் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள நவ்விப் பகுதியில் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த பெண் ஒருவர் அணிந்திருந்த தங்கச்சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அறுத்துச் சென்றிருந்த நிலையில் தகவல் கிடைத்து இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்குள் இரண்டு திருடர்களையும் கொள்ளைக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளுடன் கைது செய்துள்ளதாக ஓமந்தை பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கைது நடவடிக்கை நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவது,

ஓமந்தைப் பொலிஸ் நிலையத் திற்குட்பட்ட நவ்வி கிராமத்தில் கடந்த 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருடர்களிடம் தங்கச் சங்கிலியைப் பறிகொடுத்த பெண்ணினால் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து ஓமந்தைப் பொலிஸ் நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரி இந்திக்க சுரேஷ் அன்ரனிஷ்க சில்வா தலைமையில் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொண்ட பொலிஸாரின் துரித நடவடிக்கையை அடுத்தே திருட்டு நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களால் திருட்டுக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்கள் ஓமந்தைப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணை நடைபெற்று வருவதாகவும் விசாரணைகளின் பின்னர் தடயப்பொருட்களுடன் சந்தேக நபர்கள் இருவரும் வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாகவும் ஓமந்தைப் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




# தண்ணிமுறிப்புக்குளத்தில் நன்னீர் மீன்பிடிக்கு அனுமதி வழங்க வேண்டும்

## குழு அமைத்து ஆராய தீர்மானம்

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடிக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என வெலிஓயா பிரதேசத்தைச் சேர்ந்த சிங்கள மீனவர்கள் கோரிக்கை விடுத்ததை யடுத்து மாவட்டச் செயலகத்தில் அமளி துமளி ஏற்பட்டது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு க் குழுக் கூட்டத்தின் போது தங்களுடைய வாழ்வாதாரத் தொழிலாக தண்ணிமுறிப்பு குளத்தில் நன்னீர் மீன்பிடியை மேற்கொண்டு வரும் தொழிலாளர்கள் பெரும்பான்மையின மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதன் மூலம் ஏற்படும் பிரச்சினைகளால் தாங்கள் குறித்த மீனவர்களாலும் இதற்கு சார்பாக பொலிஸார் செயற்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து மண்டபத்திற்குள் புகுந்த இருபது வரையான சிங்கள மீனவர்களால் மாவட்டச்செயலகத்தில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, அதாவது முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப்பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள தண்ணிமுறிப்புக்குளத்தின் சுமார் 150 வரையான மீனவர் குடும்பங்களைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம் மீனவர்கள் தமது தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில் அண்மைக்காலமாக இருபது வரையான சிங்கள மீனவர்கள் எதுவித அனுமதிகளும் இன்றி குளத்தில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு அனுதியின்றி தொழில் புரியும் சிங்கள மீனவர்களுக்கும் தமிழ் மீனவர்களுக்கும் இடையில் அடிக்கடி முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

கடந்த 2012ஆம் ஆண்டு இப்பிரச்சனை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதை யடுத்து தண்ணிமுறிப்பு குளத்தின் கீழ் உள்ள இரண்டு நன்னீர் மீன்பிடிச் சங்கங்களின் அங்கத்தவர் மட்டும் தொழில் செய்யமுடியும் என்றும் கட்டளையிடப்பட்டிருந்தது. இருந்தும் தற்போது இந்த முரண்பாடு நீடித்து வருகின்றது.

எங்களின் குளம் நாங்கள் காலம் காலமாக மீன்பிடியில் ஈடுபட்டு வாழ்வாதாரத்தை நடத்தி வரும் குளம் என்று தமிழ் மீனவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் சிங்கள மீனவர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினால் பொலிஸார் உடனடியாக செயற்படுவதாகவும் தமிழ் மீனவர்கள் சுட்டிக்காட்டினர்.

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் உள்ள குளத்தில் நாங்கள் 1983ஆம் ஆண்டிலிருந்து மீன்பிடிக்கின்றோம். எங்களுக்கும் இதில் பங்குண்டு. முல்லைத்தீவு மாவட்டம் தமிழ் சிங்கள முஸ்லிம் மக்கள் பல்லினமாக வாழும் மாவட்டம். நீங்களும் முஸ்லிம்களும் மட்டும் தண்ணிமுறிப்புக் குளத்தில் மீன்பிடிப்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது என்று சிங்கள மீனவர்களும் தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இதனால் கூட்டத்தில் சிறிது நேரம் அமளி ஏற்பட்டது. இதை அடுத்து மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் தமிழ் சிங்கள மீனவர்கள் தலா ஐவர் வீதம் குழு அமைக்கப்பட்டு இது தொடர்பில் ஆராய்ந்து இறுதி முடிவை எட்டுவதாக தீர்மானிக்கப்பட்டது. (2-15)

# தமிழ்மொழி மூல முறைப்பாட்டுத் திட்டத்தின் ஊடாக இதுவரை 203முறைப்பாடுகள் பதிவு

## வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத் தகவல் படி

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 150 ஆவது ஆண்டை முன்னிட்டு பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் நட்புறவை ஏற்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் பொலிஸ்மா அதிபரால் கடந்த செப்டெம்பர் முதலாம் திகதி வவுனியா- மன்னார் பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட தொலைபேசி மூலம் தமிழ் மொழியில் முறைப்பாடு செய்யும் திட்டத்தில் இதுவரை 203 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் இருந்து 115 முறைப்பாடுகளும், மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் இருந்து 55 முறைப்பாடுகளும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுகளில் இருந்து 33 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

முறைப்பாட்டையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் பல குற்றச் செயல்களை தடுத்துள்ளதுடன் சில செயற்பாடுகளுக்கு எதிராக துரிதமாக நடவடிக்கைகளையும் எடுத்திருந்தனர். குறிப்பாக மரக்கடத்தல், சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர்களை தண்டித்தல், பாடசாலை சீருடை துணி விநியோக முறைகேடு, இளைஞர் மோதல், பொது இடத்தில் மது அருந்துதல், விபத்துக்கள் என்பன தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கமான 119 ஐ விட இதன் சேவைகள் விரைவாக இடம்பெறுவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். இத்திட்டத்தில் தமிழ்மொழி மூல முறைப்பாடுகளுக்காக 076 6 22 4949, 076 622 6363 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.(2-250)

# புவனேஸ்வரன் பதவியேற்பு



தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினர் ஆ. புவனேஸ்வரன் நேற்று முன்தினம் வட மாகாண பேரவைச் செயலகத்தில பேரவையின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் முன்னிலையில் வடக்கு மாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினராக பதவியேற்றுக் கொண்டார். இந் நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர்கள் விந்தன் கனகரத்தினம், சயந்தன் மற்றும் கட்சியின் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர். அண்மையில் காலமான பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெயநாதனின் வெற்றிடத்திற்கு ஆ. புவனேஸ்வரன் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(2-15-281)






வவுனியா மருதோடை அ.த.க. பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கின்ற குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வெளிச்சம் அறக்கட்டளையால் ஒரு மூக்கு கண்ணாடியும் துவிச்சக்கரவண்டிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் லண்டன்வாழ் அன்பர் ஒருவரின் நன்கொடை மூலம் வழங்கப்பட்டதைப் படங்களில் காணலாம்.

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2016-13.01.2017

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



*தெய்வ பக்தியோடு தேச பக்தியையும் கொண்டு செயற்படும் தனுசு ராசி நேயர்களே!*

உங்களின் மார்கழி மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே 9,10 ஆகிய இரண்டு இடங்களுக்கும் அதிபதியான சூரியனும், புதனும் இணைந்து உங்கள் ராசியிலேயே தர்மகர்மாதிபதி யோகத்தை வழங்கும் விதத்தில் சஞ்சரிக்கின்றனர். எனவே மாதம் முழுவதும் மகிழ்ச்சி அதிகரிக்கும். மறக்க முடியாத சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். வருமானம் போதுமானதாக அமையும்.

அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் ஆதரவோடு, ஒரு நல்ல காரியத்தை செய்து முடிப்பீர்கள். தொழில் தொடர்பாக எடுத்த முயற்சிகளுக்கு மாற்றினத்தவர்கள் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைக்கும். கடந்த இரண்டு மாதங்களாக ஸ்தம்பித்து நின்ற தொழில் இப்பொழுது வெற்றி நடைபோடும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட முன்வருவீர்கள். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். கொடுக்கல்-வாங்கலில் இருந்த மந்தநிலை மாறும். கொடுத்த கடனை வாங்க முடியவில்லையே, வாங்கிய கடனைக் கொடுக்க முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். எதிர்பாராத தொகை கிடைத்து இனிய பலன் காணப்போகிறீர்கள்.

ஏழரைச் சனியின் ஆதிக்கம் இன்னும் இருக்கிறது. இப்பொழுது விரயச் சனியின் ஆதிக்கத்தில் சிக்கியிருக்கிறது. குருபார்வை 2ஆம் இடத்தில் பதிவதால் வீண் விரயங்கள் அதிகம் ஏற்படாது. ஆயினும் சுபச்செலவுகள் கூடிக்கொண்டே செல்லும். ஒரு சில நேரங்களில் ஒருமுறைக்கு இருமுறை செலவு செய்ய நேரிடும்.

உங்கள் சுயஜாதகத்தைப் புரட்டிப் பாருங்கள். ஏழரைச் சனியில் எத்தனையாவது சுற்று நடைபெறுகிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள். சனிக்கிழமைதோறும் சனிபகவானை வழிபடுவது நல்லது. முதல் சுற்று நடப்பவர்கள் அதற்குரிய யோகச் சனியையும், மறுசுற்று நடப்பவர்கள் அதற்குரிய யோகச் சனியையும், மூன்றாவது சுற்று நடப்பவர்கள் முன்னேற்றத்திற்கு இடையூறு வருவதை நீக்கும் திருத்தலங்களுக்கும் சென்று வழிபட்டு வருவது அவசியமாகும். உங்கள் ராசியைப் பொறுத்தவரை சனி தனஸ்தானத்திற்கும் சகாய ஸ்தானத்திற்கும் அதிபதியானவர். அவர் உங்கள் வரவு-செலவிற்கு உறுதுணையாக இருப்பவர். வழக்குகளில் வெற்றிதர வைப்பவர். அவர் சன்னிதியில் கவசம் பாடி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

ஆருத்ரா தரிசனத்தன்று ஆலயம் சென்று

### இனிமை தரும் இடமாற்றம்!

கூத்த பிரானைக் கும்பிட்டு வாருங்கள். கங்கையை முடியில் சூடிய சிவபெருமானை, படியளக்கும் திருநாளில் வழிபட்டு வருவது நல்லது.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 19ஆம் திகதி விருச்சிகத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் ராசிக்கு சப்தம ஸ்தானத்திற்கும், 10ஆம் இடத்திற்கும் அதிபதியான புதன் 12இல் சஞ்சரிப்பது யோகம்தான். மறைந்த புதன் நிறைந்த தனலாபத்தைத் தருவார். எனவே பொருளாதார பற்றாக்குறை அகலும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். வியாபார விரோதங்கள் விலகும். சிலருக்கு வெளிமாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் அழைப்புகள் வரலாம். உத்தியோக முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**




டிசெம்பர் 30 ஆம் திகதி கும்ப ராசிக்கு சுக்ரன் செல்கிறார். உங்கள் ராசிக்கு 6,11 இற்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் 3ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த வழக்குகள் சாதகமாக முடியும். உடன்பிறப்புகள் வழியில் உங்களுக்கு வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். கடல் தாண்டி வரும் செய்தி காதுகளை இனிக்க வைக்கும். நண்பர்களின் ஒத்துழைப்போடு சில காரியங்களைச் செய்வீர்கள். நின்று போன கட்டடப் பணிகள் இப்பொழுது தொடரும்.

**தனுசு புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 8ஆம் திகதி தனுசு ராசிக்கு புதன் செல்கிறார். இந்தக் காலத்தில் விரயங்கள் கூடுதலாக இருக்கும். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலை உருவாகும். தொழிலில் ஒரு சிலர் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. உத்தியோகப் பிரச்சினை அதிகரிக்கும். பிள்ளைகளாலும் பிரச்சினை, பெற்றோராலும் பிரச்சினை என்ற நிலை உருவாகும். குதூகலம் குறையாமல் இருக்கக் குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. விலையுயர்ந்த பொருட்களை கையாளும் பொழுது கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

இந்த மாதம் விநாயகப் பெருமான் வழிபாடு வெற்றிகளை வழங்கும். வடக்கு நோக்கிய விநாயகர் வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

உங்களின் பணத்தேவைகள் பூர்த்தியாகும். பூமி யோகம் முதல் அனைத்து யோகங்களும் வந்துசேரும். உறவினர் பகை மாறும். உங்களை விட்டுவிலகிச் சென்றவர்கள் உறவாட முன்வருவர். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். மாமன், மைத்துனர் வழியில் மகிழ்ச்சி தரும் தகவல் வந்து சேரும். 2ஆம் இடத்தில் குருவின் பார்வை பதிவதால் குடும்பத்தில் நீண்ட நாட்களாக தள்ளிப்போன சுபகாரியங்கள் நடைபெற வழிபிறக்கும். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவிகள் கிடைக்கலாம். நடராஜர் வழிபாடு நன்மைகளை வழங்கும். வியாழக்கிழமை விரதமும், குரு வழிபாடும் மனக்குழப்பத்தை அகற்றும்.



*துணிந்து செயற்படுவதோடு மட்டுமல்லாமல் பணிந்தும் நடந்து கொள்ளும் மகர ராசி நேயர்களே!*

உங்களின் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். சுக்ரன் பஞ்சமாதிபதி மட்டுமல்லாமல் 10ஆம் இடத்திற்கும் அதிபதியாக விளங்குபவர். எனவே தொழில் மேன்மை, லாபம், ஆடை, ஆபரண சேர்க்கை, இல்லம் கட்டிக் குடியேறும் வாய்ப்பு, புதிய தொழில் தொடங்கும் சூழல், அரசியல் போன்றவற்றில் அனுகூலம் உண்டு. அக்கறை காட்டக் கூடிய செயல்களில் எல்லாம் ஆதாயம் கிடைக்கக் கூடிய மாதமாக இம்மாதம் அமையப் போகிறது.

உங்கள் கனவுகள் நனவாகும். கடந்த சில மாதங்களாக எடுத்த முயற்சியில் இருந்த தடை அகலும். பெண்களால் பெருமை சேரும். பிறமொழி பேசுபவர்களால் நன்மை உண்டு. குடும்பத்தில் ஒருவர் மாறி ஒருவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போகிறதே என்ற கவலை அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அனுகூலம் கூடுதலாக கிடைக்கும். மேலிடத்து ஆதரவோடு மிகச் சிறந்த பலனைக் காண்பீர்கள்.

புத-ஆதித்ய யோகமும், செவ்வாய், சனி பரிவர்த்தனையும், குரு-சுக்ர பார்வையும் இம்மாதம் ஏற்படுகிறது. எனவே, நினைத்த நேரத்தில் நினைத்த காரியத்தைச் செய்ய இயலும். பணப்புழக்கம் அதிகமாகவே இருக்கும். பட்டும் படாமலும் பழகிய செல்வந்தர்கள் இப்பொழுது உங்களுக்குப் பக்கபலமாக வந்திணைவர். 2இல் செவ்வாய் இருப்பது ஒருவகையில் நன்மைதான். 4,11இற்கு அதிபதி தனஸ்தானத்தில் இருப்பதால் எதிர்பார்த்த இடத்திலிருந்து தொகை கிடைக்கும்.

காதுகுத்து முதல் கல்யாணம் வரை பணப்பிரச்சினை காரணமாகத் தாமதித்து வந்த சுபகாரியங்கள் இம்மாதம் நடைபெற வழிபிறக்கும். செல்வந்தர்களின் ஒத்துழைப்பும் உறவினர்களின் ஆதரவும் நண்பர்களின் இனிய உதவியும் உங்கள்

### கனவுகள் நனவாகும்!

கவலைகளைப் போக்கும். கையில் பணம் புரளும்.

2இல் கேது, 8இல் ராகு இருப்பதால் சர்ப்ப கிரகத்தின் பிடியில் இருக்கிறீர்கள். எனவே நாக சாந்திப் பரிகாரங்களை யோகபலம் பெற்ற நாளில் செய்து கொள்ளவேண்டும். தேக நலன் சீராக சனிக்கிழமை தோறும் சனி பகவானை வழிபட்டு வருவது நல்லது. அனுமன் ஜெயந்தி அன்று அருகிலிருக்கும் விஷ்ணு ஆலயத்திற்குச் சென்று அனுமனையும் வழிபட்டு வாருங்கள். அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும்.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

புதன் உங்கள் ராசிக்கு 6.9 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். அவர் டிசெம்பர 19ஆம் திகதி விருச்சிகத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாகப் பெற்றோர் வழிப்பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடுகள் கிடைக்கும். வாங்கிய இடத்தை




விற்று விட்டுப் புதிய இடம் வாங்கலாமா? என்ற சிந்தனை மேலோங்கும். உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர். பக்கத்து வீட்டாரின் பகைமாறும். உத்தியோகத்தில் வழக்கமாகக் கிடைக்க வேண்டிய பதவிஉயர்வு, சம்பள உயர்வு போன்றவை இப்பொழுது கிடைக்கும்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 30ஆம் திகதி கும்ப ராசிக்குச் சுக்ரன் செல்கிறார். இந்தக் காலம் ஒரு பொற்காலமாகும். குடும்பத்தில் மங்கள ஓசை கேட்கும் வாய்ப்பு உருவாகும். சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். பழைய பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். நூதனப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பிள்ளைகளின் படிப்பிற்காக விலையுயர்ந்த பொருட்கள், மடிக்கணனி போன்றவற்றை வாங்குவதில் அக்கறை செலுத்துவீர்கள்.

**தனுசு சுக்ரனின் சஞ்சாரம்!**

தனுசு ராசியில் ஜனவரி 8ஆம் திகதி புதன் சஞ்சரிக்கப் போகிறார். 9ஆம் இடத்திற்கு அதிபதியான புதன் 11 இல் சஞ்சரிக்கும் பொழுது வருகின்ற மாற்றங்கள் நல்ல மாற்றங்களாக அமையும். சேமிப்பு அதிகரிக்கும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். பூமி யோகம் முதல் பொன், பொருள் வாங்கும் யோகம் வரை வந்துசேரும். உத்தியோகத்தில் சக பணியாளர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். தொழில் செய்பவர்களுக்கு புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொடுப்பர். இம்மாதம் நடராஜர் தரிசனம் நன்மையை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் மாதம் இது. தகராறு செய்தவர்கள் தானாக விலகுவர். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து புதிய திருப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பர். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். வாழ்க்கைத் துணை உங்கள் சொல்லுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மாதமிது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு பற்றிய சந்தோசத் தகவல் வந்து சேரும். குடும்பத்தில் உள்ள பெரியவர்கள் உங்களுக்கு கூடுதல் மதிப்புக் கொடுப்பர். பிள்ளைகளால் பெருமை வந்துசேரும். ஆருத்ரா தரிசனத்தன்று நடராஜப் பெருமானை வழிபடுவது நல்லது. அனுமன் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

(தொடரும்)

# இலங்கையை அச்சுறுத்தும் வைரஸ் வைத்தியர்கள் கடும் எச்சரிக்கை

நாட்டில் தற்போது டெங்கு மற்றும் இன்புளுவென்சா ஏ என்ற வைரஸ் நோய் பரவுவதன் காரணமாக மிகவும் அவதானமதாக செயற்படுமாறு மருத்துவ ஆராய்ச்சியின் வைரஸ் நோய் நிபுணர் ஜூட் ஜயமக தெரிவித்துள்ளார்.

காய்ச்சல், சளி, உடம்பு வலி, தொண்டை வலி, தலை வலி, மூட்டு வலி, சுவாச பிரச்சினைகளைப் போன்ற நோய் அறிகுறிகள் காணப்படும் என்றால் இரத்த பரிசோதனையின் பின்னர் மாத்திரமே நோயை அடையாளம் காண முடியும் என அவர் தெரிவித்தார்.

எப்படியிருப்பினும் இரண்டு நாட்களுக்கு அதிகமான காய்ச்சல் காணப்பட்டால் வைத்திய ஆலோசனைக்கமைய, இரத்த பரிசோதனை மேற்கொண்டு அது டெங்குவா? என அறிந்து கொள்ளுமாறும் அவ்வாறு இல்லை என்றால் அது இன்புளுவென்சா ஏ வைரஸாக இருக்கலாம் என வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எப்படியிருப்பினும் இந்த நாட்களில் பரவும் வைரஸ் தொடர்பில் அவ்வளவு அச்சமடைய தேவையில்லை. எனினும் வைத்தியரின் ஆலோசனை பெற்றுக் கொண்டு ஓய்வு, அதிகம் நீர் பருகுதல், வேலைப்பளு இன்றி இருத்தல் போன்றவற்றை பின்பற்றினால் நோயினை விரைவில் குணப்படுத்த முடியும் என வைத்தியர் தெரிவித்தார்.

நபர் ஒருவரின் உடம்பில் உள்ள நோய்த்தடுப்புகள் மூலம் வைரஸ் தொற்று குணமடையும், எனினும் நோய்த்தடுப்புகள் குறைவான கர்ப்பிணி தாய்மார்கள், சிறிய குழந்தைகள், நாட்பட்ட நோய்களை உடையவர் மற்றும் 60 வயதிற்கு அதிக மானவர்களுக்கு இந்த வைரஸ உடம்பினுள் சென்றதன் பின்னர் பல்வேறு சிக்கல்கள் ஏற்படக் கூடும் என வைத்தியர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3-10)

# நாடு மிஞ்சுமா? மகிந்த கேள்வி

(கொழும்பு)

இரு தரப்பு பிரச்சினையை அரசியலாக்கி ஆட்சி மாற்ற சூழ்ச்சியை சர்வதேசம் முன்னெடுத்தது. இதன் விளைவாக இலங்கை இன்று இந்தியா, அமெரிக்கா மற்றும் சீனாவின் தீவிர ஆக்கிரமிப்பிற்குள் காணப்படுகின்றது. இனி நாடு மிஞ்சுமா? என முன்னாள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேள்வியெழுப்பினார்.

ஆட்சி மாற்ற சூழ்ச்சிக்கு எமது அரசாங்கத்தில் இருந்து ஒத்துழைப்பு வழங்கியவர்கள நல்லாட்சியிலும் அமைச்சர்களாக உள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி என்பது தேசியத்துவத்தை பாதுகாக்கும் கொள்கையுடையது. அதற்கு எதிராக செல்லும் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு காலம் கடந்து தேர்தல் வைத்தாலும் மக்கள பாடம் புகட்டுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை மாவட்ட அமைப்பாளர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-3-10)

# அரிசி விநியோகத்தை சீராக்க அவசர திட்டம்

அரிசி விநியோகத்தை சீராகவும் தாராளமாகவும் சந்தையில் பேணும்வகையில் புதிய அரிசியை லங்கா சதோசவின் ஊடாக பாவனைக்கு விடுவதற்கு உடன் நடவடிக்கைகளை எடுக்குமாறு கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான பொருளாதார முகாமைத்துவ அமைச்சரவை மட்டத்திலான குழு கடந்த 14 ஆம் திகதி கூடிய போது 250,000 மெற்றிக் தொன் அளவிலான புதிய அரிசியை இறக்குமதி செய்து சந்தையில் இருக்கும் கேள்வியை நிரப்புவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்தக் குழுவின் முடிவுக்கிணங்க 10,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கும் 20,000 மெற்றிக்தொன் (வெள்ளை மற்றும் நாடு) நெல்லை நெற் சந்தைப்படுத்தும் திணைக்களத்திலிருந்து கொள்வனவு செய்து, அதனை அரிசியாக்கவும் உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு (CWE) அமைச்சர் றிசாத் பதியுதீன் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கொள்வனவு செய்யப்படும் நெல்லை தனியார் ஆலைகள மற்றும் அரச ஆலைகள் ஊடாக குற்றி அதனை அரிசியாக்கி லங்கா சதோச கிளைகள் மூலம் 78 ரூபாவுக்கு நுகர்வோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அமைசசர் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தைப் பணித்துள்ளார்.

அமைச்சரின் பணிப்புரைக்கிணங்க இந்த செயற்பாடுகளை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் நேற்று 20 ஆம் திகதி ஆரம்பித்துள்ளது. எதிர் வரும் நாட்களில் மேற்குறிப்பிட்ட அரிசி லங்கா சதோசவினூடாக பாவனைக்கு விடப்படுமெனவும் இதன் மூலம் புத்தாண்டு தினங்களில் அரிசியை தாராளமாக நுகர்வோர் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அமைசசர் றிசாத் தெரிவித்தார்.

**அமைச்சர் எச்சரிக்கை**

இதேவேளை பண்டிகை காலங்களில் எந்த சந்தர்ப்பத்திலும் அரிசிக்கு தட்டுப்பாடு நிலவ அரசாங்கம் இடமளிக்காதென்றும் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் வியாபாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

பண்டிகைக்கால பகுதியில் அரிசிக்கு தட்டுப்பாட்டை ஏற்படுத்தி கூடிய விலையில் அரிசி விற்பனை செய்வதற்கு எவருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. நாடுமுழுவதிலும் இவ்வாறு அரிசி விற்பனை செய்வோரை முற்றுகை இடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நுகர்வோர் சேவை அதிகார சபையின் விதிமுறைகளை மீறிசெயற்படும் வர்த்தகர்கள் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இவ்வாறான வர்த்தகர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் நுகர்வோர் சேவை அதிகார சபையினால் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-3-10)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## முரலிப் பழம்

Botanical Name- Dimocarpus Longan

Family- Sapindaceae

Engl- Longan Fruit

தெற்காசிய நாட்டை பிறப்பிடமாகக் கொண்ட மரமாகும். சாப்பிடக்கூடிய பழங்களை உருவாக்கும் உலர் வலய மரமாகும். நடுத்தர மரமாகும். கிட்டத்தட்ட 6-7 மீற்றர் உயரம் வளரக் கூடியது. சீனா, தாய்லாந்து, இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் வளரக்கூடியது. 20 வயதுடைய மரங்களில் தான் பழங்களை வர்த்தக ரீதியாக பறிக்கலாம்.

மரங்களில் கிளைகளை வெட்டி பழங்கள் சேகரிக்கப்படுகிறது. இப் பழங்களை மூங்கில் கூடைகளில் சேகரித்து பயன்படுத்தலாம். முரலிப்பழமானது தற்போது நெடுங்கேணி, முல்லைத் தீவு காடுகளில் பழுத்து விற்பனையும் செய்யப்படுகிறது. சைனா நாட்டில் இது ஓர் மருத்துவமுக்கியத்துவமுடைய பழமாகும். இதன் உடன்பழங்கள், உலர் பழங்கள், விதைகள் மருத்துவத்தில் பயன் படுத்தப்படுகிறது.

சித்த மருத்துவத்திலும் இதன் பழங்களும் விதைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

பல்லாண்டு வாழும் மரங்களில் இதுவும் அடங்கும். ஆனாலும் எமது நாட்டில் மரத்துடன் வெட்டி இப் பழங்களை சேகரிப்பதனால் இப் பழங்கள் நிறைய ஆண்டுகள் பாரிய அளவில் பழங்களை கொடுக்க முடியாத நிலையை ஏற்படுத்துகிறோம். ஏனெனில் சைனா, தாய்லாந்து போன்ற நாடுகளில் இது பல்வேறு விஞ்ஞான ரீதியான ஆய்வுகளுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது.

உதாரணமாக அவுஸ்திரேலியா நாட்டிலும் இப்பழங்கள் Longan Fruit பயிர் செய்யப் பட்டு பல ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. சில நாடுகளுக்கும் சைனா, தாய்லாந்து போன்ற நாடுகளிலிருந்து இதன் பழங்களை பாதுகாப்பு பொருள் சேர்த்து Canned in Syrup முறையில் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இதன் பழங்களை விட இதன் பூக்களும் மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது. இதனுடைய பூக்களின் சாறிற்கு உடற் பருமனை குறைக்கும் தன்மையுண்டு. இதன் சாறு எலிகளுக்கு கொடுத்து பார்த்த பரிசோதனையில் (obese ruts) கொழுப்பு Fat குறைந்தமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதனுடைய பழங்கள் மிகவும் சுவையுடையது. ஒருவிதநறுமணமுண்டு. இதன் பழச்சதைக்கு (Pericarp) புற்று நோய் கலங்களுக்கு எதிராக செய்யப்படும் தன்மையுள்ளதாக ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

ஈரல், நுரையீரல், இரப்பை சம்பந்தமான புற்று நோய்க் கலன்களுக்கு எதிராக செயற்படும் தன்மைகூடுதலாக உண்டு. மேலும் பக்றீரியா, வைரஸ் போன்றவற்றிற்கு எதிரான தன்மை இதன் பழங்களுக்கு உண்டு. Antibacterial, antiviral).

உடலில் நோயெதிர்ப்பு சக்தியையும் உடற்பலத்தையும் அதிகரிக்கும் தன்மை இதன் பழங்களுக்கு உண்டு. இதனுடைய பழச்சதை (flesh of fruit) நித்திரையின்மையை நீக்கக் கூடியது. ஞாபகசத்தியை அதிகரிக்கும் தன்மையும் உண்டு.



நரம்புகளில் ஏற்படும் நமைச்சலை குறைத்து சாந்தப்படுத்தும் தன்மையுண்டு. (sooth nerves) இதன் உலர்ந்த பழங்களை குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி அளவு தினமும் இரவில் கொடுத்துவர ஞாபக சக்தி அதிகரிக்கும்.

100 கிராம் பழத்திலுள்ள சத்துக்கள்

சக்தி 60 கி.கலோரி

காபோவைதரேற்று 15.14 கிராம்

நார்ப்பொருள் 1.1 கிராம்

கொழுப்பு 0.1 கிராம்

புரதம் 1.31 கிராம்

லைசின் (Lycine) 0.054 கிராம்

தயமின் $(B_1)$0.031 மி.கிராம்

ரைபோபிளேவின் $(B_2)$ 0.14 மி.கிராம்

நியாசின் $(B_3)$ 0.3 மி.கிராம்

விற்றமின் 'C' 84மி.கிராம்

கல்சியம் 1 மி.கிராம்

இரும்புச்சத்து 0.13மி.கிராம்

மக்னீசியம் 10 மி.கிராம்

பொஸ்பரஸ் 21 மி.கிராம்

பொட்டாசியம் 266மி.கிராம்

இதனுடைய பழங்களுக்கு இரத்த அனுசேபத்தை blood metabolism) சீராக்கும் தன்மையுண்டு.

இதனுடைய உலர்ந்தபழங்களில் இருந்து சூப் தயாரித்தும் பயன்படுத்தலாம்.

இதன்பழங்களைசாப்பிட்டு வர முரசுபலம்பெறும். இதனால் பற்களும் உறுதியாக இருக்கும். மற்றும் தோலை மிருதுவாகவும் வெடிப்புகள் வராமலும் பாதுகாக்கும்.

நரம்புமண்டலத்தை பலப் படுத்தக்கூடியது. தாதுச்சத்துகள் (Minerals) பழங்களில் காணப்படுவதால் நரம்புகளில் தாபிதத்தை குறைத்து நரம்பு மண்டலத்தை பலப்படுத்தி, மன உளைச்சலையும் தடுக்கக்கூடியதாக இருக்கும். இதில் உயிர்ச்சத்து Cயும் காணப்படுவதால் தடிமன், குளிர் போன்றவற்றை தடுத்து நோயெதிர்ப்பு சக்தியையும் அதிகரிக்கும். அத்துடன் இதன் பழங்கள் இருதயத்திற்கு பலத்தை கொடுக்கக் கூடியது.

எனவே மருத்துவ பண்புகள் உள்ள பழங்கள் விளையும் எமது வடமாகாண காடுகளில் இம்மரங்களுக்கு தகுந்த பாதுகாப்பு கொடுப்பதுடன் சரியான முறையில் பயிர்ச்செய்கை, அறுவடை, பழங்களை சேகரிக்கும் முறைகள் பற்றி தொழில் நுட்பங்களை மக்களுக்கு கொடுத்து மரத்துடன் வெட்டி பழங்களை சேகரிப்பதை தடுத்து முரலி மரங்கள், இனங்கள் வருங்காலத்தில் அழிவடைவதை தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதாவது தாய் தாவரத்தினை அழிக்காமல் பழங்களை சேகரிக்கும் முறைகள் பற்றி விழிப்புணர்வூட்டல் அவசியம் ஆகும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அதிகாரபூர்வமாகத் தேர்வு



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்டு ட்ரம்ப், தேர்தல் சபை வாக்கெடுப்பிலும் வெற்றி பெற்று அமெரிக்க ஜனாதிபதியாக அதிகாரபூர்வமாக தேர்வு செய்யப்பட்டார்.

அமெரிக்காவில், அண்மையில் நடந்த ஜனாதிபதி தேர்தலில், குடியரசு கட்சி வேட்பாளராக போட்டியிட்ட, டொனால்டு ட்ரம்ப், வெற்றி பெற்றார். ஜனவரியில், அவர் பதவி ஏற்க உள்ளார். ஜனாதிபதி தேர்தலில் மக்கள் வாக்கெடுப்பில் வெற்றி பெறுபவர், மாநிலங்களில் உள்ள தேர்தல் சபை வாக்கெடுப்பிலும் வெற்றி பெற வேண்டும்.

இந்நிலையில் தேர்தல் சபை உறுப்பினர்களின் கூட்டம் நேற்று முன்தினம் (டிச. ,19) நடத்த முடிவு செய்யப்பட்டது.

538 பிரதிநிதிகளை கொண்ட இக்கூட்டத்தில் 270 பேரின் வாக்குகளை ட்ரம்ப் பெற வேண்டும். இக்கூட்டத்தில் 304 வாக்குகளை பெற்று ட்ரம்ப், அமெரிக்க ஜனாதிபதியாக அதிகார பூர்வமாக தேர்வு செய்யப் பட்டார். ஹிலாரிக்கு 227 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. (இ-3-10)

# கிழக்கு அலெப்போ வெளியேற்றத்தை ஈரான் குழப்புகிறது



(அலெப்போ)

சிரியாவின் அலெப்போ நகரத்தில், போராளிகளின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட கிழக்கு அலெப்போவின் பெரும் பகுதி, சிரிய அரசாங்கப் படைகளால் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில், அங்கு எஞ்சியிருக்கும் மக்களையும் போராளிகளையும் வெளியேற்றும் நடவடிக்கையை, ஈரானே குழப்புகிறது என, எதிரணிப் போராளிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கிழக்கு அலெப்போவில், போராளிகளின் கட்டுப்பாட்டில் காணப்பட்ட பகுதிகளில் 99 சதவீதத்தை, ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகளின் ஆதரவுடன் செயற்படும் ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத்தின் படைகள் கைப்பற்றியுள்ளன.

எஞ்சியுள்ள பகுதிகளில் இப்போது சுமார் 30,000 பொதுமக்கள் காணப்படுவதோடு, போராளிகளும் ஆயிரக்கணக்கில் காணப்படுகின்றனர் எனக் கருதப்படுகிறது. இவர்களை வெளியேற்றுவதற்கான இணக்கம், கடந்த வியாழக்கிழமை எட்டப்பட்டு, வெளியேற்றும் நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் மறுநாள் வெள்ளிக்கிழமை, இந்த இணக்கம் முறிவடைந்ததைத் தொடர்ந்து, வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அத்தோடு, அலப்போவிலிருந்து வெளியேறும் பாதையையும, ஆர்ப்பாட்டம் செய்த ஒரு பிரிவினர் மூடியிருந்தனர்.

இதைத் தொடர்ந்து, புதிய இணக்கமொன்றை ஏற்படுத்துவதற்கான பேரம்பேசல்கள், போராளிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் துருக்கிக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் இடம்பெற்று வருகின்றன. ஆனால், வியாழக்கிழமை இடம்பெற்ற இணக்கத்தை, ஈரானே குழப்பியதாக, எதிரணிப் போராளிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இந்தப் பேரம்பேசலில் பங்குபற்றும் போராளிக் குழுக்களில் ஒன்றான அஹ்ரர் அல்ஷாம் குழுவின் அரசியல் பிரிவுத் தலைவரான முனிர் அல் சாயலின் தகவலின்படி, போராளிக் குழுக்களால் முற்றுகையிடப்பட்டுள்ள ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் இரண்டு கிராமங்களின் முற்றுகை தளர்த்தப்பட்டாலேயே, கிழக்கு அலெப்போவிலிருந்து பொதுமக்கள் வெளியேற்றப்பட முடியுமென ஈரான் தெரிவித்துள்ளது.

அந்தக் கிராமங்களில், சுமார் 20,000 பேர் காணப்படுகின்றனர் எனக் கருதப்படுவதோடு, அவர்களில் சுமார் 4,500 பேர், அரசாங்கத்துக்கு ஆதரவான போராளிகளாவர்.

"ஈரானும் அதன் பிரிவினைவாதக் குழுக்களும், முற்றுகைக்கு உள்ளாகியுள்ள அலெப்போவில் எமது மக்கள் தொடர்பான மனிதாபிமான நிலைமையைப் பயன்படுத்தி, அல்-பௌவா, கெப்றயா ஆகிய பகுதிகளிலுள்ள தமது குழுக்கள் வெளியேறும் வரை, கிழக்கு அலெப்போவிலிருந்து எமது மக்கள் வெளியேறுவதைத் தடுக்கின்றன" என, முனிர் அல் சாயல் தெரிவித்தார்.

ஈரானால் ஆதரவளிக்கப்படும் ஷியா முஸ்லிம் போராளிக் குழுக்களான லெபனானின் ஹிஸ்புல்லாவும் ஈராக்கைச் சேர்ந்த ஏனைய ஷியா முஸ்லிம் ஆயுதக் குழுக்களுமே, கிழக்கு அலெப்போவிலிருந்து பொதுமக்கள் வெளியேறுவதைத் தடுத்த குழுக்கள் என, சாயல் குற்றஞ்சாட்டுகிறார்.

கிழக்கு அலெப்போவிலிருந்து வெளியேறிய மக்கள், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களால் திரும்பி வருவதையும் கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் திரும்புவதையும் சோதனைச் சாவடிக்கு அருகில் வைத்துக் கொள்ளையடிக்கப்படுவதையும் காட்டும் காணொளிகளும் ஊடக அறிக்கைகளும், கிழக்கு அலெப்போவில் காணப்படும் மனிதாபிமான நெருக்கடியை வெளிப்படுத்துகின்றன. ஆனால், மக்களுக்காக எதையும் செய்யத் தயாராக இருப்பதாக, சாயல் தெரிவிக்கிறார்.

"பிரிவினைவாத ஆயுததாரிகளே பொறுப்புக் கூற வேண்டியவர்கள். ஆனால், அலெப்போவிலுள்ள எங்களது மக்களின் பாதுகாப்பே எமது முன்னுரிமை எனவும் அந்த இலக்கை அடைவதற்குத் தேவையான அத்தனை வழிகளுக்கும் தயாராக இருக்கிறோம் எனவும் நாம் எச்சரிக்கிறோம்" என்று அவர தெரிவித்தார்.

கிழக்கு அலெப்போவில் நிலவும் கடும் குளிருக்கு மத்தியில், தாங்கள் வெளியேற அனுமதிக்கப்படுவோம் என்ற நம்பிக்கையில், வீதிகளில் காணப்படும் மக்கள், கடும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என, அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-3)

# என்ன நினைக்கிறது உலகம்?

சிரியாவின் அலெப்போ நகரில் போரின் பிடியில் சிக்கியிருக்கும் மக்களுக்கு ஆதரவாக, ஈபிள் கோபுரத்தின் விளக்குகள் அணைக்கப்பட்டன. சிரியா மக்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து, பாரிஸ், லண்டன், ஆம்ஸ்டெர்டாம், ஒஸ்லோ என்று பல்வேறு நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. ரஷ்யா, ஈரான் தூதரகங்கள் முன்னர் துருக்கி மக்கள் போராட்டம் நடத்தினர்.

ஈராக் மீது அமெரிக்கா குண்டு வீசியபோது நடந்த போராட்டங்களுக்கு இணையாக நடத்தப்பட்டிருக்கும் இந்தப் போராட்டங்கள், பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி விடவில்லை என்பதுதான் சோகம். கடந்த ஆறு ஆண்டுகளாக இதுபோன்ற போராட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டிருந்தால், உண்மையாகவே குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்!

அதேசமயம், சிறிய அளவிலான மாற்றமும் நடந்திருக்கிறது. பாதிக்கப்பட்ட சிரியர்கள்மீதான மக்களின் அனுதாபம், அலெப்போவிலிருந்து மக்கள் தப்பிச் செல்வதற்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அனுமதிக்க வழிவகுத்திருக்கிறது. எனினும், பயங்கரவாதிகளின் எண் ணத்தைப் பொறுத்தே இந்த ஏற்பாட்டின் தலைவிதியும் இருக்கும். அலெப்போவில் பரிதவித்துக்கொண்டிருக்கும் இலட்சக் கணக்கிலான மக்கள் வெளியேற அனுமதிக் கப்பட்டால், சர்வதேச அளவில் பேச்சுவார்த்தை மூலம் மிக அதிக எண்ணிக்கையிலான மக்கள் வெளியேற்றப்படும் நிகழ்வைக் காணலாம். சிரியாவில் நடந்துகொண்டிருப்பது போர்க்குற்றம் மனிதத்தன்மைக்கு எதிரான குற்றம். இப்பிரச்சினையின் தீவிரத்தை ஒப்பிடும்போது, இதற்கு எதிரான மக்கள் போராட்டங்கள் இன்னும் அதிகமாக இருக்க வேண்டும் என்பதுதான் உண்மை.

அலெப்போ நகரின் இந்த நிலை, அரபு, முஸ்லிம் உலகம், மேற்கத்தேய நாடுகள் மட்டுமல்ல, ஒட்டுமொத்த மனிதாபிமானத்தின் தோல்வியை எடுத்துக்காட்டுகிறது. உலக அளவில இடதுசாரிகளின் ஆதரவு தங்களுக்குக் கிடைக்கும் என்று சிரியா மக்கள் பலர் எதிர்பார்த்திருந்த நிலையில், இடதுசாரிப் பார்வையாளர்களும், பதிப்பகங்களும் வேறு மாதிரியாகப் பேசத் தொடங்கிவிட்டன. சிரிய ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்தின் அடக்குமுறைகளைப் பற்றிப் பேசுவதைத் தவிர்க்கிறார்கள்.

ஒபாமா அரசு சிரியா மக்களுக்குப் பேச்சளவில் ஆதரவு தெரிவித்ததுடன், ஆசாத் அரசுக்கு எதிராகப் போராடிவரும் "ஃப்ரீ ஆர்மி" படையினருக்கு ஆயுதங்கள் அனுப்பத் தனது நட்பு நாடுகளுக்கு அவ்வப்போது அனுமதி வழங்கிவருகிறது.

2013இல் விஷவாயுத் தாக்குதலில் 1,500 பேர் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, அமெரிக்காவின் இரசாயனக் கட்டுப்பாடெல்லாம் காணாமல் போய்விட்டது. சிரியாவின் தலைவிதியைக் கிட்டத்தட்ட வெளிப்படையாகவே ரஷ்யா, ஈரானின் வசம் அமெரிக்கா ஒப்படைத்துவிட்டது.

சிறையிலிருந்து சலாபிய - ஜிகாதிகளை விடுதலை செய்தது உள்ளிட்ட நடவடிக்கைகள் மூலம் பல்வேறு படுகொலை நிகழ்வுகளுக்குக் காரணமாக இருந்தார் ஆசாத். பாலஸ்தீனர்களைப் பாதுகாப்பதில் தோல்வியடைந்த அரபு நாடுகள், சிரியா விடயத்திலும் தோல்வி அடைந்திருக்கின்றன.

இந்நிலையில், பல்வேறு முனைகளிலிருந்து நடத்தப்படும் இந்தச் சண்டையில் ஆசாத் வெற்றி பெறுவது என்பது ஐ.எஸ்.பயங்கரவாதிகளின் வெற்றியாகவும் பார்க்கப்படும் என்பதுதான் உண்மை! (ஆசிரியர் தலையங்கம்: த ஹிந்து)

# ராணுவ முகாம்மீது ஏமனில் தாக்குதல்

## 52 பேர் பலி! ஐ.எஸ். பொறுப்பேற்பு

ஏமன நாட்டில் இராணுவ தலைமையகத்தை குறிவைத்து நடத்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 52 ஆக உயர்ந்துள்ளது. இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

வளைகுடா பகுதியில் அமைந்துள்ள ஏமன் நாட்டின் தென் பகுதியில் பிரபல துறைமுக நகரமான ஏடென் என்ற நகரம் உள்ளது. இந்நகரில் வட கிழக்கில் உள்ள கோர் மக்ஸார் மாவட்ட ராணுவ தலைமையகத்தில் சம்பளம் வாங்குவதற்காக பல வீரர்கள் ஒன்று கூடியிருந்தனர்.

அப்போது உடலில் வெடிகுண்டுகளை கட்டியபடி அங்கு வந்த அடையாளம் தெரியாத தற்கொலைப்படை தீவிரவாதி அதிரடி தாக்குதலில் ஈடுபட்டான்.

இந்த தாக்குதலில் 30 இராணுவ வீரர்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டதாகவும், பொதுமக்கள் உட்பட பலர் காயமடைந்ததாகவும் முதற்கட்ட செய்திகள் தெரிவித்து இருந்தன.

இநநிலையில், இராணுவ தலைமையகத்தை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த தற்கொலைப்படை தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 52 ஆக உயர்ந்து ள்ளது.

இந்த கொடூர தாக்குதலுக்கு ஏமனை மையமாக கொண்டு செயற்படும் ஐ.எஸ் அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. (இ-3)

# ராணுவ விமானம் விபத்து; 16பேர் படுகாயமடைந்தனர்



ரஷ்ய இராணுவ விமானம் ஒன்று சைபீரியாவில் விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் 16 பேர் படுகாயமடைந்துள்ளனர். IL-18 ரக விமானம் ஒன்று 39 பயணிகளுடன் பயணித்துக் கொண்டிருந்த போது சைபீரியாவின் -யகுடியா பகுதியில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இதில் பயணித்த 27 பேர் பலியானதாக முன்னர் அறிவிக்கப்பட்டது. எனினும் 16 பேர் மாத்திரமே படுகாயமடைந்திருப்பதாக பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. 32 பயணிகளும் 7 பணியாளர்களும் குறித்த விமானத்தில் பயணித்துள்ளனர். (இ-3-10)

# குளியல் திரவம் குடித்த 30 பேர் பலி!

ரஷ்யாவில், குளியலுக்கு பயன்படுத்தப்படும் திரவத்தை, போதைக்காக குடித்த, 30 பேர, பரிதாபமாக உயிரிழந்தனர். ஐரோப்பிய, ஆசிய நாடான ரஷ்யாவைச் சேர்ந்த பலர், குளியலுக்கு பயன்படும் எண்ணெய் போன்ற திரவத்தில், போதைத் தன்மை இருப்பதால, அதை குடிப்பது வழக்கம அதிலுள்ள விஷத்தன்மையால் அடிக்கடி உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இந்நிலையில், சைபீரியா பகுதியில், நேற்று முன்தினம் குளியல் திரவத்தை குடித்த, 30 பேர் உடல் நிலை பாதிக்கப்பட்டு, சிறிது நேரத்தில் பரிதாபமாக உயிரிழந்தனர். திரவத்தில் இருந்த, மெத்தனால் என்ற வேதிப் பொருள், விஷத்தன்மை உடையதாக மாறி இருந்த தால், இந்த துயர சம்பவம் நடந்ததாக தகவல்கள கூறுகின்றன. குளியல்திரவ போத்தல்களில், அது குடிப்பதற்கு அல்ல என, தௌிவாக எச்சரிக்கை "லேபிள்கள் ஒட்டப்பட்டிருந்ததாக, அதிகாரிகள் தெரிவித்தனர். சம்பவம் குறித்து, ரஷ்ய புலனாய்வு அமைப்பு விசாரணையை ஆரம்பித்துள்ளது. (இ-3-10)

# ஜெயலலிதா முகம் பதித்த 68 கிலோ இட்லி!







ஜெயலலிதா முகத்தைப் போன்று வடிவமைக்கப்பட்ட இட்லி, மெரினா கடற்கரையில் வைக்கப்பட்டுள்ளது.

சென்னை மெரினாவில் ஜெயலலிதா அடக்கம் செய்யப்பட்ட இடத்தை பொதுமக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், நேற்றுக் காலை ஜெயலலிதா முகம் போன்று வடிவமைக்கப்பட்ட 68 கிலோ இட்லி, பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. (இ)

# ஜெயலலிதா நினைவிடத்தில் வைக்கப்பட்ட சிலை அகற்றம்



ஜெயலலிதா நினைவிடத்தில் அனுமதி இல்லாமல் வைக்கப்பட்ட சிலை அகற்றப்பட்டது. சிலை வைக்க அரசிடம் முறைப்படி அனுமதி பெறவில்லை என்பதால் சிலையை பொதுப்பணித்துறையினரும் பொலிஸாரும் அப்புறப்படுத்தினர்.

மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் உடல் சென்னை மெரினா கடற்கரையில் உள்ள எம்.ஜி.ஆர் நினைவிடவளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

அங்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான அ.தி.மு.க. தொண்டர்கள், பொதுமக்கள் வந்து மலர் தூவி அஞ்சலி செலுத்தி வருகின்றனர். தமிழக முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அமைச்சர்களும் அவ்வப்போது சென்று அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை ஜெயலலிதா நினைவிடத்துக்கு மீஞ்சூர் ஒன்றியம் நாலூர் ஊராட்சி செயலாளர் முத்துக்குமார் அஞ்சலி செலுத்த வந்திருந்தார். அப்போது அவர் தத்ரூபமாக செய்யப்பட்ட ஜெயலலிதாவின் சிலையை நினைவிடத்தில் வைத்து கும்பிட்டார். நீல வண்ண சேலையில் ஜெயலலிதா சிரித்தபடி இருக்கும் 2 அடி உயரம் உள்ள இந்த சிலை ஆந்திராவில் வடிவமைக்கப்பட்டதாகும். ஜெயலலிதாவின் சிலையை அங்கு வந்திருந்த அனைவரும் வணங்கினார்கள்.

புதிதாக ஜெயலலிதாவுக்கு சிலை வைக்கப்பட்ட தகவல் வேகமாக பரவியது. உடனே பொதுப் பணித்துறையினரும், பொலிஸாரும் அங்கு விரைந்து சென்று பார்வையிட்டனர்.

சிலை வைக்க அரசிடம் முறைப்படி அனுமதி பெறவில்லை என்பதால் சிலையை அங்கிருந்து அப்புறப்படுத்தி எடுத்துச் சென்றுவிட்டனர். இந்த சம்பவத்தால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. (இ-3-10)

# ஜெயலலிதாவுக்கு பாரத ரத்னா விருது வழங்கப்பட வேண்டும்

## பிரதமரிடம் ஓ.பன்னீர்செல்வம் கோரிக்கை



தமிழக முதலமைச்சராக பதவி ஏற்ற பின் முதல் முறையாக நேற்று முன்தினம் டில்லி சென்ற ஓ.பன்னீர்செல்வம், பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசினார்.

அப்போது, பிரதமரிடம் 29 அம்சங்கள் அடங்கிய 141 பக்க கோரிக்கை மனுவை அவரிடம் கொடுத்தார்.

இந்த சந்திப்பு குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது,

டில்லியில் ரேஸ்கோர்ஸ் சாலையில் உள்ள பிரதமர் இல்லத்தில் பிரதமர் நரேந்திர மோடியை நேற்று முன்தினம் 19ஆம் திகதி மாலை 5 மணியளவில் முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் சந்தித்துப் பேசினார்.

ஜெயலலிதா இறந்த சோகமான சூழ்நிலையில் இந்த சந்திப்பு நடைபெறுவதை அப்போது முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார். டிசெம்பர் 6ஆம் திகதியன்று சென்னைக்கு வந்து ஜெயலலிதாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதற்கு பிரதமருக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

பொதுச் சேவையின் மூலம் இலட்சக்கணக்கான மக்களை கவர்ந்த ஜெயலலிதாவுக்கு 'பாரத ரத்னா' விருதை வழங்க வேண்டும் என்று பிரதமரை அவர் கேட்டுக்கொண்டார். பாராளுமன்றத்தில் ஜெயலலிதாவின் முழு உருவ வெண்கலச் சிலையை அமைக்கவும் கோரிக்கை விடுத்தார்.

முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வைத்த கோரிக்கைகள் மற்றும் அவர் அளித்த மனுவில் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள், ஜெயலலிதாவுக்கு பாரத் ரத்னா விருது வழங்குவது பற்றிய கோரிக்கை ஆகியவை குறித்து விரைவாக முடிவு எடுப்பதாக பிரதமர் நரேந்திர மோடி உறுதி அளித்தார். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது. (இ-3-10)

# பயங்கரவாதத்திற்கு புகலிடம் கூடாது

## ஐ.நாவில் இந்தியா வலியுறுத்தல்

பயங்கரவாத அமைப்புகளுக்கு புகலிடம் அளிப்பதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும். பயங்கரவாதிகளை மறைமுகமாக ஆதரிப்பதையும் பாகிஸ்தான் நிறுத்த வேண்டுமென ஐ.நாவில் இந்திய தூதுவர் சையத் அக்பருதீன் தெரிவித்தார்.

பயங்கரவாதத்திற்கு ஆதரவு தருவதால், அதற்கான பலனைத் தான் பாகிஸ்தான் அனுபவிக்க நேரிடும். உங்களுக்கு நல்ல எண்ணம் எதுவும் இருந்தால், அமைதியை விதையுங்கள். வேறு எதுவும் செய்ய வேண்டாம். அல்கொய்தா, அதனுடன் தொடர்புடைய லஷ்கர் இ தொய்பா, ஜெயிஸ் இ முகமது பயங்கரவாத அமைப்புகளுக்கு ஆதரவு கூடாது என அவர் மேலும் வலியுறுத்தினார். (இ-3-10)

# இனப்படுகொலை ஆரம்பமாகலாம்

## பான் கீ மூன் அச்சம்




உடனடி நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், தென் சூடானில் இனப்படுகொலை செயல்முறை ஆரம்பிக்கப்படும் என தாம் அச்சம் கொண்டுள்ளதாக, ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. தலைமையகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, மூன் இவ்விடயத்தைத் தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்தும் உரையாற்றிய அவர், "தென் சூடானுக்கான ஆயுத கிடைப்பனவை தடை செய்யவும், நாட்டிற்குள் ஆயுதப்பாவனை அதிகரித்துள்ளமையை தடுப்பதற்கும் ஐ.நா. பாதுகாப்புச் சபை உடனடி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். தென்சூடானில் தொடரும் வன்முறைகள் மற்றும் வன்முறைகளை தூண்டுதல் என்பவை கட்டாயமாக நிறுத்தப்பட வேண்டும். நிச்சயமாக அங்கு இடம்பெறும் அட்டூழியங்களுக்கும், ஏனைய குற்றங்களுக்கும் பொறுப்புக் கூறப்பட வேண்டும்" என வலியுறுத்தினார்.

இதேவேளை தென்சூடானுக்கு ஆயுத தடை விதிப்பது தொடர்பில் பாதுகாப்புச் சபையில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைக்கு, அங்கத்தவர்களின் ஆதரவான வாக்குகளைப் பெறும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. (இ-3-10)

# விசர்நாய்க்கடி நோய்

# இரு மாகாணங்களில் மரண வீதம் பூச்சியம்

இலங்கையில் விசர்நாய்க்கடி நோயினால், கடந்த 2015ஆம் ஆண்டு 24 பேர் மரணமடைந்துள்ளனர் என்று சுட்டிக்காட்டியுள்ள பொதுச் சுகாதார கால்நடை வைத்திய சேவைகள் பிரிவு, அந்த ஆண்டில் மத்திய மற்றும் தென் ஆகிய இரண்டு மாகாணங்களில் ஒருவர் கூட மரணிக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. குருநாகல் மாவட்டத்திலேயே அதிகூடுதலாக 8 பேர் மரணமடைந்துள்ளனர். அதற்கு அடுத்தபடியாக, கொழும்பு மாவட்டத்தில் நாலவர் மரணமடைந்துள்ளனர். விசர்நாய்க்கடி காரணமாக 2014ஆம் ஆண்டு ஒன்பது மாகாணங்களிலும் 19 பேர் மரணமடைந்துள்ளனர். அந்த ஆண்டில் பதுளை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் ஒருவரேனும் மரணிக்கவில்லை என்றும் அப்பிரிவின் புள்ளிவிபரவியலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு, 24 பேர் மரணமடைந்தனர். காலி, கம்பஹா, கண்டி, மொனராகலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஒருவரேனும் மரணமடையவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதேவேளை, 2014 ஆம் ஆண்டு 134,943 பெண் நாய்களுக்கு கடந்த ஆண்டு 132,315 பெண் நாய்களுக்கும் கருத்தடை செய்யப்பட்டுள்ளன. இதேவேளை, 1,294,529 நாய்களுக்கு 2014 ஆம் ஆண்டும், 2015 ஆம் ஆண்டு 1,490,541 நாய்களுக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்றும் அந்தப் புள்ளிவிபரத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 1970 களில் இருந்து 2014ஆம் ஆண்டு வரையிலும் விசர் நாய்க்கடி நோய் காரணமாக வருடாந்தம் சுமார் 400 பேர் உயிரிழந்தனர் என்று சுட்டிக்காட்டிய பொதுச் சுகாதார கால்நடை வைத்திய சேவைகள் பதில் பணிப்பாளர் திருமதி றுவினி பிம்புரகே விசர் நாய்க்கடி நோயை இலங்கையிலிருந்து முற்றாக இல்லாதொழிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்று தெரிவித்துள்ளார். (இ-3-10)

# தர்மத்தின் குரலாய் ஓங்கி ஒலிக்கும் வலம்புரி பற்றி சான்றோரின் கருத்து





தொகுப்பு: ஜெயம் ஜெகன்

யாழ். வண்ணார்பண்ணையில் 1999 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20 ஆம் திகதி வலம்புரிப் பத்திரிகை உதயமாகியது. தன் நெஞ்சறிவது பொய்பற்க என்ற ஆசிரியத் தலையங்கத்துடன் தோற்றம் பெற்று இன்று 18 ஆவது ஆண்டில் வலம்புரிப் பத்திரிகை கால் பதிக்கின்றது.

அறிவித்தல், அறிவுறுத்தல், விளக்குதல், மகிழ்வித்தல், வாணிபம் செய்தல் ஆகிய பத்திரிகைப் பணிகளை சிறப்புற ஆற்றிவருகின்றது. ஒரு பத்திரிகைக்கு இருக்கக் கூடிய அத்தனை அம்சங்களையும் உள்ளடக்கி நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ் என்ற மகுட வாசகத்துடன் ந.விஜயசுந்தரம் அவர்களைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு தினசரி வெளிவருகிறது.

செய்திகளைத் திரிவுபடுத் தாமல் இரண்டிற்கு மேற்பட்ட மூலகங்களுடன் செய்திகளை அறிக்கையிடுகின்றது. ஆன்மீகம், அறிவியல், அரசியல் , பொருளாதாரம், விளையாட்டு, சினிமா, இலக்கியம் எனப் பல்துறைகளைத் தாங்கி வருகின்றது.

வலம்புரிப் பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம் எல்லா நிலையினராலும் விரும்பிக் படிக்கின்ற ஆசிரியத் தலையங்கமாகவுள்ளது. ஒரு முறை கடிதமாகவும் இன்னொரு முறை தாளலயமாகவும் வேறொருமுறை அன்பு மடலாகவும் பிறிதொரு முறை கனவு காண்பது போலவும் கவிதை வடிவிலும் எனப் பல எழுத்து நடைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

வலம்புரிப் பத்திரிகையை ஆசிரியத் தலையங்கத்தைப் படிப்பதற்கென்றே ஒரு பகுதி வாசகர்கள் வாங்குகின்றார்கள். ஆசிரியத் தலையங்கம் பெரிய எழுத்துக்களில்தேவைக்கேற்ப சுவட்டியும் குறைத்தும் எழுதப்படுகின்றது.

ஞாயிற்றுக்கிழமைகளில் சங்கு நாதத்தை இணைத்துக் கொண்டு வருகிறது. வலம்புரிப் பத்திரிகை ஆலடி மாநாடு மூலம் சமகாலப் பிரச்சினைகளைப் பொட்டிட்டுக் காட்டுகின்றது.

இம் மாநாடு ஆலடிப் பிள்ளையார் கோவிலடியில்நடைபெறுகிறது. மாநாடோ ஆலடிப்பிள்ளையார் கோவிலின் கண்டாமணியும் ஒலிக்க நிறைவுறுகிறது. ஆக ஆன்மீகத்தில் ஆரம்பமாகி ஆன்மீகத்தில் நிறைவுறுவதை இப் பத்தியெழுத்தில் காணலாம்.

வாத்தியார்,பண்டிதர், விதானையார், கங்காணி ஆகிய நான்கு பாத்திரங்களினூடாக ஆலடி மாநாட்டில் சமகாலப் பிரச்சினைகள் பேசப்படுகின்றன. வியாசர் பதில்கள் ஊடாக சுவையான - யதார்த்தமான சிந்தனைகளை முன்வைக்கின்றது.

குருஷேத்திரம் வழியாக நடப்பு அரசியலில் நகர்வுகள் சுட்டப்படுகின்றன. கவிதைக்கலசத்தின் மூலம் புல இளம் கவிஞர்களுக்கு களமமைத்துக் கொடுப்பதோடு இமயம் தொடுவதற்கான சிந்தனைகளும்வலியுறுத்தப்படுகின்றன. இப் பகுதியிலே மௌனத் தின் தேடலில் புகைப்படத் தினைப் பிரசுரித்து அப்படம் மூலம் புலப்படும் எண்ணத்தை கவிதை மொழி யால் சித்திரிக்கப்படுகின்றது. பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை ஊடாகப் பல தரப்பட்ட விடயதானங்கள் எடுத்துச் சொல்லப்படுகின்றன.

இவற்றோடு பரமபிதா காட்டிய பாதை , சந்தை நிலவரம், இன்றைய நாளில் முன்னைய பதிவுகள், இலங்கைத் தமிழர் வரலாறு, காலத்தால் அழி யாத கானங்கள், ஈழத்துச் சினிமா, சிறுவர் அரங்கம், இன்று ஒரு தகவல் போன்ற பல்துறை அம்சங்களைத் தாங்கி வருகிறது.

வலம்புரிப் பத்திரிகை தொடர் பாகப் பல்வேறுபட்ட வாசகர்க ளிடமும் கேட்ட போது அவர்கள் குறிப்பிட்டவை வருமாறு,

## பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் (முன்னாள் கலைப்பீட பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)



வலம்புரிப் பத்திரிகை ஆன்மீகம், அரசியல்,அறிவியல்,சினிமா, இலக்கியம், விளையாட்டுத் துறை எனப் பல் துறைகளைத் தாங்கி வருகிறது. மிக உறுதியான பத்திரிகையாகவும் ஆணித்தரமான பத்திரிகையாகவும் நடுவு நிலையான பத்திரிகையாகவும் வலம்புரிப் பத்திரிகை உள்ளது.

அரசியல் சார்பற்ற மக்க ளின் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. வாசகர்களுக்கு எது விருப்பமோ அதை வழங்குகிறது. செய்திகளில் உண்மைத் தன்மை பேணப்படுகின்றது. செய்திகளில் செய்திக் கட்டமைப்பு பேணப்படுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக வலம்புரியின் ஆசிரியத் தலையங்கம் மிகவும் அற்புதமானது.

இலகு மொழி நடை, தொடர்புபடுத்துவதற்கு சொல்லப்படுகின்ற கதைகள், எழுத்து நடை எல்லாமே ஒன்று சேர்ந்து ஆசிரியத் தலையங்கத்தை படிக்க வைக்கின்றன.

வலம்புரிப் பத்திரிகையில் அதிகம் நான் விரும்பிப் பார்க் கின்ற பகுதியாக ஆசிரியர் தலையங்கம், ஆலடி மாநாடு என்பனவற்றை படிப்பேன். ஆலடி மாநாடு சமகாலப் பிரச்சினைகளைக் சுட்டிக்காட்டுவதோடு சமூகத்தில் நிலவும் நன்மைத் தனங்களின் வெளிப்பாடுகளையும் கூறுகின்றது. அளப்பரிய பணிக ளைச் செய்து வரும் வலம்புரி தொடர்ந்தும் தனது பணிகளை முன்னெடுக்க வாழ்த்துகின்றேன்.

## பேராசிரியர் என்.சண்முகலிங்கன் (முன்னாள் துணைவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்)



வலம்புரி நாளிதழ் தனித்துவமானது. பண்பாட்டுக்கு நெருக்கமான அதன் மொழி நடையும் அறிவுத் துணிவும் பண்பாட்டு உணர்திறனும் மிக்க ஆசிரியத் தலையங்கங்களும் வலம்புரியின் தனித் துவ அடையாளம் என்பேன். சமூக அசைவியக்கத்தினை மேம்படுத்தும் வலம்புரியின் சமூகப் பொறுப்புணர்வும் கால உணர்வும் போற்றுதற் குரியன. பல்வேறு நெருக்கடிகளைத் தாண்டி 18 ஆவது ஆண்டில் கால் பதிக்கும் வலம் புரியின் சமூகப் பயனான இதழியல், சமூகப் பொறுப்புடனான வலம்புரியின் இதழியல் பயணம் எங்கள் சமூகத்தின் வல்லமைக்கு மென்மேலும் வலுவூட்டுவதாக அமைந்து சிறக்க எல்லையில்லா என் அன்பு வாழ்த்துக்கள்.

## பேராசிரியர் தி.வேல்நம்பி (வணிக, முகாமைத்துவ பீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)



வலம்புரி பத்திரிகை ஆரம் பிக்கப் பட்ட காலத்திலிருந்து இன்று வரை மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்திருக்கிறது. குறிப்பாக வலம் புரிப்பத்திரிகையைப் படிக்கின்ற வாசகர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வலம்புரி பத்திரிகையின் சிறப்பம்சமாக இருப்பது ஆசிரியர் தலையங்கம். எந்தவொரு பத்திரிகையிலும் இல்லாதவாறு ஆசிரியத் தலையங்கம் எழுதப்படுகிறது. ஆசிரியத் தலையங்கம் எழுதுகின்ற முறைமை வித்தியாசமானது. அந்தந்த சம்பவங்களுக்குப் பொருத்தமான முறையில் ஆசிரியர் தலையங்கம் எழுதப்படுகிறது. ஆசிரியத் தலையங்கத்தில் பழைய இலங்கியங்களில் இருக்கிற கதாபாத்திரங்களைக் கொண்டு வந்து அதை யதார்த்தத்தோடு தொடர்புபடுத்துவது மிகவும் இரசனைக்குரியதாக இருக்கின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியத் தலையங்கம் தொடர்பாக ஆய்வுகள் சமர்ப்பித்த போது ஆய்வாளர்கள் மிகச் சிறந்த ஆசிரியத் தலையங்கம் வலம்புரி என தமது ஆய்வினூடாக வெளிப்படுத்தினர். வலம்புரிப் பத்திரிகை மக்களுக்குக் கொடுத்திருக்கின்ற தகவல்களைச் சரியாகக் கொடுக்கின்றது. கூடுதலாக விளம்பரங்களில் மட்டும் தங்கியிருக்காது. தகவல்களைக் கூடுதலாகக் கொடுக்கின்றது. கல்விசார் பக்கங்களில் மாணவர்கள் பயனுறும் வகையில் விடயங்களை உள்ளடக்கி வருகின்றது.

ஒட்டு மொத்தத்தில் வளர்ச்சி யென்று சொல்லுவதோடு சமூகத்தின் தேவைகளைப் பிரதிபலிக்கின்ற ஓர் ஊடகமாக வளர்ச்சி கண்டுள்ளது. சமகாலப் பிரச்சினைகளைக் கூறுவதாக ஆலடி மாநாடு அமைகிறது மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

## கலா பூஷணம் ந. இராமநாதன் உடையார்கட்டு



வலம்புரிப் பத்திரிகை நடுவு நிலை தவறாத பத்திரிகை. அந்தப் பத்திரிகையில் வருகின்ற செய்திகளை முதியவர்களும் படிக்கக் கூடியவாறு எழுத்தளவுகள் பெரிதாக இருக்கும். சிறிய எழுத்துக்களால் சிரமப்பட்டே செய்திகளை வாசிக்க முடியும். இந்த இடர்பாடினை வலம்புரியில் காணமுடியாது. எங்களைப் போல கொஞ்ச முதியவர்கள் கூடிக்கதைக்கிற மாதிரி ஆலடி மாநாடு நடைபெறுகிறது. அதிலே தற்போதைய சூழலில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றி வாத்தியார், பண்டிதர், கங்காணி, விதானையார் ஆகியோர் ஆல மரத்திற்கு கீழே கதைக்கிற பண்பினைக் காணுகின்றோம்.

பண்பாடு ரீதியான வழக்கங்களை நினைவுபடுத்துகின்றது.

வலம்புரியில் வருகின்ற அத்தனை விடயங்களும் சமூகத்திற்குத் தேவையானவை. வன்னி மாவட்டச் செய்திகளுக்கு இன்னும் முன்னுரிமை கொடுத்தால் சிறப்பாகவிருக்கும். சினிமாப் பக்கத்தினை கலர்ப் பக்கமாக பிரசுரிக்காமல் அந்தக் கலர்ப் பக்கத்தினை வேறொரு பக்கத்திற்கு பயன்படுத்தினால் மிகவும் நன்று. வலம்புரியின் பணி மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

## கலைப்புலவன் வெ.ஆதப்பன் புதுக்குடியிருப்பு



வலம்புரிப் பத்திரிகையின் நீண்ட கால வாசகன் நான். வலம்புரிப்பத்திரிகை சமூகத்திற்குச் சொல்ல வேண்டிய கருத்துக்களை அவ்வப்போது அழகாகச் சொல்லுகின்றது.

சமூகத்துடன் மிக நெருங்கிய பத்திரிகையாகவுள்ளது. செய்திகளுக்குத் தகுந்த தலைப் பிடுகின்ற திறனை வலம்புரியில் காண முடிகின்றது.

வலம்புரிப் பத்திரிகை படித்த பின்னர் ஏதோ ஒரு பெரிய அறிவைப் பெற்ற மாதிரியும் மேலும் மேலும் படிக்க வேண்டுமென்ற ஆர் வம் எனக்கு ஏற்படுவதுண்டு. ஒரு செய்தி தொடர்பாக தாம் பிரசுரித்ததில் பிழையிருந்தால் மறுநாள் மறுப்புச் செய்தியில் மன்னிப்புக் கோருகின்ற உயரிய பண்பினைக் காண முடிகின்றது. இது பத்திரிகைத் துறையின் உச்சத்தைக் காட்டுகின்றது.

உண்மைக்குப் புறம்பான செய்திகளை பிரசுரிப்பதில்லை என்ற உண்மைக்கு மாற்றுக் கருத்தில்லை வலம்புரியின் விசேட அம்சம் அதன் ஆசிரியத் தலையங்கம் ஆகும்.

உதாரணமாக பான்கீ மூன் மட்டுமல்ல சுப்பர் மூனும் எங்களை ஏமாற்றிற்று, உனக்குப் பகலுக்கு எனக்கு இரவுக்கு என்பது போன்றது தான் ஒற்றையாட்சி இவற்றி னைக் குறிப்பிடலாம்.

வலம்புரிப் பத்திரிகை இனி வரும் காலங்களில் தனது ஆண்டு விழாவை முன்னிட்டு இலக்கியப் போட்டிகளை நடத்த வேண்டும். அவ்வாறு நடத்தினால் பல்வேறுபட்டவர்களும் பங்கு பற்றி வெற்றி பெறுவதற்கு வாய்ப்பாக இருப் பதோடு வலம்புரிப் பத்திரிகை தொடர்பாக மேலும் அறிய வாய்ப்பேற்படுகிறது.

# மாகாண முதலமைச்சர்களுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க மகிந்த எதிர்ப்பு

(கொழும்பு)

**புதிய அரசியலமைப்பின் மூலம், மாகாண முதலமைச்சர்களுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.'இந்தியாவில் கூட, மாநில ஆளுநர்கள், குடியரசுத் தலைவரின் உத்தரவை நிறைவேற்றுபவர்களாகவே இருக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.**

இந்தியாவில், ஆளுநர்களால் மாநில சட்டமன்றங்களை கலைக்க முடியும். ஆனால் இலங்கையில் ஆளுநர்களால் அதனைச் செய்ய முடியாது.

இது இலங்கையின் ஒற்றையாட்சிப் பண்பை பாதுகாக்கும் விதிமுறைக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடியது.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், சிங்களப் பெரும்பான்மையினரைப் பகைத்துக் கொண்டு தமிழ் சிறுபான்மையினரை திருப்திப்படுத்த முனைகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(இ-3-10)

# சீனாவுக்கு விற்கும் திட்டத்துக்கு எதிராக நீதிமன்றத் தடை உத்தரவு பெறத் திட்டம்

## வாசுதேவ நாணயக்கார கூறுகிறார்

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 80 வீத உரிமையை சீனாவுக்கு விற்கும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிக்கு எதிராக, நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப் போவதாக, நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், தமது கட்சியின் சார்பில் இந்த மனுத் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவித்தார்.

பெறுமதிமிக்க நிலங்களை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு. அரசாங்கம் விற்பதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் அதன் சுற்றாடலிலுள்ள நிலங்களை சீனாவுக்கு வழங்குவதற்கு எதிராக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.

இந்த நிலையில் மகிந்த அணியைச் சேர்ந்த வாசுதேவ நாணயக்கார நீதிமன்றத் தடைஉத்தரவைப்பெறப்போவ



தாக எச்சரித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-3-10)

# திருமலை துறைமுகம் மீது அமெரிக்காவுக்குக் கண்



## திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

கடற்படைத்தள விரிவாக்கத் திட்டத்துக்காக திருகோணமலைத் துறைமுகத்தின் மீது அமெரிக்கா கண் வைத்திருப்பதாக, முன்னாள் அமைச்சரும் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண எச்சரித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர்,

"இந்தப் பிராந்தியத்தில் தனது போர்த்தளங்களை விரிவாக்குவதற்காக திருகோணமலைத் துறைமுகத்தை கைப்பற்றுவதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

இலங்கையை அமெரிக்கா வசப்படுத்தி வருகிறது. சுமார் 400 மில்லியன் டொலர் பெறுமதியான - அதிக விலையான போர் விமானங்களைக் கொள்வனவு செய்யுமாறும் இலங்கைக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வருகிறது" என்றும் அவர் தெரிவித்தார். (இ-3-10)

# வரட்சியை எதிர்கொள்ள விசேட செயலணி

எதிர்வரும் மார்ச் மாதத்தில் இலங்கையில் ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்படும் கடும் வரட்சியை எதிர்கொள்வது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று முன்தினம் கலந்துரையாடி, விசேட செயலணி ஒன்றை ஸ்தாபிக்க தீர்மானித்துள்ளனர்.

ஜனவரி மாதத்தில் இருந்து ஏற்படப் போகும் வரட்சி குறித்து நாட்டின் அனைத்து பிரதேசங்களுக்குமாக தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் முன்னெடுக்க இதன் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மின் தடை ஏற்படாதிருக்கவும், குடிநீர் விநியோகிப்பது மற்றும் விவசாயிகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவது உள்ளிட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்கு போதியளவு நிவாரணங்கள் வழங்குவது தொடர்பாகவும் திட்டமிடப்பட்டது. (இ-3-10)

# இன்று ஒரு தகவல்

## போற்றுதலுக்குரிய பொறுப்புணர்ச்சி

எதைச் சொல்ல வேண்டுமோ, அதை மட்டும் சொல்லுதல்;

எதைச் செய்ய வேண்டுமோ,அதைக் கட்டாயம் செய்தல்;

எது முக்கியம் , எது முக்கியமில்லை என்று பிரித்து உணர்ந்து செயற்படுதல்;

எதில் பிடிப்புக் காண்பிக்க வேண்டுமோ அதில் மட்டும் பிடிப்போடு இருத்தல்;

எது அவசரமோ அதை அவசரமாகவும், ஆற அமரச் செய்ய வேண்டியதை அதன் படியும் செய்தல்;

நாம் செய்ய வேண்டியது எது, பிறர் செய்ய வேண்டியது எது என்று பிரித்து உணர்தல்;

ஒப்படைக்கப்படும் கடமைகளை எவரும் குறை சொல்ல முடியாதபடி செய்து காட்டுதல்.

ஒப்படைக்கப்படாத கடமைகளையும் முயன்று உணர்ந்து அவற்றைச் செயற்படுத்தல்;

ஒரு நன்மைக்காக எத்தகைய இழப்புக்களையும் கொள்ளுதல்;

எல்லாம் விதிப்படி தான் நடக்கும், அதை மாற்ற முடியாது என்று சித்தாந்தம் பேசிப் பொழுதை வீணாக்காதிருத்தல் அல்லது சந்தர்ப்பங்களை நழுவவிடாது இருத்தல் ஆகிய எண்ணற்ற நல்ல பண்புகளின் கலவையே பொறுப்புணர்ச்சி. இப்படிப்பட்ட மூட்டைக் கணக்கான நற்பண்புகளை உலகம் எவ்வளவு சுலபமாய் நம்மிடம் அவசியம் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது!

ஆனால் இந்த நினைப்பில் சுயநலம் இருக்கிறது என்று கூறியோ, இவையெல்லாம் இல்லாவிட்டால் என்னவாகும் என்று கூறியோ நாம் சமாதானம் அடைவது பொருத்தமானது.

நினைவோடு செய்தல்; எதையும் திட்டமிட்டுச் செய்தல் ஆகியவற்றில் இருந்து தளறும் போதும் நம் பொறுப்புணர்ச்சி கடுமையாக விமர்சிக்கப்படுகிறது.

பொறுப்புணர்ச்சி மிக்க வேலையாளுக்கு ஒரு முதலாளியோ , ஒரு மேலதிகாரியோ எல்லாச் சலுகைகளையும் தருகிறேன் என்கிறார். அவனுக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுத்துச் செல்லப் பிள்ளையாக நடத்துகிறார்.

எதையும் பொறுப்போடு செய்பவர்களுக்கு அல்லது நடந்து கொள்பவர்களுக்கு வேலைப் பளு அதிகமாக இருக்கும்.அவர்களிடம் கடமைகள் மித மிஞ்சி ஒப்படைக்கப்படும்.இது ஒரு நேரத்தில் சலிப்பை ஏற்படுத்தினாலும் அவை அவர்களுக்குக் கிடைத்த பாராட்டுப் பத்திரங்கள் என்றெண்ணி ஆறுதல் கொள்ள வேண்டும்.வேறு வழியில்லை.

திடுதிப்பென்று பொறுப்புணர்ச்சியை வரவழைத்துக் கொள்ள எப்படி முடியும் என்று மலைப்பவர்களும் , வியப்பவர்களும் ஒரே விடயத்தை அளவுகோலாகக் கொள்ளலாம்.

அது மற்றவர்கள் நம்மிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறார்கள்.நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென விரும்புகிறார்கள் என்பதில் சிறிதேனும் கவனம் செலுத்துவது மற்றவர்களது உணர்வுகளைப் பற்றி, அக்கறை கொள்ளாதவர்கள் அல்லது கவலை கொள்ளாதவர்கள் தாம் பொறுப்பற்றவர்களாகத் திகழ்கிறார்கள்.

இதைச் செய்தால் என்ன ஆகும், இதைச் செய்யாவிட்டால் என்ன ஆகும் என்ற கேள்வியை அவசியம் எழுப்பி விடை தேட முயலவேண்டும்.ஒரு செயலைச் செய்யாதிருத்தல்-செய்தல் ஆகியவற்றின் விளைவுகளை விரிவாகச் சிந்திக் கிறவர்களுக்கு நிச்சயம் பொறுப்புணர்ச்சி வரும்.

வாழ்க்கையில் பிடிப்பற்றவர்களும் வாழத் தெரியாதவர்களும் பொறுப்பவர்களாய் இருந்தால் அவர்களை மன்னித்துவிடலாம்.

ஆனால் இவர்கள் அல்லாத மற்றவர்கள் பொறுப்பற்று இருப்பது என்பது ஜீரணிக்க முடியாத ஒன்று.

**லேனா தமிழ்வாணன்**




# 85 எம்.பிக்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் ரிட்மனு

*(கொழும்பு)*

***ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 85 பேர் தமக்கு வழங்கப்பட்ட தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரங்களை துஷ்பிரயோகம செய்ததாக குற்றஞ்சாட்டி உச்சநீதிமன்றத்தில் பொதுநல ஆர்வலர்கள் ரிட் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.***

இந்த விடயம் தொடர்பில் நம்பகமான மற்றும் சுதந்திரமான விசாரணையொன்றை இலஞ்ச ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழு மேற்கொள்ள வேண்டுமென்ற பணிப்புரையை உச்சநீதிமன்றம் வழங்க வேண்டுமென அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழு கடமையை சரியாகச் செய்வதிலிருந்து தவறியிருப்பதாக மனுவைத் தாக்கல் செய்துள்ள சட்டத்தரணி நாகநாத கொடித்துவக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தினால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரத்தை பலர் துஷ்பிரயோகம் செய்தமை குறித்து நம்பத்தகுந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டபோதும் இலஞ்ச மோசடி விசாரணை ஆணைக்குழு அது பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளத் தவறியிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரங்களை விற்பனை செய்தமை மற்றும் அரசாங்கத்துக்கு வர வேண்டிய வருமானத்தில் மோசடி செய்தமை என்பன இலஞ்ச மோசடி சட்டத்தின் 70 பிரிவின் கீழ் குற்றங்களென மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இந்த விவகாரம் தொடர்பில் நம்பகமான மற்றும் சுதந்திரமான விசாரணையொன்றை இலஞ்ச மோசடி விசாரணை ஆணைக்குழு மேற்கொள்ளவேண்டுமென்ற பணிப்புரையை உச்சநீதிமன்றம் விடுக்கவேண்டும் எனவும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

தீர்வையற்ற வாகன அனுமதிப்பத்திரங்களை வழங்கியமையால் கடந்த மகிந்த ராஜபக்ஷ நிர்வாகத்தில் அரசாங்கத்துக்குப் பாரிய இழப்பு ஏற்பட்டிருப்பதாக 2014ஆம் ஆண்டு டிசெம்பர் 11 ஆம் திகதி இலஞ்ச மோசடி விசாரணை ஆணைக்குழுவில் முன்வைத்த முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியிருந்தேன். இதன் பின்னர் 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதி நிதி அமைச்சர் பாராளுமன்றத்தில் முன்வைத்த முதலாவது கொள்கைத் திட்ட அறிவிப்பில் 40 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான சூழ்நிலையில் 2016ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி நிதி அமைச்சர் வெளியிட்டுள்ள 1965/2 இலக்க வர்த்தமானி அறிவித்தலில் எம்.பிக்களுக்கான தீர்வையற்ற வாகனங்களின் இயந்திர கொள்ளளவு அல்லது எரிபொருள் வகை உள்ளிட்ட தகவல்கள் குறிப்பிடப்படவில்லையென மனுதாரர் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சரின் திட்டமிட்ட நடவடிக்கையானது அரசாங்கத்தின் வருமானத்தில் 7 பில்லியன் ரூபா நட்டத்துக்கு வழியேற்படுத்தியுள்ளது. 2016 டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி தலா 33 மில்லியன் ரூபா வரிப் பெறுமதியைத் தவிர்த்து 85 விலையுயர்ந்த வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட பெரும்பாலான வாகனங்கள் முதலில் இறக்குமதி செய்த பாராளுமன்ற உறுப்பினரின் பெயரின் கீழ் மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டதுடன், உடனடியாக வேறு நபர்களுக்கு அது மாற்றப்பட்டிருப்பதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வாகனங்களைப் பெறுவது பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லையென்றால் வாகனத்தைப் பயன்படுத்தும் ஒவ்வொரு நபரும் 300 வீதமான வரிகளைச் செலுத்த வேண்டுமென மனுதாரர் கேட்டுக்கொண்டுள்ளார். ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த 85 பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உதய கம்மன்பில, ரமேஷ் பத்திரன, சுஜீவ சேனசிங்ஹ, மொஹான்லால் கிரேரோ, சமல் ராஜபக்ஷ, விஜயகலா மகேஷ்வரன், அஜித் பி பெரேரா, எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, ஜோன் அமரதுங்க, இரா.சம்பந்தன், வடிவேல் சுரேஷ் உள்ளிட்ட 85 உறுப்பினர்களின் பெயர்கள் இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர், பிரதமர் உள்ளிட்டோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (இ-3-10)

# இருட்டறையில் எனது வாழ்வு

## 25 வருடங்கள் சிறையிலிருக்கும் நளினியின் வலிகளைச் சுமந்த நெடுந்தொடர்..... 16

"எங்களின் காதல் திருமண விவகாரம் அம்மாவுக்குத் தெரிந்து அது பிரச்சினையானதால் நான் தான் தம்பி பாக்கியநாதனின் அச்சகத்தில் தற்காலிகமாக தங்கச் சொன்னேன். நான் வேலை முடிந்து தினமும் அவரைச் சென்று பார்த்துவிட்டு உணவை வாங்கிக் கொடுத்துவிட்டு பிறகுதான் வீட்டுக்குச் செல்கிறேன். என்னைப் பின்தொடர்ந்து கண்காணிக்கும் பொலிஸாருக்கு நான் என் கணவரை சந்திப்பதும் அவர் அங்கே இருப்பதும் தெரிந்தபடிதான் இருந்திருக்கும்."



...அதாவது சங்கர் மூலமாக சிவராசன் பெயரும் ஹரிபாபு கமரா மூலமாக சிவராசன் படமும் சி.பி.ஐக்கு கிடைத்து விட்டன. கையில் சந்தன மாலையோடு நின்றிருந்த தனுவின் படம் 26 ஆம் திகதி பத்திரிகைகளில் வெளியானது. அடுத்த நாள 27ஆம் திகதி மாலை நாளேடுகளில் பைஜாமா- குர்தா அணிந்த சிவராசனுடைய படங்கள் வெளியாகின்றன.

ஹரிபாபு, புகைப்பட நிபுணர் சுபா சுந்தரத்தின் மாணவர் என்பதால் 23ஆம் திகதியில் இருந்தே அவரை விசாரிக்கத் தொடங்கி 29ஆம் திகதி அவரை கைது செய்தனர். அப்படியே ஹரிபாபுவின் மற்ற நண்பர்களையும் விசாரிக்கத் தொடங்கி விட்டிருந்தார்கள். ஆக இந்தப் பாதையிலும கோணத்திலும் பொலிஸ் உள்ளே நுழைந்து போய்க் கொண்டிருந்தது.

அதேபோன்று ஜூன் 3ஆம் திகதி அன்று என் தம்பி பாக்கியநாதனையும் விசாரிக்கத் தொடங்கினார்கள். அதாவது தினமும் வந்து அழைத்துச் செல்வார்கள். விசாரிப்பார்கள். மதிய உணவுக்கு கொண்டு வந்து விடுவார்கள். மீண்டும் அழைத்துச் சென்று மாலையில் கொண்டுவந்து விடுவார்கள். மீண்டும் அதிகாலையில் வந்து அழைத்துக்கொண்டு போவார்கள். இப்படியே இருந்துவிட்டு மூன்று நாட்களுக்குப் பிறகு 6ஆம் திகதி அன்று என் தம்பியை கைது செய்கிறார்கள். ஆக, எங்கள் வீட்டைச் சுற்றி பொலிஸ் கண்காணிப்பு இருந்தபடியே இருந்துள்ளது. பேரறிவாளனை எடுத்துக் கொண்டால் மே 23ஆம் திகதி அன்றே தமது உடைமைகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு ஊருக்குப் போய்விட்டிருந்தார். பிறகு, அவரையும் விசாரித்துக்கொண்டு ஜோலார்பேட்டை வரையிலும் போய் நின்றார்கள். அங்கேயும் பொலிஸ் வளையம் போடப்பட்டுவிட்டது.

இதற்கிடையில், என் கணவர் தொடர்ந்து எங்களின் ராயப்பேட்டை வீட்டில் தங்க முடியாத நிலை. அதாவது, எங்களின் காதல் திருமண விவகாரம் அம்மாவுக்குத் தெரிந்து, அது பிரச்சினையானதால், நானதான் தம்பி பாக்கியநாதனின் அச்சகத்தில் தற்காலிகமாக தங்கச் சொன்னேன். நான் வேலை முடிந்து தினமும் அவரைச் சென்று பார்த்துவிட்டு, உணவை வாங்கிக் கொடுத்துவிட்டு, பிறகுதான் வீட்டுக்குச் செல்கிறேன். என்னைப் பின்தொடர்ந்து கண்காணிக்கும் பொலிஸாருக்கு நான் என் கணவரை சந்திப்பதும் அவர் அங்கே இருப்பதும் தெரிந்தபடிதான் இருந்திருக்கும். ஜூன் 6ஆம் திகதி என் தம்பியை கைது செய்துகொண்டு போன பின்னர், மூன்று தினங்கள் கழித்து 9ஆம் திகதி அன்று என் அம்மா, தங்கை கல்யாணி, தோழி பாரதி, மனநலம் குன்றிய மாமா இராசரத்தினம் ஆகியோரை கைதுசெய்தார்கள். அதே தினத்தில் ஜெயக்குமார், அவரது மனைவி சாந்தி, அவர்களின் குழந்தை ஆகியோரையும் கைது செய்தார்கள். அடுத்த நாள் ஜூன் 10ஆம் திகதி அன்று ராபர்ட் பயஸ் அவரது குடும்பத்துடன் கைதுசெய்யப்பட்டார். மேலும் தொடர்ந்து தேடப்பட்டுக் கொண்டிருந்த பேரறிவாளன் 11ஆம் திகதி அன்று சரண்டர் ஆக, அவரையும் கைதுசெய்ததாக அறிவித்தார்கள்.

மறுநாள் எனது புகைப்படம் பத்திரிகைகளில் பிரசுரமாகிறது. கூடவே, என் கணவரின் விபரங்களும் அடையாளங்களும் தாஸ் என்ற பெயரில் வெளிவருகின்றன. அதற்கடுத்த நாளே கணவரின் புகைப்படமும் வெளிவருகிறது. ஆனால், அது கணவரின் உண்மையான புகைப்படம் அல்ல. கணவரின் அடையாளங்களை துல்லியமாகத் தெரிந்தவர் சொல்லச் சொல்ல கணனியில் தயார் செய்யப்பட்ட கிராஃபிக்ஸ் படம்தான் அது. அந்தப் படத்தில் என் கணவர் முகம் மிகத் துல்லியமாக இருந்தது. இவர்கள் எல்லாம் பிடிபட்ட பிறகு கடைசியாகத்தான் நாங்கள் ஜூன் 14ஆம் திகதி நடு இரவில் சைதாப்பேட்டை பேருந்து நிறுத்தத்தில் வந்து இறங்கியபோது கைது செய்யப்பட்டோம். நாங்கள் அடையாளம் காட்டி யாரும் பிடிபட வாய்ப்பில்லை. கடைசியாகத்தான் நாங்கள் கைதாகினோம்.

சம்பவம் நடந்த மே 21ஆம் திகதியில் இருந்து. ஜூன் மாதம் 14ஆம் திகதி வரை 24 நாட்களும் நான் மேலே சொன்ன நபர்களில் சிலரை எல்லாம் சிவராசன் தொடர்ந்து சந்தித்துக் கொண்டுதான் இருந்துள்ளார். இதனை சி.பி.ஐயினரின் ஆவணங்களே பல இடங்களிலும் பதிவு செய்திருக்கின்றன. சில சாட்சிகளின் வாக்குமூலமும் அப்படி இருக்கிறது.

(வலிகள் தொடரும்...)



நளினி, அரித்ரா, முருகன்

# 2017 ம் ஆண்டு ஆரம்பத்தில் உள்ளூராட்சி மன்றத்தேர்தல்

## ஜனாதிபதி மைத்திரி முக்கிய தீர்மானம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் தலைவர்களுக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றுகூடி, நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை, உள்ளூராட்சிசபைத் தேர்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்துரையாடியதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இதன்போது உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் நடத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

இதேவேளை எல்லை நிர்ணயம் தொடர்பான விடயங்களை சீர்செய்வதற்கென நியமிக்கப்பட்ட குழு, தனது இறுதி அறிக்கையை எதிர்வரும் 27 ஆம் திகதி சமர்ப்பிக்க தயாராகியுள்ளதாக அதன் தலைவர் அசோக்க பீரிஸ் தெரிவித்தார்.

குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் உரிய அமைச்சரிடம் அந்த அறிக்கை கையளிக்கப்படும் எனவும் அசோக் பீரிஸ் சுட்டிக்காட்டினார். இதன்பின்னர் குறித்த குழு முன்வைத்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் தேர்தல் பிரிவுகள் உருவாக்கப்பட்டு, அவை வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளது. தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை விடரங்களும் வர்த்தமானியில் வெளியிடப்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(இ-3-10)



# துருக்கிக்கான ரஷ்ய தூதுவர் சுட்டுக்கொலை

துருக்கி நாட்டுக்கான ரஷ்யாவின் தூதுவர் அன்டிரி கார்லோவ் துருக்கி நாட்டு பொலிஸார் ஒருவரினால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் அலெப்போ சிரியாவை மறக்க வேண்டாம் எனத் தெரிவித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. துருக்கியின் அங்காரா நகரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டபோதே இவர் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகியுள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர் துருக்கி நாட்டின் கலகத் தடுப்புப் பொலிஸ் உத்தியோகத்தர் எனவும் அவர் சம்பவம் இடம்பெற்ற வேளையில் கடமையில் இருக்கவில்லையெனவும்கூறப்படுகின்றது. இது ஒரு பயங்கரவாதத் தாக்குதல் என ரஷ்ய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது. இதே வேளை, தூதுவர் மீது துப்பாக்கிப் பிரயோகம்மேற்கொண்டவர் தக்பீர் ஓசையை எழுப்பியுள்ளதாகவும்அலெப்போவை நினைவுபடுத்தியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இருப்பினும் ஜிஹாத் குழுக்கள் பொதுவாக தமது வலக்கரத்தை உயர்த்தியே தக்பீர் ஓசையை எழுப்புவது வழமை எனவும் குறித்த நபர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தனது இடது கரத்தை உயர்த்தியே தக்பீர் ஓசை எழுப்பியுள்ளதாகவும் அல்ஜெஸீரா செய்தியாளர் ஒருவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவரைக் கொலை செய்த படத்தையும் ரஷ்யாவின் தூதரகமே தயாரித்து வெளியிட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. குறித்த நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்ற தூதுவருக்கான விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் எதுவும் செய்து கொடுக்கப்படாமையானது சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-3-10)

### இலங்கையர்கள் எதிர்கொள்ளும் மற்றுமொரு பிரச்சினை

# வளி மாசு காரணமாக வருடத்தில் 7,800 பேர் உயிரிழக்கின்றனர்

இலங்கையில் வளியில் ஏற்படும் மாசு காரணமாக வருடாந்தம் ஏழாயிரத்து 800 பேர் மரணிப்பதுடன், வீட்டினுள் காணப்படும் வளி மாசடைவதால் அதிக உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. வாகனங்களின் பயன்பாடு அதிகரித்துள்ளதால் வளிமாசடையும் வீதமும் உயர்வடைந்துள்ளது.

கொழும்பை விட கண்டியில் வளி அதிகளவில் மாசடைந்துள்ளமைகண்டறியப்பட்டுள்ளது. விறகுகளைப் பயன்படுத்தி, உணவை சமைப்பதால்கிராமங்களில்வீட்டினுள் காணப்படும் வளி மாசடைவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உலகளாவிய ரீதியில் வளி மாசடைதல் காரணமாக வருடாந்தம் 8 மில்லியன் பேர் உயிரிழப்பதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 4 தசம் 3 மில்லியன் பேர் வீட்டினுள் காணப்படும் வளி மாசடைவதால் உயிரிழக்கின்றமை பதிவாகியுள்ளது. எரிபொருளை தவிர ஊது வர்த்தி மற்றும் நுளம்புச் சுருள்கள் மூலமும் வளி குறிப்பிடத்தக்க அளவில் மாசடைவதாக பேராதனை பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் பிரிவு முன்னாள் பேராசிரியர் ஓ.ஏ.இளயப்பெரும சுட்டிக்காட்டியுள்ளார்.(இ-3-10)

# இந்திய மீனவர்களால் 9000மில்லியன் இழப்பு

இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதன் காரணமாக வருடத்துக்கு 9000 மில்லியன் இழப்பு ஏற்படுவதாக மீன்பிடி மற்றும் நீர்வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையிலேயே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி காரணமாக இலங்கையின் பொருளாதார வளம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் வாரத்துக்கு 6000 தொன் மீன்கள் சட்ட விரோதமாக இந்திய மீனவர்களால் பிடிக்கப்படுகின்றது. மேலும் ஒவ்வொரு வாரத்திலும் 3 இந்திய சட்ட விரோத படகுகளும் வருடத்துக்கு 5000 இற்கும் மேற்பட்ட படகுகளும் இலங்கை கடற் பரப்புக்குள் நுழைகின்றன. இது இலங்கையின் மீன்பிடித்துறைக்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரும் பாதிப்பாகவுள்ளதாக தெரிவித்தார்.(இ-3-10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 934

புவனேஸ்




சர்மி




சக்தி




சிந்து




அபிராம்




அபிஷா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



# சிறுவர் அரங்கம்

# புதையல்

திருவெண்ணெய் நல்லூரில் பேராசைக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் எந்த பொருளை பார்த்தாலும் அதைத் தான் அடைய வேண்டும் என நினைப்பான். எனவே, நாளடைவில் பார்த்தசாரதி என்ற அவனுடைய பெயரே மறைந்து போய் பேராசைக்காரனாயிற்று.

ஒரு நாள் வெளியூருக்கு வியாபார நிமித்தமாக வண்டியில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு சென்றான்.

புதையல்! வியாபாரம் முடிந்து காட்டு வழியாக வந்து கொண்டிருந்தான். தண்ணீர்வேட்கை கொண்ட அவன் கண்களுக்கு கிணறு ஒன்று தெரிந்தது. வண்டியை விட்டு இறங்கிய அவன் அந்தக் கிணற்றருகே சென்றான். ஒரு பாத்திரத்தில் கயிற்றைக் கட்டி அதைக் கிணற்றுக்குள் விட்டுத் தண்ணீர் எடுக்கத் தொடங்கினான்.

கிணற்றுக்குள் இருந்து "யார் இங்கே தண்ணீர் எடுப்பது?' என்ற பயங்கரமான குரல் கேட்டது.

அஞ்சி நடுங்கிய அவன் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தான். உள்ளே யாரும் இருப்பதாகத் தெரியவில்லை. நடுங்கும் குரலில், "ஐயா! நான் ஒரு ஏழை. தண்ணீர் குடிப்பதற்காக இங்கு வந்தேன். நீங்கள் யார்?" என்று கேட்டான்.

"விரும்பியதை எல்லாம் கொடுக்கும் மந்திரக் கிணறு இது. இதைப் பாதுகாக்கும் பூதம் நான். யார் கண்ணுக்கும் நான் தெரியமாட்டேன்," என்றது அந்தக் குரல்.

"மந்திரக்கிணறா! விரும்பியதை எல்லாம் தருமா?" என்று வியப்புடன் கேட்டான் அவன்.

"உன்னிடம் பொற்காசுகள் உள்ளதா? ஒரு பொற்காசை இந்தக் கிணற்றுக்குள் போடு உன் விருப்பம் எதுவானாலும்கேள். உடனே அது நிறைவேறும். நன்றாக நினைவு வைத்துக் கொள். இரண்டு முறைதான் இந்தக் கிணறு உன் எண்ணத்தை நிறைவேற்றும்," என்றது அந்தக் குரல்.



"என்னதான் நடக்கிறது பார்ப்போமே' என்ற எணணத்தில் ஒரு பொற்காசை கிணற்றுக்குள் போட்டான்.

"விலை உயர்ந்த நகைகளாலும் பொற்காசுகளாலும் என் வண்டி நிரம்ப வேண்டும்" என்றான் அவன்.

ஒரு நொடிக்குள் அவன் வண்டி பொற்காசுகளாலும் நகைகளாலும் நிரம்பி இருந்தது. இதைப் பார்த்து வியப்படைந்தான் அவன்.

"ஆ! ஏராளமான செல்வம் கிடைத்துவிட்டது. இந்த நாட்டிலேயே பெருஞ்செல்வன் நான் தான்," என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டே வண்டியில் அமர்ந்தான்.

"ஐயோ! காட்டு வழியாகச் செல்ல வேண்டுமே! வழியில் திருடர்கள் இருப்பார்களே... அவர்கள் இந்த நகைகளையும் பொற் காசுகளையும் கைப்பற்றிக் கொள்வார்களே! என்ன செய்வது?' என்று சிந்தித்தான்.

(தொடரும்...)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

12.2016 21

- 69 - வெஸ்பசியான் ரோமப் பேரரசின் ஒரே ஆண்டில் 4வது பேரரசனாக முடிசூடினான்.
- 1768 இல் நேபாளம் ஒரு குடையின் கீழ் கொண்டுவரப்பட்டு இன்றுவரையுள்ள நாடு தோற்றுவிக்கப்பட்டது.
- 1902 - இலங்கையில் போவர் போர்க் கைதிகளாக இருந்தவர்கள் தென்னாபிரிக் காவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.
- 1913 - உலகின் முதலாவது குறுக்கெழுத்துப் போட்டி "நியூயோர்க் வேர்ல்ட்" பத்திரிகையில் வெளியானது.
- 1967 - உலகின் முதலாவது இருதயமாற்றுச் சிகிச்சை பெற்ற தென்னாபிரிக்காவைச் சேர்ந்த லூயிஸ் நாஷ்கான்ஸ்கி சிகிச்சை பெற்று 18 நாட்களின் பின்னர் இறந்தார்.
- 1968 - சந்திரனுக்கான மனிதனை ஏற்றிச் சென்ற விண்கலம் அப்பல்லோ 8 புளோரிடாவில் இருந்து ஏவப்பட்டது. புவியீர்ப்பைத் தாண்டிச் சென்ற முதலாவது மனித விண்கலம் இதுவாகும்.
- 1971 - ஐநா அவையின் பொதுச் செயலாராக கூர்ட் வால்ட்ஹெயிம் தெரிவானார்.
- 1973 - அரபு-இஸ்ரேல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஜெனீவா மாநாடு ஆரம்பமானது.
- 1979 - ரொடீசியாவின் விடுதலைக்கான உடன்பாடு லண்டனில் கைச்சாத்திடப்பட்டது.
- 1988 - ஸ்கொட்லாந்தில் லொக்கர்பி என்ற இடத்தில் பறந்து கொண்டிருந்த அமெரிக்க விமானத்தில் குண்டு வெடித்ததில் 270 பேர் கொல்லப்பட்டனர்.
- 1991 - கசக்ஸ்தானின் அல்மா-ஆட்டா நகரில் கூடிய பதினொரு சோவியத் குடியரசுகளின் தலைவர்கள் தனிநாடுகளின் பொதுநலவாய அமைப்பு உருவாகியவுடன் சோவியத் ஒன்றியம் கலைக்கப்படும் என அறிவித் தனர். இதன்படி டிசம்பர் 26 ஆம் நாள் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டது.
- 1992 - டச்சு விமானம் ஒன்று போர்த்துக்கலில் வீழ்ந்ததில் 56 பேர் கொல்லப்பட்டனர்.
- 1995 - பெத்லகேம் நகரம் இஸ்ரேலியர்களிடம் இருந்து பாலஸ்தீனர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.
- 2007 - பாகிஸ்தானில் பெஷாவர் நகரில் மசூதி ஒன்றில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டனர்.

பிறப்புக்கள

- 1932 - யூ. ஆர். அனந்தமூர்த்தி, கன்னட எழுத்தாளர். (இ. 2014)
- 1942 - ஹூ சிங்தாவ், சீன மக்கள் குடியரசின் தலைவர்.
- 1948 - சாமுவேல் ஜாக்சன், அமெரிக்க திரைப்பட நடிகர்.
- 1963 - கோவிந்தா, இந்திய நடிகர்.

இறப்புகள்

- 72 - தோமா (திருத்தூதர்), உரோமைப் புனிதர். (பி. 1)
- 1940 - எப். ஸ்காட் பிட்ஸ்ஜெரால்ட், அமெரிக்க எழுத்தாளர் . (பி. 1896)
- 1988 - நிக்கோ டின்பெர்ஜென், மருத்துவம் அல்லது உடலியங்கியலுக்கான நோபல் பரிசு பெற்ற டச்சு-அமெரிக்கர். (பி. 1907)
- 2006 - வரதர், ஈழத்தின் மறுமலர்ச்சி எழுத்தாளர் . (பி. 1924)
- 2008 - கே. இந்திரகுமார், ஈழத்து எழுத்தாளர், நடிகர்.
- 2015 - ஹரி ஸ்ரீனிவாசன், தொழுநோய் மருத்துவர், எழுத்தாளர் . (பி. 1929)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 100 | 90 | 50 | 50 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 100 | 100 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 70 | 120 | 100 | 160 | 100 |
| தக்காளி | 60 | 100 | 60 | 80 | 70 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 100 | 40 | 60 | 60 | 100 | 80 |
| கோவா | 30 | 80 | 20 | 30 | 40 | 50 | 30 |
| கரட் | 80 | 100 | 80 | 80-140 | 100 | 160 | 100 |
| பூசணி | 40 | 100 | 35 | 40 | 40 | 60 | 50 |
| புடோல் | 60 | 100 | 60 | 80 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 40 | 100 | 45 | 50 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 80 | 100 | 100 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 | 120 | 110 | 120 | 100 |
| பாகற்காய் | 250 | 400 | 220 | 280 | 240 | 240 | 400 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 120 | 80 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 120 | 90 | 80 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 60 | 120 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 50 | 60 | 100 | 100 | 60 |
| கறிமிளகாய் | 160 | 120 | 130 | 200 | 120 | 200 | 100 |
| முருங்கைக்காய் | 400 | — | 250 | 600 | 300 | 160 | 400 |
| போஞ்சி | 120 | 120 | 260 | 140 | 130 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 50 | 50 | — | 50 | 30 |
| கீரை - 1பிடி | 60 | 50 | 40 | 50 | 20 | 50 | 40 |
| தேசிக்காய் | 300 | 300 | 400 | 400 | 400 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 20-40 | 50 | 35 | 40 | 50 |
| இராசவள்ளி | 300 | 500 | 210 | 400 | 300 | — | 400 |
| வெங்காயப்பூ | 300 | 200 | — | — | 240 | 80 | 200 |
| முள்ளங்கி | 80 | 120 | 50 | 80 | 60 | 40 | 70 |
| பொன்னாங்காணி | 35 | 60 | 10 | 30 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 30 | 10 | 10 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 80 | 100 | 50 | 80 | 60 | 100 | 70 |

# ஜெயலலிதா மரணத்தின் மர்மங்கள்!






எம்.ஜி.ஆர். புதைக்கப்பட்ட இடத்துக்கு அருகிலேயே ஜெயலலிதாவும் புதைக்கப்பட்டிருக்கிறார். எம்.ஜி.ஆர். பெயரைச் சொன்னாலே ஜெயலலிதா முகம் நினைவுக்கு வரும். ஜெயலலிதா பெயரைச் சொன்னாலே எம்.ஜி.ஆர். முகம் நினைவுக்கு வரும். இந்த பந்தம் தான் மரணத்துக்குப் பிறகும் தொடர்கிறது அவர்கள் இருவருக்குள்ளும்!

ஜெயலலிதா இறந்துவிட்டார் என்றதுமே 'அம்மாவை எங்கே அடக்கம் செய்வார்கள்?' என்பது தான் அனைவர் மனதிலும் எழுந்த கேள்வி. "கடற்கரையில்தான் வைப்பார்கள்" என ஒரு தரப்பு சொன்னது. "சிறுதாவூர் பங்களாவில் வைக்கப் போகிறார்கள். சில மாதங்கள் கழித்து அங்கு நினைவகம் எழுப்புவார்கள்" எனவும சொல்லப்பட்டது. ஆனால், சிறுதாவூர் சென்னைக்கு வெளியே இருப்பதால் ஒதுக்குப் புறமாகப் போய்விடும் என நினைத்தார்கள். அப்பலோவில் இருந்து ஜெயலலிதா உடல் போயஸ் கார்டனுக்கு எடுத்துச் செல்லப்படும் முன்பே, கடற்கரையில்தான் உடல் அடக்கம் செய்யப்படும் என்ற தகவல் வெளியானது.

இரவோடு இரவாக, பொதுப் பணித்துறை அதிகாரிகள் எம்.ஜி.ஆர். சமாதிக்குச் சென்று வேலைகளைத் தொடங்கினார்கள். எம்.ஜி.ஆர். சமாதிக்கு நேர்கோட்டில் கொஞ்சம் தள்ளி இடம் தோண்டப்பட்டது. அந்த இடத்தை பார்க்கக் கூட்டம் திரண்டிருந்தது. ராஜாஜி ஹோலில் ஜெயலலிதா உடலைப் பார்த்துவிட்டு வந்த கூட்டம் நேராக அங்கே வர, பெரும் கூட்டம் கூடியது. அங்கிருந்தவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றிக் கொண்டிருந்தது பொலிஸ். லொறிலொறியாக கொண்டு வரப்பட்ட இரும்பு தடுப்புகளைக் கொண்டு சமாதியின் நுழைவு வாயில்கள் அடைக்கப் பட்டன. எம்.ஜி.ஆர். சமாதிக்கு வெளியே இருந்த கூட்டம், "எங்களை உள்ளே விடுங்கய்யா" என பொலிஸாரிடம் போராடிக் கொண்டிருந்தார்கள். சமாதியில் சவப் பெட்டியை வைப்பதற்கான உள்பகுதி சீமெந்து செங்கல்லால் எழுப்பப்பட்டது. நண்பகல் 12 மணிக்கு மேல் பொலிஸ் வாகனம் தவிர, எந்த வாகனமும் கடற்கரை வீதியில் நுழையத் தடை விதிக்கப்பட்டது. நண்பகலுக்குள் ஜெயலலிதா உடல் அடக்கம் செய்யப்படும் இடம் தயாரானது, வி.ஐ.பிக்கள் அமர்வதற்கான குஷன் கதிரைகள் கொண்டுவரப்பட்டன.

ஜெயலலிதா உடலை அடக்கம் செய்வதற்கான சந்தன மரத்தால் செய்யப்பட்ட பெட்டி வந்து சேர்ந்தது. அந்தப் பெட்டியை அடக்கம் செய்யும் குழி அருகே ரோலிங் கயிற்றை வைத்து குழிக்குள் இறக்கி ஒத்திகை பார்த்தார்கள். ராஜாஜி ஹோலில் இருந்து இறுதி ஊர்வலம் கிளம்பியது. ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது அவருடைய கான்வாய் போல அமைந்திருந்தது இறுதி ஊர்வலம். தமிழக பொலிஸார் அணிவகுத்து முன்னே வந்தனர். அதன்பின் ஜாமர் வாகனம், பைலட், வாகனங்கள் வந்தன.


முதலில் வந்த பைலட் காரில் அரசின் ஆலோசகர் ஷீலா பாலகிருஷ்ணன் அமர்ந்திருந்தார். ஜெயலலிதாவின் உடல் கொண்டு வரப்பட்ட இராணுவ வண்டியில் சசிகலா, பன்னீர்செல்வம், உ.பி. முதல்வர் அகிலேஷ் யாதவ், இளவரசி மகள் பிரியா ஆகியோர் அமர்ந்திருந்தனர். அதற்குள் சசிகலாவின் உறவினர்கள் அனைவரும் குஷன் நாற்காலிகளை ஆக்கிரமித்திருந்தனர். பாதுகாப்பு வாகனத்திலே சசிகலாவின் கணவர் நடராஜனும் வந்து சேர்ந்தார்.

ஜெயலலிதாவின் உடலை இராணுவத் தளபதிகள் சுமந்தபடியே சமாதிக்குள் நுழைந்தனர். அங்கே ராகுல் காந்தி உள்ளிட்டவர்கள் மலர் தூவி உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். உடல் அடக்கம் செய்யப்பட்ட சந்தனப் பெட்டியின் உள்ளே உப்பு பக்கெட்டுகளும் சில கெமிக்கல்களும் போடப்பட்டிருந்தன. அந்தப் பெட்டிக்குள் பகவத் கீதையின் ஒரு பகுதி வைக்கப்பட்டது. அதோடு ஜெயலலிதா பயன்படுத்தும் வாசனைத் திரவியம் ஸ்பிரே செய்யப்பட்டது. ஜெயலலிதாவின் உடல் குழிக்கு அருகில் இறக்கப்பட்டதும் சொல்லி வைத்தார் போல அங்கே வந்து நின்றார் சசிகலா. உடலை இறக்கி வைத்த இராணுவத் தளபதிகள், தேசியக் கொடியை மடித்து அதை சசிகலாவிடம் கொடுத்தார்கள். அந்தக் கொடியை வாங்கத்தான் சசிகலா தயாராக அங்கு வந்து நின்றார். உடலை சந்தனப் பெட்டிக்குள் வைத்ததும் சசிகலாவின் ஆஸ்தான புரோகிதரான தேவாதி, இறுதிச் சடங்குகளை செய்ய ஆரம்பித்தார்.



தீபக், சசிகலா, தேவாதி

சடங்குகளை யார் செய்வார்கள் என்கிற சஸ்பென்ஸ் சில நிமிடங்களில் உடைந்தது. ஒரு இளைஞரை கையைப் பிடித்து அழைத்து வந்தார் சசிகலா. அவர் ஜெயலலிதாவின் அண்ணன் மகன் தீபக். இதுவரை தலை காட்டாத தீபக் திடீரென வந்தது பலரின் புருவத்தை உயர்த்தியது. பெட்டியைச் சுற்றிலும் சிறிய அளவி லான சந்தனக் கட்டைகளைப் போட்டார்கள். திருநீறு தூவி, உடலைச் சுற்றிப் பால் தெளித் தார்கள். தேவாதி சொல்லச் சொல்ல சசிகலாவும் தீபக்கும் இதை செய்தா ர்கள். இரத்த உறவுகளே இறுதிச் சடங்குகளை செய்வது வழக்கம். ஆனால், அதிலும் சசிகலாதான் பிரதானமாக இடம் பெற்றார். இறுதிச் சடங்குகள் முடிந்து உடல் வைக்கப்பட்ட பெட்டி மூடப்பட்ட போது சுற்றியிருந்தவர்கள் கதறினார்கள். முதல்வர் பன்னீர்செல்வம் அழுகையை அடக்க முடியாமல் தேம்பத் தொடங்கினார். இராணுவ வீரர்கள் வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டு மரியாதை செய்தனர். சந்தனப் பெட்டி குழிக்குள் வைக்கப்பட்டதும் சுற்றி நின்ற சிலர், செயின், பணம் போன்றவற்றை குழிக்குள் வீச முற்பட்டதால் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. மண்ணால் குழியை முழுவதும் மூடிய பிறகே அங்கிருந்து சசிகலா உள்ளிட்டவர்கள் கிளம்பினார்கள். எம்.ஜி.ஆருடன் அரசியலில் பயணித்த ஜெயலலிதா, இறுதிப் பயணத்தை எம்.ஜி.ஆர். அருகிலேயே நிறைவு செய்து விட்டார்.






சந்தனப் பெட்டி

முற்றும்

ஜூனியர் விகடன்

# வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் பிரதேசங்கள்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் விசேட உரை



வடக்கு-கிழக்கில் எத்தனை சிங்களவர்கள் வாழ்கின்றார்கள் என்பது அல்ல முக்கியம். வடக்கு-கிழக்கு பாரம்பரியமாக தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த, வாழ்ந்து வரும் இடங்கள் என்பதையே நாம் யாவருக்கும் உணர்த்த வேண்டிய கடப்பாட்டில் இருக்கின்றோம் என வட மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர்களில் ஒருவருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். தமிழ் மக்கள் பேரவையின் முதலாம் ஆண்டு நிறைவு தின நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### முதலமைச்சரின் முழுமையான உரை

எனதினிய இணைத்தலைவர் டாக்டர் இலக்ஷ்மன் அவர்களே, சமயப் பெரியார்களே, எம்மோடு இணைந்திருக்கும் உறுப்பின சகோதர சகோதரிகளே எல்லோருக்கும் வணக்கம்.பல பிரச்சினைகள் மத்தியிலும் எமது பேரவையின் ஓராண்டுப் பூர்த்திப் பெருங்கூட்டத்தில் கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இன்று கொழும்பில் இருப்பதாகவே இருந்தது.

சென்றைய வார வடமாகாண சபைக் கூட்டத்தை இன்றைய வாரம் ஒத்தி வைத்ததால் நான் கொழும்பில் ஆற்ற வேண்டிய பணிகளை சென்ற வெள்ளிக்கிழமையன்றே முடித்துக் கொண்டு நாளை வர வேண்டியவன் இன்றே வந்து விட்டேன். ஆனால் சீரற்ற காலநிலையால் மூன்று மணித்தியாலங்கள் தாமதமாகியே வந்தேன்.

இந்தக் கூட்டத்தில் நான் கலந்து கொள்ள வேண்டும் என்பது தெய்வ சங்கற்பம் போன்று தோன்றுகின்றது. தமிழ் மக்கள் பேரவை உதயமாகியதே அவ்வாறான ஒரு இறை சங்கற்பமாகவே நான் கருதுகின்றேன். "அரசாங்கம் எது தந்தாலும் பரவாயில்லை எம் மக்கள் நாம் கூறுவதை ஏற்றுக் கொள்வார்கள்" என்றிருந்த சூழலை மாற்றி "இது தந்தால்தான் எம்மக்கள் வரவேற்பார்கள் இல்லையேல் எம்மைப் புறக்கணித்து விடுவார்கள்" என்று கூறக்கூடிய சிந்தனை மாற்றங்களை உருவாக்கியுள்ளது தமிழ் மக்கள் பேரவை.

பாரம்பரியமாகத் தமிழ் பேசும் மக்கள் காலாதி காலமாக வாழ்ந்து வரும் இடங்களை அவ்வாறே தொடர்ந்தும் அடையாளப்படுத்தும் விதத்தில் சட்ட ரீதியான அங்கீகாரத்துடன் நம்மை நாமே ஆளும் உரிமையுடன் நாம் வாழ வேண்டும் என்ற எண்ணக்கருவை மையமாக வைத்தே நாங்கள் எமது அரசியலமைப்பு ரீதியான முன்மொழிவுகளை அரசாங்கத்திடம் கையளித்தோம். முதன் முதலாக வடக்கு -கிழக்கு தமிழ் மக்களின் அடிமட்ட அபிலாஷைகளை அவையறிய நாம் அறிவித்தது இந்தத் தருணத்தில் தான். அந்தக் கணந் தொடக்கம் அடிமட்டத் தமிழ் மக்களின் கரிசனைகளை அரசாங்கம் அசட்டை செய்ய முடியாது என்ற கருத்தை நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

போரின் பின்னர் தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் குரல்கள் சில காலம் ஓங்கி ஒலிக்கத் தவறிவிட்டன. போரில் தோற்று விட்டோமே நாம் எப்படி எமது உரித்துக்களைக் கேட்க முடியும் என்ற ஒரு தாழ்வுமனப்பான்மைக்கு அவர்கள் ஆளாகியிருந்தார்களோ நானறியேன். ஆனால் மக்களின்மனோநிலை என்ன அவற்றைப் பிரதிபலிப்பது எமது கடமையல்லவா என்ற எண்ணத்தை அவர்கள் பலர் அடியோடு மறந்திருந்ததாகவே நான் உணர்ந்தேன்.

ஆங்கிலத்தில் அல்லது சிங்களத்தில் பெரும்பான்மையின மக்களின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டிய எமது மக்களின் அவலங்களை, அபிலாஷைகளை, அங்கலாய்ப்புக்களைப் பாராளுமன்றத்தில் எம் பிரதிநிதிகள் தமிழில் பேசி விட்டு வர அவர்கள் கூறியதை எவருமே கணக்கெடுத்ததாகத் தெரியவில்லை. தாம் பேசியதைத் தமிழ்ப் பத்திரிகைகளில் இடம்பெறச் செய்தால் அதுவே போதும் அரசில் தீர்வுகள் எது கிடைத்தாலும் அதனை ஏற்கலாம். எங்களுக்குத் திருப்பிக் கேட்கும் உரித்து இல்லை என்ற எண்ணத்திலேயே தமிழ் மக்கள் பேரவை ஜனனமாகும் வரையில் எமது தலைமைத்துவங்கள் இருந்து வந்ததாகத் தெரிகின்றது.

தற்போது எமது தலைமைத்துவங்கள் விழித்துக் கொள்ளவும் தன்னம்பிக்கையுடன் முன்னேறவும் நீங்கள் வழி அமைத்துக் கொடுத்துள்ளீர்கள். இந்த ஒருவருடத்தினுள் எமது தமிழ்த் தலைமைத்துவங்கள் தன்னம்பிக்கையுடன் முன்னேற நீங்கள் அடிகோலியுள்ளீர்கள். நாங்கள் எமது தலைமைத்துவங்களுக்கு எதிரானவர்கள அல்ல. அவரகளுக்குப் பக்க பலமாக நின்று மக்கள் பணியில் ஈடுபட்டு வருகின்றவர்களே நாங்கள் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளீர்கள்.

அடுத்து நாங்கள் இராணுவத்திற்குப் பயந்து அரசாங்கத்திற்குப் பயந்து பொலிஸாருக்குப்பயந்து எமது எண்ணக்கருத்துக்களை எடுத்துரைக்க முடியாது பேசாமடந்தைகளாக இருந்த காலத்தை மாற்றி தமிழ் மக்களின் அவலங்களை, ஆசைகளை அகிலமறியப் பொங்கியெழுந்து ஆனால் பொறுமையாக எடுத்துரைத்தமையால் எமது மக்களின் தன்னம்பிக்கையை தளிர்த்தெழச் செய்துள்ளீர்கள். குட்டக் குட்டக்குனியும் மக்கள் அல்ல நாங்கள். குடியுரிமை கேட்டால் குட்டவா பார்க்கின்றீர்கள் என்று குட்டியவனையே குறைகூறும் அளவிற்கு எம்மக்களுக்கு உற்சாகத்தை ஊட்டியவர்களும் நீங்கள் தான்.தமிழ் மக்கள் பேரவை அதன் பொருட்டு பெருமைப்படலாம்.

மூன்றாவதாக நாங்கள் வடக்கு-கிழக்கு மக்களை ஒன்று கூட்டும் வகையில் முத்தமிழ் விழாவொன்றினை மட்டக்களப்பில் நடத்தி தமிழ் பேசும் வடக்கு-கிழக்கு மக்களின் அடுத்திருக்கும் அண்மைத்துவத்தை உலகம் பூராகவும் பறைசாற்றியுள்ளீர்கள். வடக்கு-கிழக்கில் எத்தனை சிங்களவர்கள் வாழ்கின்றார்கள் என்பது அல்ல முக்கியம். வடக்கு-கிழக்கு பாரம்பரியமாகத் தமிழ்ப் பேசும் மக்கள் வாழ்ந்த ,வாழ்ந்து வரும் இடங்கள் என்பதையே நாம் யாவருக்கும் உணர்த்த வேண்டிய கடப்பாட்டில் இருக்கின்றோம்.

சிங்களவர்களிடையே இருக்கும் தமிழர்கள் சிங்களம் பேசுவதும் தமிழ் பேசும் மக்களிடையே வாழும் சிங்களவர்கள் தமிழ் பேசுவதும் நாங்கள் எதிர்பார்க்கக்கூடிய ஒரு விடயந்தான். ஆனால் அடிப்படைகளில் நாங்கள் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும். அதாவது தமிழ் பேசும் மக்களைச் சிங்களம் பேசும் மக்களாக வேண்டுமென்றே மாற்ற எத்தனிப்பதும் அவர்கள் வாழ்ந்து வந்த இடங்களைப் பெயர் மாற்றம் செய்ய முற்படுவதும் இன அழிப்புக்குச் சமமானது என்ற கருத்தை நாங்கள் வலியுறுத்த வேண்டும்.

இதன் காரணத்தினால் தான் வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் கலை, கலாசார ஒற்றுமைப்பாட்டை மக்களுக்கு உணர்த்துவிக்க முத்தமிழ் விழா ஒன்றை நடத்தி அதில் வெற்றியும் கண்டீர்கள்.தமிழ் மக்கள் பேரவை தொடங்கிய நாட்களில் எம்மிடையே இருந்த ஒருவித சந்தேக நிலை, மயக்கநிலை, மந்த நிலை, குழப்ப நிலை ஆகியன தற்போது மலையேறிவிட்டது என்றே கூறவேண்டும்.

எமது இரண்டாம் ஆண்டு நிகழ்ச்சிகளைக் கூடிய வலுவுடன் வீறு கொண்டு செயற்படுத்த வேண்டிய ஒரு தருணத்தை அடைந்துள்ளோம்.

அரசாங்கம் சர்வதேசத்திற்கு அளித்த வாக்குறுதிகளைக் காற்றில் விட்டு விடவே கரவாக இயங்கிவருகின்றது. அதற்கு நாங்கள் இடமளிக்க முடியாது. எமது அரசாங்கம் சர்வதேசத்திடம் சம்மதம் தெரிவித்துக் கொண்ட சட்ட ஆவணங்கள் மூன்றை நாங்கள் எமக்குச் சாதகமாகப் பாவிக்கும் காலம் எழுந்துள்ளது. 2009 மே மாதத்தில் அப்போதைய இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்துடன் சேர்ந்து வெளியிட்ட அறிக்கையில் இனித்தாம் என்னென்ன செய்யவிருக்கின்றார்கள் என்பதை உலகறியச் சொன்னார்கள். அந்தக் கூட்டறிக்கையில் கூறியவை குறையின்றி எமக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதை நாம் ஆராய்ந்து பார்த்து இலங்கை அரசாங்கத்தின் கடப்பாட்டை நாம் அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

அடுத்து இணக்க அடிப்படையில்ஜெனிவாவில்கொண்டு வந்து கைச்சாத்திட்ட பிரேரணையின் பிரிவுகளின் படி இலங்கை அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து விட்டதா? இல்லை என்றால் ஏன் அவ்வாறு செய்யவில்லை? எப்பொழுது செய்யப் போகின்றீர்கள் என்று சட்டரீதியாகக் கேட்டு இலங்கை அரசாங்கத்தின் கடப்பாடுகளை அதற்குணர்த்தி அது காலங் கடத்திச் செல்வதைக் கண்டித்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய கடமை எமக்குண்டு.

மூன்றாவதாக மேலும் ஒரு கடப்பாடு இலங்கை அரசாங்கத்திற்கு இருப்பதை நாம் அவர்களிற்கு இடித்துக் கூறும் கடப்பாடொன்று எமக்கு உதயமாகியுள்ளது.70 வது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் பரிந்துரைகளுக்கு அமைவாக 2030ஆம் ஆண்டில் அடைய எதிர்பார்க்கப்படும நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளை அதாவது Sustainable Development Goals என்ற இலக்குகளை கவனத்திற் கொண்டு எமது அபிவிருத்திப பாதையை நிர்ணயிக்க வேண்டிய கடப்பாடு எமக்குண்டு என்பதை நாம எமது இலங்கை அரசாங்கத்திற்கு எடுத்துரைக்கும் காலம் உருவாகியுள்ளது.

அரசாங்கம் இப்பொழுதெல்லாம் SDGs பற்றிப் பெருமையாகப் பேசி வருகின்றது. ஆனால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மறுவாழ்வுக்காகச் செய்ய வேண்டிய கடப்பாடுகள் பல அவற்றுள் அடங்கியிருப்பதை நாம் அரசாங்கத்திற்கு உணர்த்த முன்வர வேண்டும். சர்வதேச எதிர்பார்ப்பின் படி எங்கள் அரசாங்கம் கைச்சாத்திட்ட அந்த ஆவணத்தின் அடிப்படைகளை அரசாங்கம் நிறைவு செய்துள்ளதா என்ற கேள்விக்கு அரசாங்கத்தைப் பொறுப்புக்கூற நாங்கள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

வறுமை ஒழிப்பு, பசிஒழிப்பு, நற்சுகாதாரம் ,தரமான கல்வி, பாலினச்சமத்துவம் ,தூயநீரும் துப்புரவும், மலிவான மின் போன்ற சக்தி வகைகள் கண்ணியமான வேலை வாய்ப்பும் பொருளாதார மேம்பாடும் கைத்தொழில் புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்புக்களை உருவாக்கல், சமூக ஏற்றத் தாழ்வுகளை அகற்றுதல் ,நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்களை உருவாக்குதல் ,பொறுப்புடைய உற்பத்தியும் நுகர்வும் ,காலநிலை நடவடிக்கை ,நீர்வாழ் உயிரினங்களைப் பாதுகாத்தல்,தரைவாழ் உயிரினங்களைப் பாதுகாத்தல் ,சமாதானம், நீதி கிடைக்கக்கூடிய உறுதியான சமூகங்களையும அமைப்புக்களையும் உருவாக்கல் மற்றும் இலக்குகளை அடைய கூட்டுப்பங்காண்மையை உருவாக்கல்போன்ற 17 இலக்குகளை ஐக்கிய நாடுகள் அடுத்த 15 வருடங்களில் நிலைத்திருக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளாக அடையாளங் கண்டுள்ளது.

எமது நாடு இந்த ஆவணத்திற்கு உடன்பட்டு கைச்சாத்திட்டுள்ளது என்ற அடிப்படையில் மேற்படி இலக்குகளை அடைவதில் எமக்கும் எமது நாட்டு அரசாங்கத்திற்கும் கூட்டுப் பொறுப்புள்ளது. 16ஆவது இலக்கை எடுத்துப்பார்த்தோமானால் அது பின்வருமாறு கூறுகின்றது.

"நிலைத்த அபிவிருத்திக்காக சமாதானத்துடன் கூடிய எல்லோரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்கல் மற்றும் யாவருக்கும் நீதி கிடைக்கச் செய்தல் மேலும் தக்க உறுதியான அமைப்புக்களைச் சகல மட்டங்களிலும் உருவாக்கல் என்பன" என்று கூறுகின்றது. இவற்றை மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் மதித்து அவற்றை உருவாக்கும் வண்ணம் நடந்து கொள்ள வேண்டிய காலம் எம் அனைவரையும் அண்டி வந்துள்ளது. இதனை நாங்கள் மத்திய அரசாங்கத்திற்கு வலியுறுத்த வேண்டிய தருணம் கனிந்து வந்துள்ளது.

வடமாகாணத்தில்150000 இராணுவ வீரர்களை நிலைத்து நிற்க வைத்துவிட்டு சமாதானத்துடன் கூடிய எல்லோரையும் உள்ளடக்கிய சமூகங்களை உருவாக்க முடியாது. நீதி கிடைக்கச் செய்ய முடியாது. மாகாணத்திற்குரிய உறுதியான அமைப்புக்களை உருவாக்க முடியாது. ஆகவே தகுந்த காரணங்கள் இன்றி தொடர்ந்து இராணுவத்தினரை இங்கு நிலைபெற வைக்கின்றமை மேற்படி நிலையான அபிவிருத்திக்கான இலக்குகளுக்கு முரண்பாடுடையதானது.

ஆகவே இராணுவத்தினரை வெளியேற்றுவது அரசாங்கத்தின் தலையாய கடப்பாடுகளில் ஒன்றாக அமைகின்றது. சர்வதேசம் எதிர்பார்க்கும் சட்டப்படியான கடப்பாடுகள் அரசாங்கத்திற்கு இருந்தால் அவற்றை வெளிக்கொண்டு வந்து "நீங்கள் உங்களின் கடமைகளைச் செய்யவில்லை" என்று குற்றஞ்சாட்டுவது அவர்களுக்கு நெருக்குதல்களைக் கொடுப்பதாக அமைவன. எமக்குச் சுய ஷநிர்ணயத்தைத் தாருங்கள் என்பதிலும் பார்க்க சட்டம் உங்களிடம் இவ் இவற்றை எதிர்பார்க்கின்றது என்று எடுத்துக் காட்டுவது கூடிய பலன் மிக்கதாக அமையும். எனவே அடுத்து வரும் காலங்களில் அரசாங்கத்திற்கு சட்ட ரீதியான நெருக்குதல்களை ஏற்படுதத தமிழ் மக்கள் பேரவை ஆயத்தமாக வேண்டும். அதுவும் வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அவ்வாறான நெருககுதல்களை ஏற்படுத்துவது நல்லது என்று எனக்குப்படுகின்றது.

அந்தவகையில் விரைவில் மட்டக்களப்பில் நடைபெற இருக்கும் "எழுக தமிழ்" கூட்டம் சரியான திசையிலேயே அமைந்திருக்கின்றது. எமக்கேற்ற சாதகமான அரசியல் தீர்வொன்று எமக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது புத்திசாலித்தனமாக எனக்குப்படவில்லை. ஏதோ தந்ததை எடுப்போம் என்ற மனப்பாங்கு எமக்குப்பாரிய பின்னடைவுகளை வருங்காலத்தில் ஏற்படுத்தும். எமது நிலங்கள் பறிபோவன. எமது மொழி புறக்கணிக்கப்படும்.

தெற்கிலிருந்து வந்து வடக்கு-கிழக்கை ஆக்கிரமிக்கும செயற்பாடு விரைவாக நடைபெறும். இதனால் தான் நாங்கள் வலுவான, நிலையான, நீதியான, பொறுப்பான அரசியல் தீர்வொன்றை எதிர்பார்த்திருக்கின்றோம். இந்த நிலையில் தமிழ் மக்கள் பேரவை தொடர்ந்து தமிழ் மக்களின் கருத்துக்களின் காவலனாய் நிர்ணயங்களின் நிறைவேற்றாளனாக கடமையுடன் இயங்க இறைவன அருள் புரிவானாக என்று பிரார்த்தித்து என் இணைத்தலைவருரையை இத்துடன் முடித்துக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.

– கோன்பு தஸன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கு மாகாண சபையில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றுக

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது மிகவும் அவசியமானது. இந்த நாட்டில் சிங்கள மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கும் இனப் பிரச்சினைக்கான தீர்வு அவசியம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் தமிழ் மக்கள் தொடர்பில் சிங்கள மக்களும் முரண்பாடான போக்கைக் கொண்டிருந்தமை உண்மையாயினும் இப்போது அந்நிலைமை இல்லை என்று அடித்துக்கூற முடியும்.

தமிழ் மக்களுக்கு உரிய தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் சிங்கள மக்களில் கணிசமானவர்கள் உடன்பாடான கருத்தைக் கொண்டுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

அதேநேரம் தமிழ் மக்களுக்கு உரிமை வழங்குவதை சிங்கள மக்கள் விரும்பவில்லை என்பது போன்ற ஒரு காட்டாப்பை தென்பகுதி அரசியல்வாதிகளில் சிலரும் பௌத்த பிக்குகள் சிலரும் ஏற்படுத்தி வருகின்றனர். ஆனால் உண்மை அதுவன்று.

இன்றைய சமகால சூழ்நிலையில் சிங்கள மக்களில் பெரும்பாலானவர்கள் அமைதியை, சமாதானத்தை விரும்புகின்றனர்.

நடந்து முடிந்த யுத்தத்தால் ஏற்பட்ட மனித உயிரிழப்புக்கள் தொடர்பில் அவர்களிடம் நிறைந்த கவலையுண்டு.

எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என விசுவாசமாக நினைக்கின்ற சிங்கள மக்களுடன் தமிழ் மக்களினதும் தமிழ் அரசியல் தரப்புக்களினதும் உறவு பலப்பட வேண்டும்.

இத்தகைய உறவுப் பலம் உரிமைகள் அனைவருக்கும் சமமாகக் கிடைக்க வேண்டும் என்ற உணர்வை பெரும்பான்மை இன மக்களிடம் நிச்சயம் ஏற்படுத்தும்.

இதற்கு சிறிது காலம் தேவைப்படலாமாயினும் அதற்கான ஏதுநிலைகள் இப்போதே ஆரம்பிக்கப்பட வேண்டும். நவீர இலங்கையின் அமைதி என்பது தனித்து அரசியலமைப்புகளாகவோ அன்றி இனப் பிரச்சினைக்கான தீர்வுகளாலோ மட்டும் ஏற்பட்டு விட முடியாது.

மாறாக பல்லின மக்களிடையேயான நல்லுறவு, ஒற்றுமை, சிநேகபூர்வம் என்பனவும் அவசியமாகும். அதிகாரங்களும் அரசியலமைப்புகளும் சட்டப் புத்தகப் பதிவுகளேயன்றி அவற்றின் அமுலாக்கம் என்பதில் மனிதர்களே இயக்கிகள். எனவேதான் இன ஒற்றுமை அவசியம்.

இந்த ஒற்றுமைக்கு பேரினவாதிகள் அரசியல்வாதிகளும் மதவெறியர்களும் ஒருபோதும் விடப் போவதில்லை. அதேநேரம் இத்தகையவர்களைக் குறைகூறுவதாலும் ஏதும் நடந்துவிட மாட்டாது.

எனவே இத்தகைய பேரினவாதிகளையும் மதவெறியர்களையும் செயலற்றவர்களாக ஆக்குவதற்கு இன ஒற்றுமையை விரும்புகின்ற சிங்கள மக்களுடன் தமிழ் மக்கள் தமது உறவைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கான அடிப்படைகளை செய்வது கட்டாயமானதாகும்.

இவ்வகையில் அண்மையில் சாவகச்சேரிப் பகுதியில் நடந்த மிகக் கொடூரமான விபத்தில் பதினொரு சிங்கள மக்கள் உயிரிழந்த சம்பவம் தமிழ் மக்களை உலுப்பியது.

இக்கோர விபத்து அறிந்து அழாத தமிழ் உள்ளங்கள் இல்லை எனலாம். இந்த இரக்க குணம் உலகில் எங்கும் கிடையாது என்று சொல்வதில் ஒவ்வொரு தமிழ் மகனும் பெருமையடைய முடியும்.

எனவே சாவகச்சேரியில் நடந்த கோர விபத்தில் தென்பகுதியைச் சேர்ந்த பதினொரு பேர் இறந்த போது தமிழ் மக்கள் பட்ட வேதனையை எங்களுக்குள் மட்டும் வைத்திராமல் அதனை வெளிப்படுத்த வேண்டும்.

இந்த வெளிப்படுத்தல் தமிழ் மக்களிடம் இருக்கக் கூடிய உன்னதமான மனித நேயத்தை வெளி உலகுக்கு வெளிப்படுத்தும்.

ஆகையால் சாவகச்சேரிப் பகுதியில் நடந்த கோர விபத்தில் பலியான நம் சிங்களச் சகோதரர்கள் பதினொரு பேருக்கும் வடக்கு மாகாண சபையில் இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவதுடன் அவர்களின் இறப்புக்கு அனுதாபத் தீர்மானமும் நிறைவேற்ற வேண்டும்.

இதை வடக்கு மாகாண சபை நிச்சயம் செய்யும் என்பதற்கப்பால் இச்செய்கை தென்பகுதியில் மிகப் பெரிய மாற்றங்களையும் கொண்டு வரும் என்பது நம் தாழ்மையான கருத்து.

# அடுத்த ஜனாதிபதி கோத்தபாய

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷவே, அந்தத் தகுதி அவருக்கு மட்டுமே இருக்கின்றது. கூடிய விரைவில் இது நிறைவேறும் என தம்மாலோக தேரர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் ஜப்பானில் கோத்தபாய தலைமையில் ஓர் பௌத்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த நிகழ்வில் ஏராளமான பௌத்தர்களும் பிக்குகளும் கலந்து கொண்டிருந்தனர். அந்த நிகழ்வில் உரையாற்றும் போதே தம்மாலோக தேரர் இதனை தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

இப்போது பௌத்தத்திற்காக குரல் கொடுத்து அதனை பாதுகாத்து சிங்களவர்களை காப்பாற்றும் ஒருவர் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மட்டுமே.

பௌத்தத்தை காக்க பாடுபடுகின்ற ஒருவரும் சிங்கள இனத்தை பாதுகாக்கின்ற ஒருவருமே அடுத்த ஜனாதிபதியாக ஆக முடியும். அந்த வகையில் முழு சிங்களத்தையும் காத்துக் கொண்டு வரும் ஒருவர் முன்னாள் பாதுகாப்பு செயலாளர்.

முழுமையானதோர் சிங்களவராக பௌத்தனாக வலம் வந்து கொண்டிருக்கும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் சாதாரண மனிதர் அல்ல. சிங்களவர்களை காக்க பாடுபடும் மாமனிதர்.

இப்போது போலவே எதிர்காலத்திலும் சிங்களவரே எழுக பௌத்தனே எழுக என பௌத்தத்திற்காக நீங்கள் குரல் கொடுப்பீர்கள் என்று நாம் முழுமையாக நம்புகின்றோம்.

அதன்படி எதிர்காலத்தில் ஜனாதிபதியாகக் கூடிய தகுதி கோத்தபாயவிற்கு மட்டுமே உண்டு. நிச்சயமாக அவர் இலங்கையில் ஜனாதிபதியாக கூடிய விரைவில் பதவி ஏற்பார்.

அப்படி அவர் பதவி ஏற்கும் போது இலங்கையில் ஸ்ரீமஹா போதியில் இருந்து ஓர் புத்தர் சிலையை ஜப்பானில் நிறுவ வேண்டும் இதனை நீங்கள் மறுக்கமாட்டீர்கள் என்பது நிச்சயம்.

நீங்கள் ஜனாதிபதி ஆனவுடன் இந்த வேண்டுகோளை நிறைவேற்றுவீர்கள் என்ற ஆவலுடன் நாம் காத்திருக்கின்றோம் எனவும் தம்மாலோக தேரர் மேலும் தெரிவித்தார். (இ-3-10)

# அலெப்போவில் முற்றுகைக்கு உட்பட்டிருந்த கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேற்றம்

அலெப்போவில் கிளர்ச்சியாளர்களின் முற்றுகைக்கு உட்பட்டிருந்ததும், தற்போது அரச ஆதரவு படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளதுமான இட்லிப் மாகாணத்தின் இரண்டு கிராமங்களில் இருந்து நேற்று முன்தினம் திங்கட் கிழமை) ஆயிரக்கணக்கானோர் வெளியேற்றப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சிரியாவில் பணியாற்றும் ஐ.நா. அதிகாரி அலுவலகம் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் இவ்வாறு தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கைகளில், 'குளிர் காலம் ஆரம்பமாகவுள்ளதால் அலெப்போவில் உள்ள மக்களை வெளியேற்றும் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டப்படுகின்றது. இதற்காக பல பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக ஷியா முஸ்லிம்கள் வசிக்கும் al-Foua மற்றும் Kefraya ஆகிய கிராமங்களில் இருந்தும் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை al-Foua மற்றும் Kefraya ஆகிய கிராமங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் ஜிப்ரின் தற்காலிக தங்குமிடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களை சிரிய அரசாங்கம் மற்றும் யுனிசெப் அதிகாரிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

குறித்த தங்குமிடத்தை வந்தடைந்தவர்களுக்கு உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படுவதுடன், மருத்துவ உதவிகளும் வழங்கப்படுவதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை அலெப்போவில் இடம்பெறும் மக்கள் வெளியேற்றத்தினை நடுநிலையாகக் கண்காணிக்க ஐ.நா கண்காணிப்பாளர்களை சிரியாவிற்கு அனுப்ப, பாதுகாப்புச் சபையில் நேற்று முன்தினம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-3-10)

# பேர்லினில் கிறிஸ்மஸ் சந்தைக்குள் திடீரென புகுந்தது பாரிய லொறி!

## 12 பேர் பலி! 50 பேர் படுகாயம்

(பேர்லின்)

ஜேர்மன் தலைநகர் பேர்லினில் கிறிஸ்மஸ் சந்தை ஒன்றில் வேகமாக வந்த லொறி ஒன்று மோதியதால் பாரிய விபத்து இடம்பெற்றுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த பாரிய விபத்தில் 12 பேர் உயிரிழந்ததாகவும் 50க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், குறித்த பகுதியில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தீவிரவாத தாக்குதலாக இருக்கலாம் என அந்நாட்டு பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். அத்துடன், பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் உடல் நசுங்கி பலியானதாகவும், மற்றொருவன் கைது செய்யப்பட்டதாகவும் முதற் கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் பேர்லின் நகரில் வசிப்பவர்கள் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (இ-3)

## கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரம குருபீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



வாடா மலராக வலம் வந்து
பதினேழு ஆண்டுகள் பூர்த்தியாகி
பதினெட்டாம் ஆண்டில் காலடி
வைக்கும் வலம்புரியே!
இன்று போல் என்றும்
நடுநிலை தவறாது சைவம், தமிழ் வளர்த்து
நன்னெறி காக்கும் நாளிதழாய்த் திகழ
தில்லைக்கூத்தனின் திருவருள் என்றும் கிடைப்பதாக
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள்,
மகாதேவ ஆச்சிரமம்,
ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி.

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### கடவுளை அடைய மூன்று வழிகள்



✦ வாழ்வு என்னும் கடலில் வேகமாக முன்னேற விரும்பினால் செய்ய வேண்டியது ஒன்றே. உங்கள் மனப் படகின் பாயை விரித்து விடுங்கள். ஆண்டவனுடைய அருட்காற்று இரவு பகலாக உங்களின் தலைக்கு மேல் வீசும்.

✦ இறைவனிடம் தன் மனதை ஒப்படைத்தவன் தீய எண்ணம் படைத்தவர்களுடன் இருந்தாலும் எந்தவிதமான தீமையையும் அடைய மாட்டான்.

✦ மனிதன் இறைவனை எங்கு தேடியும் காணாமல் அலைகிறான். அதை அறிந்து கொள்ளாது அவன் உலகெல்லாம் தேடி அலைந்து திரிகிறான். அவன் தேடும் இறைவன் அவன் உள்ளத்திலேயே வீற்றிருப்பதை உணராமல் தவிக்கிறான்.

✦ வேக வைத்த நெல்லை பூமியில் விதைத்தால் அது முளைப்பதில்லை. அதுபோல, உண்மை ஞானம் என்னும் நெருப்பினில் புடமிட்ட உயிர்கள் மீண்டும் மண்ணுலகம் வருவதில்லை. ஆனால், அஞ்ஞானம் கொண்டு அலையும் உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறவி எடுக்கின்றன.

✦ இல்லறத்தில் இருப்போர் உயிர்களிடத்தில் அன்பு, எளியவர்களுக்குச் சேவை, கடவுளின் திருநாமத்தில் பக்தி இவற்றை தவறாது பின்பற்றி வந்தாலே கடவுளை அடைய முடியும்.

✦ தன் உண்மைத் தன்மையை மறைத்து வெறும் வேஷம் போடுபவனும், எதிலும் தன்னை மட்டுமே முன் னிறுத்தி சுயலாப நோக்கத்தோடு செயல் புரிபவனும், பிறருக்கு அநீதி இழைப்பவனும், ஒழுக்கநெறி தவறுபவனும் என்றைக்கும் கடவுளை அடைய முடியாது.

# 2017 ஆம் ஆண்டு 10 ஆவது ஐ.பி.எல்



10-வது ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் லீக் தொடர் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் தொடங்குகிறது. இதற்காக அணி நிர்வாகம் வீரர்களை தேர்வு செய்வதில் கவனம் செலுத்தி வருகிறது.

இந்த வருடம் தாங்கள் வைத்திருந்த வீரர்களை விடுவிக்க, அடுத்த அணியில் இருந்து வீரர்களை மாற்றிக் கொள்ள மற்றும் வீரர்களை தக்கவைக்க கடந்த 15 ஆம் திகதி (டிசெம்பர்) கடைசி திகதியாக நிர்ணயிக்கப்பட்டது.

அதன்படி தற்போது ஒவ்வொரு அணியும் ரிலீஸ் செய்துள்ள வீரர்கள் பட்டியல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி ரைசிங் புனே சுப்பர் ஜெயன்ட்ஸ் அணி 11 வீரர்களை ரிலீஸ் செய்துள்ளது. அவர்கள் விபரம்:- 1. கெவின் பீட்டர்சன், 2. இசாந்த் சர்மா, 3. இர்பான் பதான், 4. திசாரா பெரேரா, 5. ஆர்.பி. சிங், 6. ஸ்காட்போலந்து, 7. மகேஷ் அஸ்வின், 8. பீட்டர் ஹேண்ட்ஸ்காம்ப், 9. சவுரப் திவாரி, 10. அல்பி மோர்கல், 11. ஜார்ஜ் பெய்லி.

தக்க வைத்துள்ள வீரர்கள் விபரம்: 1. டோனி, 2. ரகானே. 3. அஸ்வின், 4. ஸ்டீவன் ஸ்மித், 5. டு பிளிசிஸ், 6. மிட்செல் மார்ஷ், 7. அசோக் டிண்டா, 8. அங்குஷ் பெய்ன்ஸ், 9. ராஜட் பாடியா, 10. அங்கித் சர்மா, 11. ஈஸ்வர் பாணடே, 12. ஆடம் சம்பா, 13. ஜாஸ்கரன் சிங், 14. பாபா அபராஜித், 15. தீபக் சாகர், 16. உஸ்மான் கவாஜா.

குஜராத் லயன்ஸ் அணி 8 வீரர்களை ரிலீஸ் செய்துள்ளது. அவர்கள் விபரம் வருமாறு:- 1. டெல் ஸ்டெயின், 2. பராஸ் டோக்ரா, 3. எக்லாவ்யா திவேதி, 4. சரப்ஜித் லட்டா, 5. பிரவீன் தாம்பே, 6. உமாங் ஷர்மா, 7. அமித் மிஸ்ரா (உத்தர பிரதேச வேகப்பந்து வீச்சாளர்), 8. அக்ஷ்தீப் நாத்.

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி ரிலீஸ் செய்துள்ள 4 வீரர்கள் விபரம்:- 1. மிட்செல் ஜான்சன், 2. ரிஷி தவான், 3. கைல் அபோட், 4. பர்ஹான் பெஹார்டியன்.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி ரிலீஸ் செய்துள்ள 9 வீரர்கள் விபரம்:- 1. மோர்னே மோர்கல், 2. பிராட் ஹாக், 3. ஜேசன் ஹோல்டர், 4. கொலின் முன்றோ, 5. ஜான் ஹாஸ்டிங்ஸ், 6. ஜெய்தேவ் உனத்கட், 7. ஆர். சதீஷ், 8. மனன் ஷர்மா, 9. ஷான் டைட்.

மும்பை இந்தியன்ஸ் அணி ரிலீஸ் செய்துள்ள 8 வீரர்கள் விபரம்:- 1. கோரி ஆண்டர்சன், 2. மார்சன்ட் டி லங்கே, 3. உன்முக் சந்த், 4. அக்சேய் வகாரே, 5. நது சிங், 6. கிஷோர் கமாத், 7. மார்ட்டின் கப்தில், 8. ஜெரோம் டெய்லர்.

டெல்லி டேர்டெவில்ஸ் அணி ரிலீஸ் செய்துள்ள 7 வீரர்கள் விபரம்:- 1. நாதன் கவுல்டர்-நைல், 2. இம்ரான் தாஹிர், 3. ஜோயல் பாரிஸ், 4. பவன் நெஹி, 5. பவன் சுயல், 6. அகில் ஹெர்வாத்கர், 7. மகிபால் லாம்ரோர்.

ரோயல் சலஞ்சர்ஸ் அணி ரிலீஸ் செய்துள்ள 10 வீரர்கள் விபரம்:- 1. வருண் ஆரோன், 2. அபு நெசிம், 3. டேவிட் வீஸ், 4. கேன்ரிச்சர்ட்சன், 5. விக்ரம்ஜீத் மாலிக், 6. பிரவீன் டபே, 7. அக்சேய் கார்னேவர், 8. விகாஸ் டோகாஸ், 9. பர்வேஸ் ரசூல், 10. கிறிஸ் ஜோர்டான்.சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி ரிலீஸ் செய்துள்ள வீரர்கள் விபரம்:- 1. கரண் சர்மா, 2. ஆஷிஷ் ரெட்டி, 3. மோர்கன், 4. ட்ரென்ட் போல்ட், 5. டி.சுமன், 6. ஆதித்யா டரே (க)

## சென்மேரிஸ்-யங்கென்றிஸ் சமநிலையில் முடிவுற்றது

குறிஞ்சிக்குமரன் விளையாட்டு கழகம் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் நாவாந்துறை சென் மேரிஸ்சை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் அணிகள் மோதியது.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற போட்டி 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவுற்றது. இரண்டாவது பாதியாட்டம் மழைக்கு மத்தியிலும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

சென்மேரிஸ் அணி சார்பில் ஜெக்சன் ஒரு கோலை போட்டார்.

இவ்விரு அணிகளும் ஞானமுருகன் விளையாட்டு கழகம் நடத்திக் கொண்டிருக்கும் போட்டியில் காலிறுதி ஆட்டத்தில் பலப்பரீட்சை நடத்தவுள்ளது குறிப்பிடத்தக்கது. (கு)

## இன்றைய போட்டிகள்

அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் கொண்ட மனோகரா சவால் கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் லீக் ஆட்டத்தில் வல்லை ஆதிசக்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்ன்ஸ் விளையாட்டுக் கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக த்தை எதிர்த்து நாவாந்துறை சென் .நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## தபேந்திரம் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

குரும்பைசுட்டி உதயசூரியன்விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் தபேந்திரம் ஞாபகார்த்தமாக மின்னொளியிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி வரும் சனி மற்றும் ஞாயிறு 24,25/12/2016 திகதிகளில் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்குபற்றும் கழகங்கள் அன்றைய தினம் இரவு 7 மணியளவில் கழக மைதானத்திற்கு சமுகமளித்து போட்டிகளில் கலந்து கொள்ள முடியும் என போட்டி ஏற்பாட்டு குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தொடர்புகளுக்கு ஜனார்த்தனன் 077 821 7853, சிவறூபன் 077 226 7562, கார்த்தீபன் 077 712 8754. (கு)

## அராலி மாவத்தை உதைபந்தாட்ட முடிவுகள்

அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முதலாவது போட்டியில்ஜென்ஸ்ரார்அணியை எதிர்த்து சென்.பீற்றர்ஸ் அணி மோதியது.

பரபரப்பாக நடைபெற்ற இப் போட்டியில் 2:0 என்ற கோல் கணக்கில் சென். பீற்றர்ஸ் அணி வெற்றி பெற்றது.

நடைபெற்ற இரண்டாவது போட்டியில் குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து றெட்ரேஞ்சர்ஸ் அணி மோதி யது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டி 1:1 என்ற ரீதியில் சமநிலையில் முடிவுற்றது.வெற்றியை தீர்மானிக்கும் சமநிலை தவிர்ப்பு உதையில் குறிஞ்சிக் குமரன் அணியை றெட்ரேஞ்சர்ஸ்5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (கு)



இலங்கை கராத்தே சம்மேளத்தினால் நடத்தப்படும் 2016 ஆம் ஆண்டுக்கான கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் பிரதம ஆசிரியர்களுக்கான போட்டியில் (Chief Instructor 40-45 years)பிரிவிற்கான காட்டா போட்டியில் சென். சே. எஸ். விஜயராஜ் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

## கொக்குவில் காமாட்சியை வீழ்த்தியது ஆனைக்கோட்டை யூனியன் வி.கழகம்



உரும்பிராய் மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்திய கிரிக்கெட் போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் மூன்றாம் இடத்தினை தனதாக்கிக் கொண்டது.

உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் இடத்திற்கான போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொக்குவில் காமாட்சி விளையாட்டுக்கழகம் பலப்பரீட்சை நடத்தியது.

அணிக்கு 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் காமாட்சி விளையாட்டுக்கழகம் 5 ஓவர்களில் 4 விக்கெட்டினை இழந்து 27 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஜெயரூபன் 12 ஓட்டத்தினையும் சிந்து 7 ஓட்டத்தினையும் பெற்றனர்.பந்து வீச்சில் மதுஷன் 2 விக்கெட்டினை கைப்பற்றினார்.

வெற்றி இலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் 4.4 ஓவர்களில் 2விக்கெட்டினை இழந்து வெற்றி இலக்கினை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் பவின் 17 ஓட்டத்தினையும் பந்துவீச்சில் மோகனதீபன்,அருண் தலா 01 விக்கெட்டினை கைப்பற்றினர். (கு)

## புனர்வாழ்வுக்கு...

எனவே ஒதுக்கீடு செய்யப்படாது உள்ள சிறியளவிலான நிதியிலிருந்து குறிப்பிட்ட அளவு நிதியினை இத்துறைக்கு ஒதுக்கீடு செய்து 2017ஆம் ஆண்டு இத்துறையின் கீழ் முக்கியமான திட்டங்களை நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளோம்.

பெண்களுக்கான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல், தொழிற் பயிற்சிகள் வழங்குதல், பெண்களின் இயல்தகைமைகளை முன்னேற்றக்கூடிய பயிற்சிநெறிகளை ஒழுங்குபடுத்தி வழங்குதல் போன்ற செயற்றிட்டங்களை முன்னெடுக்க உத்தேசித்துள்ளோம், சிறியளவிலான ஆடை உற்பத்தி நிலையங்களை நிறுவி அதன் மூலம் பெண்களுக்கான தொழில்வாய்ப்பினை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவை எல்லாவற்றையும் நடைமுறைப்படுத்துவதற்கு நிதி ஒதுக்கீடு அதிகமாக தேவைப்படுகின்றது. இந்நிதித் தேவையினை ஒதுக்கீடு செய்யப்படாது உள்ள சிறியளவு நிதியிலிருந்து பெற்றுக் கொடுக்க எண்ணியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-4)

## சர்வதேச...

யில் இந்த பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை இன்று முற்பகல் 10 மணிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரில் கையளிக்கப்படவுள்ளது. இந்தத் தகவலை நல்லிணக்கப் பொறிமுறை குறித்த செயலணியின் பொதுச் செயலாளரும் மக்கள் கருத்தறியும் குழுவின் பணிப்பாளருமான பாக்கியசோதி சரவணமுத்து உறுதிப்படுத்தினார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள், போர்க்குற்ற விசாரணை தொடர்பில் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்றும், சர்வதேச விசாரணையே நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தனர். செயலணியின் அமர்வுகளில் மக்கள் முன்வைத்த கருத்துக்களைத் தொகுத்து அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதில் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

போர்க்குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு சர்வதேச விசாரணையே தேவை என்ற பரிந்துரை செயலணியின் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளது (இ-11)

## 15,510 கிலோ...

குடும்பங்களை சேர்ந்த 295 பேருக்கு 8 ஆயிரத்து 850 கிலோ கிராம் அரிசியும் , ஊறணி நலன்புரி முகாமில் உள்ள 21 குடும்பங்களை சேர்ந்த 126 பேருக்கு 3 ஆயிரத்து 780 கிலோ கிராம் அரிசியும், பிள்ளையார் நலன்புரி முகாமில் உள்ள 9 குடும்பங்களை சேர்ந்த 45 பேருக்கு ஆயிரத்து 350 கிலோ கிராம் அரிசியும், கும்பளை நலன்புரி முகாமில் உள்ள 21 குடும்பங்களை சேர்ந்த 51 பேருக்கு ஆயிரத்து 530 கிலோ கிராம் அரிசியுமாக ஒவ்வொருவருக்கும் தலா 30 கிலோ கிராம் வீதம் அரிசி வழங்கப்பட்டுள்ளது. மொத்தமாக 159 குடும்பங்களை சேர்ந்த 517 பேருக்கு 15 ஆயிரத்து 510 கிலோ கிராம் அரிசி வழங்கப்பட்டுள்ளது. (இ-9)

## நெல்சிப் ஊழல்...

நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் 70 ஆவது அமர்வு நேற்றைய தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இந்த அமர்வின் போது வடக்கு மாகாண பிரதம செயலர் அலுவலகத்தின் செலவின தலைப்புக்கள் மீதான விவாதம் நடைபெற்றது. இதன் போதே மேற்படி விடயம் கேள்விக்குட்படுத்தப்பட்டு உறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

முன்னதாக கருத்து தெரிவித்த உறுப்பினர் சர்வேஸ்வரன், வடக்கு மாகாண சபையினால் நெல்சிப் திட்டத்தில் நடைபெற்ற ஊழல் தொடர்பில் விசாரணை செய்வதற்கென விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு, அது தொடர்பில் விசாரணையும் நடைபெற்று, விசாரணை தற்போது முடிவுற்றுள்ளது. ஆனால் அந்த விசாரணை அறிக்கை இன்று வரை மாகாண சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

இதனால் அந்த அறிக்கையில் என்ன உள்ளது என்பது கூட எமக்கு தெரியவில்லை. மக்கள் எம்மிடம் அது தொடர்பில் கேள்வி கேட்டால் என்ன சொல்வது என்று தெரியாத நிலையில் தான் நாம் உள்ளோம். ஆகையால் இது தொடர்பில் உரிய அறிவித்தலை வடக்கு மாகாண சபை எமக்கு வழங்க வேண்டும்.

மேலும் விசாரணைக்குழுவினால் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட எந்த ஒருவர் மீதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மாறாக ஊழலில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இன்னும் பதவியிலிருந்து நீக்கப்படாமல் அல்லது தண்டனை வழங்கப்படாமல் தற்போது பதவி உயர்வுகள் பெற்றுள்ளனர். இதனைவிட அரசிடம் புலமைப்பரிசில் பெற்று வெளிநாடுகளுக்கு ஊழல் புரிந்தோர் தப்பி சென்றுள்ளனர். இவ்வாறான நிலையில் தான் வடக்கு மாகாண சபையின் அதிகாரம் இருக்கின்றது எனக் கூறி நடவடிக்கை எடுக்குமாறு கோரினார்.

இதன்போது கருத்து தெரிவித்த உறுப்பினர் சிவாஜிலிங்கம், ஊழலில் சம்பந்தப்பட்டவர்களாக இனங்காணப்பட்டவர்கள் வெளிநாடு செல்வதற்கு பிரதம செயலாளரினால் எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது? என சபையில் கேள்வி எழுப்பினார். எனினும் வெளிநாடு சென்ற குறித்த நபர் பிரதம செயலரிடம் அனுமதி பெறாமல் தான் வெளிநாடு சென்றார் என அவைத்தலைவர் இதன்போது தெளிவுபடுத்தினார். எனினும் பிரதம செயலாளரின் கீழ் பணியாற்றும் அதிகாரி ஒருவர் வெளிநாடு செல்ல வேண்டும் என்றால் அவரிடம் அனுமதி பெறப்பட வேண்டும் என சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டியிருந்தார்.

மேலும் குறித்த விடயம் தொடர்பிலான விசாரணை நடைபெற்று கொண்டிருப்பதனால் அதனை சபையில் கதைப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாது என உறுப்பினர்களான ஆனல்ட், அஸ்மின் ஆகியோர் கூறினார்கள். இதனை ஏற்றுக்கொண்ட அவைத்தலைவர் குறித்த ஊழல் தொடர்பில் பாரிய நிதி மோசடி ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டு உள்ளதாக சுட்டிக்காட்டி குறித்த விடயத்தை முடிவுக்கு கொண்டுவந்தார். (இ-4)

## மயிலிட்டி...

அப்பகுதியை விடுவிப்பதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் இணக்கம் தெரிவித்துள்ளனர் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்றைய தினம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இதில் வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்றம் நடைபெறும் பொழுது அந்தந்த கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு மீள் குடியமர்த்தப்பட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எமக்கு தெரியாது என நினைப்பவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் நாம் ஒன்றும் தெரியாமல் இங்கு இருக்கிறோம் என நினைப்பவர்கள் எமது காணிகள் தொடர்பில் 100 தடவை பேசினால் நான் ஆயிரம் தடவை பேசுவேன்.அதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் அவ்வாறான நடவடிக்கைகளில் தான் நாம் ஈடுபட்டு வருகிறோம்.

இராணுவத்தினரின் தேவைக்கு காணிகள் அபகரிக்கப்பட்டு அதற்கு பதிலாக நட்டஈடு கொடுப்பதாக அரசால் அறிவிக்கப்பட்டது. அது எம்மால் நிறுத்தப்பட்டது. விடுவிக்கப்படாத பல பகுதிகளை எமது முயற்சியால் விடுவித்துள்ளளோம்.முரணான வகையில் உருவாக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் பலவற்றை நிறுத்தியுள்ளோம். இவ்வாறு பல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறோம்.

மயிலிட்டி துறைமுகமும் அதனை அண்டிய பிரதேசமும் விடுவித்தால் மாத்திரமே மீள்குடியேற்றம் நிறைவு பெறும் என ஆணித்தரமாக ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு கூறியிருக்கிறேன். அதற்கு அவர்கள் உடன்பட்டுள்ளார்கள். எமது பகுதியில் உள்ள ஒவ்வொரு அங்குலமும் விடும்வரைக்கும் எங்களுடைய முயற்சிகளை எடுத்துக்கொண்டிருப்போம்.

அதேபோன்று பலாலி விமானத்தளம் தொடர்பாக பிரதமரிடமும் இந்திய அரசாங்கத்திடமும் பேசியிருக்கிறோம் அதனை அண்டிய பகுதிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

எங்களுடைய பிரதேசத்தில் முகாமில் இருப்பவர்கள் மட்டும் நிலம் அல்லாமல் இருப்பவர்கள் அல்ல. வெளி இடங்களில் தங்கியுள்ள ஏனையவர்களும் நிலம் அல்லாமல் உள்ளார்கள்.

காணிகள் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி பிரதமருடனான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறும்.அதில் சாதகமான தீர்வு வரும் என எதிர்பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## ஜனாதிபதியின்...

ஆம் திகதிக்கு பின்னர் உயிருடன் இருக்க மாட்டார் என ஜோதிடர் ஒருவர் ஆரூடம் கூறியுள்ள நிலையில், இதில் சதித் திட்டம் ஏதும் இருக்கலாம் என அரசாங்கம் சந்தேகம் வெளியிட்டுள்ளது. ஊடகத்துறை அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சின் செயலாளர் நிமால் போபகே, குறித்த ஆரூட கணிப்பு உண்மைக்கு புறம்பானது என தெரிவித்தார். (இ-11)

## திரைமறைவில்...

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது.

இதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணி ஆணையாளர் திணைக்களத்தினூடாக எமது அரச காணிகள் தொடர்பில் நாம் ஒரு வரையறுக்கப்பட்ட அளவிலேயே எமது கட்டுப்பாட்டை பிரயோகிக்க முடிகிறது. பிரதேச மட்டத்தில் எமது மாகாண அலுவலர்கள் பிரதேச செயலாளர்களின் கீழ் பணி புரிந்து வருகின்றனர்.

ஆயினும் பல தேவைகளின் பொருட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் எம்மால் மக்கள் நலன் கருதும் வகையிலேயே கையாளப்படுகின்றன. எனினும் காணி தொடர்பான விடயங்களை கையாளுதல், சவால் மிகுந்த ஒன்றாகவே காணப்படுகின்றது. அரச காணிகள் மட்டுமல்லாமல் , பெருமளவிலான தனியார் காணிகளும், படையினரின் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டு அவற்றை விடுவித்துக் கொள்ள முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

அத்துடன் அரசியல் தலையீடுகளினால் எமது கவனத்திற்கு கொண்டு வரப்படாமல் பெருமளவிலான அரசகாணிகள் அபகரிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. இது ஒரு ஆரோக்கியமான செயலாகக் காணப்படவில்லை. இவ்விடயம் சம்பந்தமாக நாம் மத்திய அரசிற்கு அடிக்கடி அழுத்தம் கொடுக்க வேண்டியுள்ளது. ஓங்கிக் குரல் கொடுப்பதன் மூலம் முன்னிலைப்படுத்த வேண்டியுள்ளது. எனவே இதுபற்றி சகலரினதும் கவனத்திற்கு கொண்டு வருதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். இதற்கு சகலரினதும் ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## பெண்ணை...

தங்கவேல் பரமேஸ்வரி (வயது-62) என்ற பெண்ணை வெட்டிக்கொலை செய்துவிட்டு அவர் அணிந்திருந்த தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸ பொறுப்பதிகாரி சமன் ஜெயலத்தின் வழிநடத்தலில் குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி ஆனர் மற்றும் ரமணன் ஆகியோர் மேற்கொண்ட புலன் விசாரணையின் அடிப்படையில் கொலை நடந்த வீட்டிற்கு அருகாமையில் இருந்து கொலைக்கு பயன்படுத்திய கத்தியை மீட்ட பொலிஸார் அதன் அடிப்படையில் மோப்ப நாயின் உதவியுடன் அதே பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரைக் கைது செய்துள்ளனர். இதேவேளை நேற்று காலை சம்பவ இடத்திற்கு சென்ற பருத்தித்துறை பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் விசாரணைகளை மேற்கொண்டதனடிப்படையில் யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியினால் பிரேத பரிசோதனை மேற்கொண்டதில் ஆழமான வெட்டுக்காயத்தால் குருதிப் பெருக்கு ஏற்பட்டு மரணம் சம்பவித்ததாக தெரிவிக்கப்பட்டது. (இ -30,60)

## ஊழல், மோசடி...

துவப்படுத்திய அரசாங்கமும் அவர்களது தலைவர்களும் மக்களால் வெறுக்கப்பட்டனர் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி பதவிக்கு அடுத்தாக கூடுதல் நிறைவேற்று அதிகாரமுடைய உள்ளூராட்சி நிறுவன தலைவர்கள் எப்போதும் தமது அதிகாரத்தை மக்கள் நலனுக்காகவே பயன்படுத்த வேண்டுமென நேற்று பிற்பகல் தாமரைத் தடாக அரங்கில் நடைபெற்ற "சுவர்ண நகரம்" விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது ஜனாதிபதி மைத்திரிபால மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமது அதிகாரங்களை மக்கள் நலனுக்காக பாவிக்கும் அனைத்து அரசியல்வாதிகளும் மக்களால் பாராட்டப்படுவதாகவும் அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களும் நல்லாட்சியின் மையங்களாக மாற வேண்டுமெனவும் தெரிவித்தார்.

மக்களது பிரச்சினைகளை தேடிச்சென்று அவற்றுக்கு தீர்வு வழங்குவது அரசியல்வாதிகளினதும் அரச அலுவலர்களினதும் பொறுப்பாகுமென தெரிவித்தார். (இ-11)

## இணைந்து...

தேவையில்லை. வடக்கு மாகாண சபை நினைத்தால் ஒரு மணித்தியாலத்திற்குள் ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். 1991ஆம் ஆண்டு நடைபெற்ற கசப்பான சம்பவத்தை முஸ்லிம் மக்கள் மறந்து ஒற்றுமையுடன் வாழ்வதற்கான சூழலையும் வடக்கு மாகாண சபையால் ஏற்படுத்த முடியும் என தெரிவித்துள்ள, உறுப்பினர் ஜவாஹிர், வடக்கில் இராணுவம் மேற்கொள்ளும் நில அபகரிப்பிற்கு எதிராக முஸ்லிம்களும் தமிழர்களோடு இணைந்து போராடத் தயார் எனவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையில் எழுபதாவது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இதன போது முதலமைச்சர் அமைச்சின் வரவு செலவு திட்டத்தின் மீதான விவாதம் நடை பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் அவர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-4)

## காணி, பொலிஸ்...

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வீதிகள் குப்பை நிறைந்தவையாக இருக்கின்றது. உள்ளூராட்சி மன்றங்கள் இவை தொடர்பில் அக்கறை எடுப்பதில்லை. சட்டம் ஒழுங்கு முதலமைச்சருக்கு உரியது. பொலிஸாருக்கு கட்டளை வழங்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு உண்டு. அதனை அவர்கள் ஏற்கின்றார்களா? இல்லையா? என்பதைப் பின்னர் பார்ப்போம். பல விடயங்களில் பொலிஸாரை நெறிப்படுத்த வேண்டியுள்ளது. காணி அதிகாரம் எங்களுக்கு இல்லைத்தான்.

ஆனால் மேல் மாகாண சபை காணி நியதிச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளது. அவர்கள் அதனை நடைமுறைப்படுத்த மகிந்த அரசு அனுமதிக்கவில்லை இருப்பினும் அவர்கள் செய்தது போன்று நாங்களும் செய்யலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## சஷி வெல்கம...

குற்றப் புலனாய்வு பிரிவினால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

போக்குவரத்து சபையின் தலைவராக இருந்த போது இடம்பெற்ற 135 மில்லியன் நிதி மோசடி தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை இம் மாதம் 22ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-11)

## 7 இந்திய...

கைது செய்யப்பட்ட மீனவர்களிடமிருந்து 2 இழுவைப் படகுகள் மீட்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் படகுகள், மேலதிக நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாண கடற்றொழில் உதவிப் பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். (இ-11)

## ஆட்சி மாற்றம்...

ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அவர், நாட்டின் தேசிய வளங்கள் விற்பனை செய்யப்படுவதை கூட்டு எதிரணி கடுமையாக எதிர்க்கிறது.

சீனாவுக்கு 15 ஆயிரம் ஏக்கர் காணிகளை வழங்கும் நகர்வு பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தும்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு 750 ஏக்கர் காணிகளை வழங்கும் முன்னைய மூலத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (இ-11)

## 'தூய தமிழ்'...

எனவே அவற்றை தூய தமிழில் அமையுமாறு மும்மொழிகளிலும் மாற்றுமாறு கோரி மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யும் தீர்மானம் ஒன்று வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் 70 ஆவது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது. இதன் போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (இ-4)

## விபத்தில் சிக்கி...

சின்ன சாளம்பன் பகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞன் ஒருவர் பலியாகியுள்ளார். நேற்று முன்தினம் இரவு A35 பிரதானவீதியில் புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் உள்ள பாலம் ஒன்றிலேயே இவர் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதில் படுகாயமடைந்த குறித்த நபர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். ஒட்டுசுட்டான் சின்னசாளம்பன் பகுதியைச் சேர்ந்த பொன்னையா சத்தியஜெயன (வயது24) என்பவரே உயிரிழந்தவராவார். (இ -281)

# விஸ்டம்
## தொழில் நுட்பக் கல்லூரி
இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

## 2019 A/L - தொழில் நுட்பப் பிரிவு

| | |
|---|---|
| பொறியியற் தொழினுட்பம் | திரு. K. ரவிக்குமார், திரு. P.சண்முகநாதன், திரு. R.நிருஜன், திரு. P.கிருபாகரன், திரு. R.சிவரூபன், திரு. P.கஜனன் |
| தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் | திரு. A.அரவிந்தன், திரு. P.விமலநாதன், திரு. S.மயூரதாசன், திரு. R.நிருஜன், திரு. R.S.மயூரன், திரு. T.ஆயுஷன் |
| உயிர்முறைமைகள் தொழினுட்பம் | திரு. M.விஷ்ணுதேவன், திரு. P.நிரோஜன் |
| தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் | திரு. S.மயூரதாசன், திரு. T.ஆயுஷன் |
| விவசாய விஞ்ஞானம் | திரு. M.விஷ்ணுதேவன், திரு. R.மௌலி |
| புவியியல் | திரு. S.ஸ்ரீகிருஷ்ணா, திரு. T.கௌரிரிநீகன் |
| சித்திரம் | திரு. A.ஜெயந்தன் |
| ஊடகக்கல்வி | திரு. S.கோணேசலிங்கம், திரு. S.வெல்முத்தன் |
| இலகு கணிதம் | திரு. S.ரவிராம் |
| வணிகக்கல்வி | திரு. M.ரூபன் |
| கணக்கீடு | திரு. S.சதீஸ்குமார் |
| பொருளியல் | திரு. S.சுபேசன் |

2015 A/L தொழில்நுட்பப் பிரிவு பெறுபேறுகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாவட்ட, தேசிய நிலைகளைச் சாதனைகளை நிகழ்த்திக் காட்டிய பெருமையுடன்

### ஆரம்பம்
# 24.12.2016 காலை 8.30

- தனித்தனியான ஆய்வுகூட வசதிகள்
- தனித்தனியான வேலைத்தள வசதிகள்
- மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தனியான கவனிப்பு
- தேசியப் பரீட்சை எதிர்கொள்ளத்தக்க வகையில் சிறந்த செய்முறைப் பயிற்சிகள்

(C-6812)



# V2 TRAVELS
குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.
- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா(UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.

தொடர்புகளுக்கு: 0768226236
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(C-6756)



## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
பண்டிகைக் காலத்தில் உங்கள் உறவுகளுக்கு பெறுமதியான பொருட்களையும் கடிதங்களையும் விரைவாகவும் குறைந்த விலையிலும் அனுப்பிட
021 221 5656
070 330 5500
அண்ணா & கோ (C-6684)
976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்



## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

(C-6779)



## வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## O/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்
13 வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

*Dip.in Microsoft office- Word 2016, Excel 2016, Access 2016, PowerPoint 2016, Publisher 2016
*Dip.in DTP - Photoshop CC, CorelDraw X7, PageMaker 7.0, InDesign CC, Illustrator CC
*Dip.in Web Design, Dip.in Graphic Design
*Certificate in Internet & E-mail
*சிறுவர்களிற்கான கற்கைநெறி
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.

## சிங்கள Typing இலவசம்
கணினி இல்லாதவர்களிற்கு எனது Laptop மூலமாக கற்பிக்கப்படும்.
ஆசிரியர்:KRC TP:0779672038



## பூவரசம் கதியால் தேவை
வேலிக்கு இடக்கூடிய பூவரசம் கதியால் தேவை
தொடர்பு :- 0702202206



## விலைகள் குறைக்கப்பட்டுள்ளன
# PROMOTIONAL T-SHIRT
EXPORT Quality

நீங்கள் விரும்பிய டிசைன்களில் T-SHIRT செய்து பெற்றுக் கொள்ளுங்கள்
- Any Material Vetlook, Crocodile Etc.
- Front and Back Embroidery / Print
- Upto 3 Colour T-Shirt
- Single Colour or 4 Colour Embroidery / Print

FOR T-SHIRT ISLAND WIDE FREE DELIVERY

School Uniforms | Corporate Business Uniforms | Sports Uniforms
Safety Uniforms | Caps & Badges | Personalised Gifts | Flags & Bags

# MUG PRINTING
100% High Quality Durable Mugs

Mug Print
350/- 100இற்கு மேற்பட்ட எண்ணிக்கை
450/- Mug 01இற்கு

/Tiles /Rocks /Plates
/Crystal/Acrylic Awards /Ballpens

# ID CARD PRINT
▶ID Cards ▶Employee Cards
▶Student Cards ▶Bar Code Cards Etc.

4 Colour ID CARD Only Rs100
50இற்கு மேற்பட்ட எண்ணிக்கை

ANDRA PRINTERS
உங்கள் வேலை திருப்திகரமானதாக அமைய நாங்கள் உத்தரவாதமளிக்கின்றோம்
அச்சுப்பதிப்பின் தனித்துவமான நிறுவனம்
379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 221 7279 / 021 222 8929 / 077 7481696

(C-6803)



# KINGS ELECTRONICS(PVT) LTD
## கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்

X-mas விசேட விலைக் கழிவு 10-35% OFF

அழகிய, அதிநவீன தரத்தோடு மின் உபகரணங்கள், தளபாடங்கள், மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்

### LED TV'S

| | |
|---|---|
| Samsung 32" | -31900 |
| Hisence 32" | -24900 |
| Sony 40" | -59999 |
| Hisence 24" | -17900 |
| Tcl 32" | -21900 |
| Panasonic 32" | -31500 |

WARRANTY 3 YEARS

SAMSUNG R19 REFRIGERATOR
34900/=
TEN YEARS WARRANTY

Sony 5.1 Home Theater
RS 20,900/=
ONE YEAR WARRANTY

INNOVEX WASHING MACHINE
FIVE YEARS WARRANTY
34500/=

Furnitures
Toys
Electronics
Baby Care
10% OFF

OPEN 08.00AM TO 08.00PM 365 DAYS

www.mykings.lk
021-4546699
Facebook/kingsjaffna
12A, Point Petro Road, Jaffna
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)

(C-6813)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.